## சாண்டில்யன்

CPL 694995

# நீலவல்லி



வானதி பதிப்பகம்

# நீலவல்லி

## சாண்டில்யன்

29 JUL 201

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை – 17.

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : ஜூலை, | 1982 |
| ஏழாம் பதிப்பு | : மே, | 2004 |
| எட்டாம் பதிப்பு | : ஜூலை, | 2007 |
| ஒன்பதாம் பதிப்பு | : நவம்பர், | 2009 |

**திருநாவுக்கரசு தயாரிப்பு**

R
694995
894.8113
SAN;1

**விலை : ரூ.36.00**

| | |
|---|---|
| TITLE | : **NEELAVALLI** |
| AUTHOR | : **SANDILYAN** |
| LANGUAGE | : TAMIL |
| SUBJECT | : Historical Novel |
| EDITION | : First Edition, July, 1982 |
| | Nineth Edition, November, 2009 |
| PAGES | : 128 |
| PUBLISHED BY | : **VANATHI PATHIPPAKAM** |
| | 23, Deenadayalu Street, |
| | Thyagaraya Nagar, Chennai-17. |
| | ☎ 24342810 / 24310769 |
| | E-mail : vanathipathippakam@vsnl.net |
| | Website : www.vanathi.in |
| PRICE | : **Rs.36.00** |

Laser Typeset at :
SPM Graphics, Chennai - 600 017.
Printed at : Novena Offset Printing Co., Chennai - 5 - 28446891, 28446166

Connemara (State ...)
29 JUL ...
Chennai

# முன்னுரை

**ஸ்ரீ**மாறன் ஸ்ரீவல்லபனுடைய மூத்த மகனான வரகுணவர்மன் தென்பாண்டி நாட்டில் முத்துக் களவு அதிகமாக ஏற்படுவதை விசாரிக்கவும், உக்கிரன் என்பான் கரகிரி அல்லது கரவந்தபுரம் என்ற ஊரை உக்கிரன் கோட்டை என்று பெயர் மாற்றி, அதைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு, புரிந்து வந்த மோசச் செயலை விசாரிக்கவும், பராந்தக பாண்டியன் என்ற தன் தம்பியை அனுப்பி வைக்கிறான். பராந்தக பாண்டியன் தான் இன்னானென்பதை அறிவிக்காமல், சாதாரணப் பயணியாகத் தென்பாண்டி நாட்டிற்குச் செல்கிறான். அங்கு நீலவல்லி என்ற அழகியைச் சந்திக்கிறான். அவள் சேரன் மகள் என்பதை அறிந்தும், அறியாதவன் போல் நடிக்கிறான். முத்துக் களவுக்கும், சேரன் மகளைத் துன்புறுத்திப் பலவந்தமாக அடைய முயன்ற குற்றத்துக்கும் காரணமெல்லாம் தனது உறவினனான ரகுநாத பாண்டியன் என்பதை அறிந்து அவனைத் தண்டிக்க ஏற்பாடுகள் செய்கிறான். அவனுக்கு உறுதுணையாக நீலவல்லியும் தென்பாண்டி நாட்டுப் பரதவரும் நிற்கிறார்கள்.

வெகு திறமையாகப் புலன் விசாரித்து உக்கிரனையும் நீலவல்லியையும் காப்பாற்றி, ரகுநாத பாண்டியனைத் தண்டிக்கிறான் பராந்தகன். ரகுநாத பாண்டியன் அவமானம் தாங்காமல் தற்கொலை செய்து கொள்கிறான். வீரநாராயணன் என்று

சிறப்புப் பெற்ற பராந்தக பாண்டியன் நீலவல்லியையும் அவள் தம்பியையும் மதுரைக்கு அனுப்பிவிட்டு உக்கிரன் கோட்டையை உக்கிரனிடம் கொடுத்துவிட்டு, மதுரைக்குத் திரும்புகிறான்.

இந்தக் கதையில் வீரநாராயணன் என்ற பராந்தக பாண்டியன், நீலவல்லி என்ற சேரன் மகள் வானவன் மாதேவி, உக்கிரன் இவர்கள் சரித்திரப் பாத்திரங்கள். ரகுநாத பாண்டியன் கற்பனைப் பாத்திரம். இந்த வரலாற்றுக் கதையை கி.பி. 863—865 ஆகிய காலத்தில் நடைபெற்றதாக அமைத்திருக்கிறேன்.

இதை முதலில் வெளியிட்ட 'ராணி முத்து' காரியாலயத்தாருக்கும், இப்பொழுது வெளியிடும் "வானதி"யாருக்கும் எனது நன்றி உரித்தாகும். இது எந்தப் பத்திரிகையிலும் தொடர்கதையாக வந்ததில்லை என்பது இக்கதைக்கு ஒரு தனிச் சிறப்பு.

தி. நகர், **சாண்டில்யன்**
சென்னை-17 5-7-1982

Connemara (State Central) Chennai
29 JUL 2010
Received

# நீலவல்லி

## 1. மறைந்த மான்! தொடர்ந்த விபரீதம்!

**மா**ரிக்காலம் முடிந்து நாட்கள் நாலைந்தே ஆயின. அந்த ஆண்டில் மழை முந்திய ஆண்டுகளை விட பல மடங்கு அதிகமாயிருந்தது. சரத்காலம் உட்புகுந்து தலை நீட்டியுங்கூட, தாமிரபரணி ஆறு இரு கரைகளும் புரண்டு நடுவே பல சுழிகளைக் கண்களாக்கி வருகிறவர்களை எட்டவே நிற்கும்படி எச்சரித்து ஓடிக்கொண்டிருந்ததைக் கண்ட அந்த வாலிபன், சற்று குழப்பம் அடைந்தான். பக்கத்தில் நின்ற புரவியை நோக்கி, "நண்பரே! இந்த ஆற்றைக் கடக்க முயல்வது உசிதமா?" என்று வினவினான்.

அவன் சொன்னதை உணர்ந்துகொண்ட புரவி பற்களை நன்றாக விரித்துக் காட்டிக் கனைத்து நகைத்தது பெரிதாக. "அச்சமற்றவன் என்று உன்னை மக்கள் புகழ்வதில் அர்த்தம் என்ன இருக்கிறது? ஆற்றைக் கண்டு அஞ்சும் நீ சபதம் செய்து வந்த பணியை எப்படி நிறைவேற்றுவாய்?" என்று கேட்பது போலிருந்தது, புரவியின் நகைப்பொலி.

புரவியின் உள்ளெண்ணத்தை அந்த வாலிபனும் புரிந்துகொண்டிருக்க வேண்டும். "நண்பரே! துணிவுக்கும் அசட்டுத் துணிவுக்கும் வித்தியாசம் உண்டு. கொலைக்கும் தற்கொலைக்கும் வேறுபாடு உண்டு!" என்று விளக்கி னான், வாலிபன்.

அந்தச் சமயத்தில்தான் இடை புகுந்தது இன்பக் குரல், "அச்சத்துக்குக் காரணம் கற்பிக்கக் கற்றுக்கொண்டு இருக் கிறீர்கள்!" என்று.

புரவியின் பக்கத்தில் நின்று கொண்டிருந்த அந்த வாலிபன் சட்டென்று திரும்பினான். தாமிரபரணியின் கரையில் தனக்குப் பின்னால் நான்கு அடிகளுக்கு அப்பால் ஒரு வயதுப் பெண் நின்று கொண்டிருப்ப தையும், அவள் விஷமமாகப் புன்முறுவல் கொண்டிருப்ப தையும் கண்ட அந்த வாலிபன், "நீ யார்?" என்று வினவினான்.

அவள் அலட்சியமாகப் பதில் சொன்னாள், "இந்த ஊர்தான்!" என்று.

"இரவு மூள இருக்கிறது!" என்று சுட்டிக் காட்டினான், வாலிபன்.

"புரிகிறது!" என்றாள், அவள்.

"இந்த நேரத்தில் இங்கு என்ன செய்கிறாய்?" என்று மீண்டும் வினவிய அவன் சுற்றுமுற்றும் பார்த்தான்.

ஆற்றங்கரையில் அந்தப் பெண்ணைத் தவிர வேறு யாரையும் காணோம். "பெண்ணே! உன்னைத் தவிர வேறு யாரையும் இங்கு காணோமே!" என்று விசாரித் தான்.



அவள் கலகலவென நகைத்தாள். "வாலிபனே! என் தனிமையைக் கண்டு அனுதாபப்படுகிறாயா? அல்லது ஆசைப்படுகிறாயா?" என்று சிரிப்பின் ஊடே வினவிய அவள், "அனுதாபப்பட்டால் அது நியாயமானது, ஆனால், அவசியமற்றது. ஆசைப்பட்டால் அது அபாயமானது. இந்தக் கொற்கை மாநகரில் யாரைக் கேட்டாலும் சொல் வார்கள்!" என்றாள், அந்தப் பெண்.

வாலிபன் நிலை சங்கடத்தின் எல்லையை எட்டியது. "பெண்ணே! நீ யாரிடம் பேசுகிறாய் என்பது புரிய வில்லை உனக்கு!" என்று சீற்றத்துடன் எச்சரித்தான் வாலிபன்.

அவள் முகத்தில் விஷமக் களை பெரிதும் படர்ந்தது. "ஏன் புரியவில்லை? புரவியிடம் யோசனை கேட்கும் ஒரு பைத்தியத்திடம் பேசுகிறேன்!" என்று அவள் பதில் சொன்னாள்.

வாலிபன் சீற்றம் சிறிது அதிகமாயிற்று. "என் அந்தரங்க எண்ணங்களை நான் வேறு யாருடனும் பங்கிட்டுக் கொள்வது இல்லை!" என்றான் வாலிபன், சீற்றம் குரலில் ஒலிக்க.

இம்முறை அவள் புன்முறுவல் செய்தாள். "வேறு யாரும் கேட்க மாட்டார்கள்!" என்றாள், அவள்.

"ஏன்?"

"புரவியுடன் பேசுபவர்களோடு அறிவுள்ள எந்த மனிதன் பேசுவான்?"

"நீ பேசுகிறாயே!"

"அனுதாபத்தால் பேசுகிறேன்."

"என்ன அனுதாபம்?"

"இந்த ஆற்றைக் கடக்கப் போகிறாய்; முடியவில்லை. அதனால் புரவியை யோசனை கேட்கிறாய்."

இதைக் கேட்ட அந்த வாலிபன் திகைத்துப் போனான். "நான் ஆற்றைக் கடக்கப் போகிறேன் என்று யார் சொன்னது உனக்கு?" என்று கேட்டான்.

"சற்று முன்பு நீங்களே சொன்னீர்கள், அந்தப் புரவியிடம். தவிர, என் தொழிலும் சொல்லிற்று!" என்ற அவள், ஆற்றங்கரையில் கூப்பிடு தூரத்தில் பிணைக்கப் பட்டு இருந்த தோணியைக் காட்டினாள்.

வாலிபன் புரவியையும் திருப்பித் தானும் திரும்பி னான். அந்தப் பெண்ணை நோக்கி, "நீ படகோட்டியா?" என்று வினவினான் ஆர்வத்துடன்.

"ஆம். தோணியைக் காட்டவில்லை?" என்றாள் அவள்.

நான்கு அடி அவள் அருகில் வந்த அந்த வாலிபன், "பெண்ணே! இரவு நன்றாக மூண்டுவிட்டது. இருப்பினும் எனக்குப் பாதகமில்லை. என்னையும் இந்தப் புரவியை யும் அக்கரையில் சேர்க்க முடியுமா உன்னால்?" என்று வினவினான்.

அவன் குரலில் இருந்த கெஞ்சலைப் பார்த்தாள் அந்தப் பெண். அவன் முகத்தின் அழகை அந்தக் கெஞ்சல் அதிகப்படுத்தியதே தவிர, சிறிதும் குறைக்க வில்லை. அவன் நீண்ட தோள்களும் சுருண்ட தலைக் குழலுங்கூட அவன் முகத்துக்குக் கம்பீரத்தை அளித்ததை யும் கவனித்தாள் அந்தப் பெண். ஆனால் அந்த வாலிபன்



இடையில் இருந்த ஒரு குறுவாளைத் தவிர வேறு ஆயுதம் எதையும் தரிக்கவில்லை. நிராயுதபாணியாயிருந்தாலும் அவனைப் பகைவர் நெருங்குவது சரியல்ல என்பதை அவன் கண்கள் சந்தேகமற நிரூபித்தன. ஆகவே, "முடியும்!" என்று சுருக்கமாகப் பதில் சொன்னாள், அவள்.

படகோட்டியாயிருந்தாலும் அவள் முகத்தின் அழகு பிரமிக்கத்தக்கதாயிருந்ததையும், படகோட்டும் தொழிலைச் செய்ததாலேயே அவள் கைகள் உருண்டும், திரண்டும், மார்பகம் எடுப்பாகவும், உடலெங்கும் ஒரு செழிப்பு விரவிக் கிடந்ததையும் கவனித்த வாலிபன், அழகு, சாதிக்கு அப்பாற்பட்டது என்பதைப் புரிந்து கொண்டான். "முடியும்!" என்று சொல்லிவிட்டு அவள் தோணியை நோக்கி நடந்தபோது அவள் பின்னழகுகள் அசைந்து சென்ற அழகையும் உறுதியையும் கண்டு பிரமித்த வாலிபன் இதயம், இவள் சாதாரணப் பெண்ணல்ல என்று முணுமுணுத்தது.

ஆனால், மனத்தின் எச்சரிக்கையை அசட்டை செய்த அந்த வாலிபன் அந்தப் பெண்ணைத் தொடர்ந்தான், தனது புரவியுடன். ஆற்றங்கரைக்குக் கீழே தண்ணீர் அலைமோதிய இடத்தில் தளையில் கட்டப்பட்டிருந்த படகை அவிழ்க்கு முன்பு, "ஐயா! நீங்களும் புரவியும் தோணியில் ஏறிக்கொள்ளுங்கள்" என்றாள்.

"நீ?" என்று விசாரித்தான் வாலிபன்.

"ஆற்று வேகம் அதிகமாயிருக்கிறது. நீங்கள் ஏறு முன்பு தளைக் கயிற்றை அவிழ்த்தால் படகு திமிறி ஓடி விடும். ஆகையால் ஏறுங்கள்!" என்றாள்.

அவள் சொற்படி தோணியில் வாலிபன் ஏறினான். புரவியும் அவனைப் பின்பற்றித் தாவி ஏறிக்கொண்டதும் நீளமான தோணி தள்ளும் கோலை வாலிபனிடம் கொடுத்து, "இதைப் பிடித்துக் கொள்ளுங்கள். தளையை அவிழ்த்துவிட்டு வருகிறேன்," என்ற அந்தப் பெண் தளையை லாவகமாக அவிழ்த்துப் படகில் ஏறிக் குதித்து, தோணியைத் தள்ளும் கோலைத் திரும்ப வாங்கிக் கொண்டு தோணியை இயக்கலானாள்.

நன்றாக இருள் மூண்டுவிட்ட சமயம்.

இரு கரைகளிலும் இருந்த வீடுகளில் ஏதோ ஓரிரண்டில் சிறு விளக்குகள் கண்களைச் சிமிட்டிக் கொண்டிருந்தன. அப்பொழுது அமாவாசையாகையால் இருள் தனது ஆட்சியைப் பரிபூர்ணமாகச் செலுத்திக் கொண்டிருந்தது.

அந்தப் பெண் இருளைச் சிறிதும் இலட்சியம் செய்யாமல் தோணியை ஆற்றின் வேகம் பார்த்துக் குறுக்கே செலுத்திக்கொண்டிருந்தாள். அவள் தோணியோட்டும் திறனை வியந்த அந்த வாலிபன் கேட்டான், "பெண்ணே! இந்த ஆற்றை நன்றாகப் புரிந்துகொண்டிருக்கிறாய் போலிருக்கிறது!" என்று.

"தாயை மகள் புரிந்துகொள்வது கஷ்டமா?" என்று வினவினாள், அந்தப் பெண்.

அதற்குப் பிறகு அவன் ஏதும் கேட்கவில்லை. அவள் மட்டும் சிறிது நேரத்திற்கெல்லாம் அதுவரை காட்டிய நிதானத்தை இழந்தாள். "நமக்குப் பின்னால் ஒரு தோணி வருகிறது!" என்றாள். அச்சம் அவள் குரலில் நன்றாகத் தெரிந்தது.



"அஞ்சாதே! நான் இருக்கிறேன்!" என்று தைரியம் சொன்னான், அந்த வாலிபன்.

அதற்கு மேல் அவள் ஏதும் பேசவில்லை. நீரோட்டத்தின் வழியே தோணியைச் செலுத்தி அக்கரையை வெகு சீக்கிரம் அடைந்தாள். அடைந்து, தளையில் படகைப் பிணைத்ததும், அந்த வாலிபனையோ புரவியையோ திரும்பியும் பார்க்காமல் எதிரேயிருந்த காட்டுக்குள் வேகமாக ஓடி மறைந்தாள்.

வாலிபனுக்கு அவள் போக்கின் காரணம் புரியாததால் தோணியில் இருந்து இறங்கிப் புரவி பின்தொடரக் காட்டு முகப்பில் மறைந்து நின்றான்.

அவர்கள் தோணியைத் துரத்தி வந்த தோணி கரையை அடைந்தது. அதிலிருந்து ஒரு சிறுவன் உட்பட ஐந்து பேர் இறங்கியதையும், மற்ற நான்கு பேரும் அந்தச் சிறுவனைத் தரதரவென்று இழுத்துக் கொண்டு சென்றதையும் கண்ட வாலிபன், அவர்களைத் தூரத்தில் பின்தொடர்ந்து சென்றான்.

சிறுவனை இழுத்துச் சென்ற அந்த நால்வரும் காட்டின் மேற்குப் பகுதியை அடைந்ததும், அவர்களில் தலைவனாகக் காணப்பட்டவன், "டேய்! இப்பொழுதாவது உண்மையைச் சொல், எங்கே அந்தச் சிறுக்கி?" என்று வினவினான்.

சிறுவன் பதில் ஏதும் சொல்லவில்லை. தலையை உதறி நிமிர்ந்து அலட்சியமாக நின்றான்.

அதைக் கண்ட தலைவன், "சரி மாட்டுங்கள் கயிற்றை. இவனை இந்த மரத்திலேயே தொங்க விடுவோம்!" என்று

ஆணையிடவே, சிறுவன் கழுத்தில் சுருக்கிட்ட கயிறு மாட்டப்பட்டது.

கயிற்றின் மறுபுறத்தைப் பக்கத்திலிருந்த மரக்கிளை மீது எறிந்து நுனியைக் கையில் பிடித்துக் கொண்டான் ஒருவன்.

"இப்பொழுது சொல். எங்கே நீலவல்லி?" என்று தலைவன் கேட்டான்.

சிறுவன் வாயைத் திறக்கவில்லை.

"ஆகட்டும்," என்றான் தலைவன்.

சிறுவன் கழுத்தில் கயிறு இறுக ஆரம்பித்தது.

## 2. பேசும் புரவி

**தோ**ணியில் வந்த வாலிபன் மட்டும் துரிதமாகவும், துணிகரமாகவும் செயல்படாது இருந்தால் அந்தச் சிறுவன் ஆயுள் அன்றோடு முடிந்திருக்கும்.

அதுவரை மறைவில் புரவியுடன் நின்று, நடந்த விபரீதத்தைக் கவனித்துக் கொண்டிருந்த வாலிபன் தனது புரவியின் காதில் ஏதோ சொன்னான். அத்துடன், "நிறுத்து! இல்லையேல் நால்வரும் பிணமாகிவிடு வீர்கள்!" என்ற எச்சரிக்கைக் குரலும் கொடுக்கவே, இரண்டாவது தோணியில் வந்த நால்வரும் 'சட்' என்று தங்கள் கொலைத் தொழிலை ஒரு விநாடி நிறுத்தி எச்சரிக்கை வந்த திசையில் திரும்பினார்கள்.

அந்தச் சமயத்தில் வெகு வேகமாக அவர்களிடையே புகுந்துவிட்ட வாலிபனின் புரவி, அவர்களில் இருவரை முட்டித் தள்ளிவிட்டு மற்றும் இருவரைப் பின்னங்கால் களால் பலமாக உதைக்கவே, நால்வரும் நிலைகுலைந்து விழுந்தார்கள். பின்னங்கால்களால் உதைக்கப்பட்ட இருவருக்கும் குளம்புகள் வயிறுகளில் பதிந்துவிடவே அவர்கள் பயங்கரமாகக் கூச்சலிட்டார்கள்.

முட்டித் தள்ளப்பட்ட இருவரும் வெகு வேகமாக எழுந்து அந்தப் புரவியை உற்று நோக்கினார்கள். தங்களை முட்டித் தள்ளிய புரவி சிறுவன் கழுத்திலிருந்த கயிற்றைப் பற்களால் அவிழ்க்க முயல்வதைக் கண்டு

வியந்தனர். அவ்விருவரில் மிக உயரமும் பருமனாயு மிருந்தவன் சொன்னான், "இந்த மாதிரி ஒரு புரவியை நான் இதுவரை பார்த்ததில்லை!"

"இது புரவியல்ல, மனிதன்!" என்றான் இன்னொருவன்.

"சே! பைத்தியக்காரா! இது நன்றாகப் பழக்கப்பட்ட புரவி. யாரோ சொல்கிறபடி கேட்கிறது!" என்றான் உயரமும் பருமனாயுமிருந்தவன்.

வயிற்றில் உதைக்கப்பட்டு அலறி விழுந்த இருவரும் கூட மெள்ள எழுந்து வயிற்றைப் பிடித்துக் கொண்டு மற்ற இருவரும் நின்று கொண்டிருந்த இடத்துக்கு வந்ததும் அவர்களில் ஒருவன், "இந்த மாயப் புரவியைக் கொன்று விடவேண்டும். எதற்கும் பந்தத்தைக் கொளுத்துங்கள்!" என்று உத்தரவிட்டான்.

அவன் குரலில் கட்டளை திட்டமாக உதித்தாலும் பருமனாயிருந்தவன் அவனைச் சமாதானப்படுத்த முயன்று, "மன்னவா! புரவியைக் கொன்று பயனில்லை. அதை ஏவியவனைக் கொல்ல வேண்டும். எதற்கும் பந்தத்தைக் கொளுத்துவோம்!" என்று கூறிவிட்டு, பந்தத்தைக் கொளுத்தினான்.

பந்தத்தின் வெளிச்சத்தில் தெரிந்த நிலை முதலில் இருந்ததற்கு முற்றும் மாறுபாடாயிருந்தது.

சிறுவன் கழுத்திலிருந்து கயிறு முழுவதும் அவிழ்க்கப் பட்டதால் சிறுவன் புரவி மீது இருந்து கொண்டு தன்னைத் தூக்கிவிட முயன்றவர்களைச் சுடும் கண்களால் நோக்கினான். புரவியைக் கொல்ல யோசனை கூறியவன் மீது தனது கண்களை ஒரு விநாடி நாட்டி, "உக்கிரா! என் தந்தையைக் கொன்று உக்கிரன் கோட்டையை உன்



வசப்படுத்திக் கொண்டாய். என் சகோதரியையும் பிடித்து அழிக்கப் பார்க்கிறாய். இப்பொழுது என்னையும் முடித்து விட முயன்றாய். உன் அக்கிரமங்கள் பாண்டிய மன்ன னுக்குத் தெரிந்தால், உனது கோட்டையைப் போல் பத்துக் கோட்டையும் உனக்குப் பாதுகாப்பு அளிக்காது!" என்று சீறும் சொற்களை உதிர்த்தான்.

அதிகப் பருமன் இல்லாவிட்டாலும், திடமான தேகத் தைப் படைத்த உக்கிரனின் உக்கிர விழிகள் சிறுவனை நோக்கி உருண்டன, ஒரு விநாடி. "உக்கிரன் கோட்டை இளவரசரே! நீர் சீக்கிரம் உங்கள் குலத்தார் வணங்கும் திருமாலின் திருவடிகளை அடையப் போகிறீர். இல்லா விட்டால், உங்கள் தமக்கை இருக்கும் இடத்தைச் சொல் லுங்கள்!" என்று பாதி பரிகாசமாகவும் பாதி குரூரத் தொனியிலும் கேட்டான்.

சிறுவன் நகைத்தான் பெரிதாக, அத்தனை ஆபத்திலும். "உக்கிரா! கேவலம் ஒரு பெண்ணைப் பிடிக்கக் கொற்கையையே சல்லடை போடும் உன்னைப் போன்ற ஒரு பேடியை என் தந்தை தளபதியாக வைத்துக் கொண்டதால் வந்த விபரீதம் இது. எனக்கு முன் பிறந்தாளை இத்தனை நாள் கண்டுபிடிக்க முடியாததால் என்னைப் பணயமாக வைத்து அவளைப் பிடிக்க. முயன்றாய். என்னைச் சிறைப்பிடித்து அவள் சரண் அடையாவிட்டால் என்னைக் கொல்வதாகப் பறையறை வித்தும் பயன் இல்லாததால் விழிக்கிறாய். இப்பொழுது அவளைக் கொற்கைப் பரதவர்கள் காக்கிறார்கள். அவள் மீது நீ கை வைத்தால் உன்னைக் கொன்று தாமிரபரணி யில் போட்டு விடுவார்கள்!" என்றான் சிறுவன். ஆத்திரத் தின் விளைவாக அவன் சொற்கள் வேகமாக உதிர்ந்தன.

அதுவரை மவுனமாயிருந்த மற்ற மூவரும் பொறுமை இழந்தனர். "மன்னவா! எதற்கு இந்த அனாவசியப் பேச்சு. இவனை முதலில் தீர்த்துக் கட்டுவோம். பிறகு அந்தச் சிறுக்கியைப் பிடிப்போம்!" என்றான் ஒருவன்.

"உத்தரவு கொடுங்கள். என் குறுவாளை வீசி அவனைப் பிணமாக விழும்படி செய்கிறேன்!" என்றான் இன்னொருவன்.

பருமனாயிருந்தவன் சிறிது கனைத்தான் தொண்டையை. "மன்னவா! இரவு ஓடுகிறது. நாம் திரும்ப வேண்டிய தூரம் அதிகம் இருக்கிறது. ஆகவே ஏதாவது ஒரு முடிவு எடுங்கள்" என்றான்.

கடைசியில் பேசியவனை நோக்கிய உக்கிரன், "கன்னித்தேவா! அவசரப்படாதே. இவனுக்கு இங்கு யாருடைய உதவியோ இருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் இவனைக் கோட்டைக்குக் கொண்டு சென்று அங்கு ஒழித்து விடுவோம்!" என்று கூறினான்.

அதை மற்றவர்கள் ஆமோதிக்கவே, புரவியின் சேணத்தை ஒருவன் கைப்பற்றப் போனான். புரவி பயங்கரமாகக் கனைத்தது. "என்னைத் தொடாதே!" என்ற சொல்லும் கேட்டது.

நால்வரும் சுற்றுமுற்றும் பார்த்தனர். பந்தத்தை ஏந்திய தேவன் காட்டுக்குள் சென்று அங்குமிங்கும் தேடிவிட்டுத் திரும்பி வந்து, "இங்கு வேறு யாரையும் காணோம். புரவிதான் பேசியிருக்க வேண்டும்!" என்றான்.

"முட்டாள்! புரவியாவது, பேசுவதாவது? சரியாகப் பார்" என்று எரிந்து விழுந்தான், உக்கிரன்.



"பார்த்துவிட்டேன். யாரும் இல்லை. இந்தப் புரவி தான் பேசியிருக்க வேண்டும்!" என்றான், தேவன்.

"புரவி பேசுமா?" என்று வினவினான் ஒரு வீரன்.

"கிளி பேசவில்லையா?" என்று இன்னொருவன் கேட்டான்.

"கிளியைப் பழக்குகிறார்கள்!" என்றான் தேவன்.

"கிளியைப் பழக்குவது போல் புரவியை ஏன் பழக்கக் கூடாது?" என்று கேட்டான், முதலில் பேசியவன்.

"நீ சுத்த அடிமுட்டாள். கிளி வேறு, புரவி வேறு!" என்று கடிந்துகொண்ட உக்கிரன், "இரண்டுக்கும் வித்தியாசம் தெரியவில்லை, உனக்கு?" என்று வினவினான்.

"ஏன் தெரியாது? கிளி பறக்கும். குதிரை பறக்காது!" என்றான் தேவன்.

அதுவரை காட்டிய பொறுமையை அடியோடு இழந்த உக்கிரன், "அந்தப் பந்தத்தை இப்படிக் கொடு. நான் போய்ப் பார்த்து வருகிறேன். புரவிக்கு உரியவன் இங்கு தான் எங்கோ இருக்கிறான். பேசுவது அவன்தான்!" என்று கூறிவிட்டு பந்தத்தை எடுத்துக் கொண்டு காட்டுக்குள் நுழைந்தான்.

பல இடங்களில் தேடியும் யாருடைய அடிச்சுவட்டை யும் காணோம். மனித நடமாட்டத்துக்கான எந்த அறிகுறிகளும் தெரியவில்லை.

ஏதோ ஓர் இடத்தில் மட்டும் காலடி ஒன்று தெரிந்தது. அதைக் கண்டதும் முகத்தில் திருப்தியைக் காட்டிய உக்கிரன், "இது ஒரு பெண்ணின் காலடிதான். சந்தேகம்

இல்லை. தோணியை விட்டு ஓடிவிட்ட நீலவல்லி இங்கு தான் எங்கோ இருக்கிறாள்!" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு அந்தச் சிறு காலடிகளைப் பின்பற்றிச் சென்றான்.

அந்தக் காலடிகள் திடீரென ஆற்றங்கரையை நோக்கித் திரும்பின. அதை அடையாளம் பார்த்து நடந்த உக்கிரன், பத்தடி தூரத்துக்குப் பின்பு ஆண் காலடிகள் அந்தப் பெண் காலடிகளுடன் சேர்ந்து காணப்பட்டதைக் கவனித்ததால் குதூகலம் அடைந்தான். "புரவியின் சொந்தக்காரனும் மாட்டிக்கொண்டான். நல்லது. நீலவல்லி, உன்னையும் அவனையும் சேர்த்தே உக்கிரன் கோட்டையின் பாறைச் சிறையில் அடைத்து விடுகிறேன். நீங்கள் இருவரும் அங்கேயே பட்டினி கிடந்து சாகலாம்!" என்று உற்சாகத்துடன் கூறிக்கொண்டு நடந்தான்.

திடீரென அந்த இருவர் காலடிகளும் ஓரிடத்தில் மறைந்தன. உக்கிரன் வியப்பு எல்லை மீறியது. காலடிகள் எப்படித் திடீரென நட்ட நடுநிலத்தில் மறைய முடியும் என்று எண்ணினான்.

விடை கிடைக்காததால், மறுபடியும் தனது ஆட்கள் இருந்த இடத்திற்கு வந்து, "தேவா! இவனையும் புரவியையும் இழுத்து வா. மற்றவர்கள் அந்தச் சிறுக்கியையும் அவள் காதலனையும் பிடித்து வரட்டும்!" என்று கூறி விட்டு, புரவியை நெருங்கினான்.

புரவி தனது கண்களால் அவனை உருட்டிப் பார்த்தது. அடுத்த விநாடி திரும்பிக் காட்டுக்குள் ஓடி விட்டது.

"பிடி, புரவியை!" என்று கூவித் திரும்பினான். உக்கிரன்.



அப்பொழுது எங்கிருந்தோ வீசப்பட்ட ஒரு சுருக்குக் கயிறு அவன் கழுத்தில் விழுந்து இறுக்கியது.

தேவன் மீது பாய்ந்த ஒரு குறுவாள் அவன் வலக் காலில் தைத்து அவனை உக்கிரனுக்கு உதவிக்கு வராமல் தடுத்தது.

மற்ற இருவரும் வாட்களை உருவிக் கொண்டார்கள் போருக்கு. ஆனால், அவற்றுக்கு அவசியம் இல்லாமல் போயிற்று. பெரிய கோலால் மண்டையில் விழுந்த இரு அடிகள் அவர்களைத் தரையில் வீழ்த்தின.

உக்கிரனுக்கும் அவன் ஆட்களுக்கும் இந்த விசித்திர நிகழ்ச்சிகள் அச்சத்திற்குப் பதில் ஆத்திரத்தையே மூட்டின. "மறைவில் இருந்து தாக்கும் நீ ஒரு வீரனா! துணிவு இருந்தால் எதிரே வந்து போரிடு!" என்று கூவினான் உக்கிரன்.

அவன் அழைப்பை ஏற்றுப் பந்தம் வீசிய வெளிச்சத்துக்குள் நுழைந்தான், தோணியில் வந்த வாலிபன்.

## 3. நாடோடி

உக்கிரனுடைய அழைப்பை ஏற்றுப் பந்தத்தின் வெளிச்சத்துக்குள் வந்த வாலிபனைப் பார்த்த உக்கிரன் மட்டும் இன்றி, அவன் ஆட்களும் பிரமிப் படைந்தனர். கேவலம், இருபத்திரண்டு வயதுக்கு மேல் மதிப்பிட முடியாத அந்த வாலிபன், அதுவும் நிராயுதபாணி, தங்களைப் போன்ற நான்கு வீரர்களை எப்படிச் சமாளிக்க முடிந்தது என்று அந்த நால்வருமே எண்ணியதால் ஒருவரையொருவர் பொருள்படப் பார்த்துக் கொண்டனர். அந்தச் சமயத்தில் கழுத்தில் விழுந்த சுருக்குக் கயிற்றை உக்கிரன் எடுத்து விட்டாலும், கன்னித்தேவனும் காலில் தைத்த குறுவாளைப் பிடுங்கிவிட்டதாலும், மண்டையில் அடிபட்ட இருவரும் எழுந்துவிட்டதாலும், வாலிபன் நான்கு பேருக்குப் பதில் சொல்ல வேண்டிய நிலைமையில் இருந்தது நால்வருக்குமே புரிந்திருந்த தால், சற்றுத் துணிவுடனேயே வாலிபனை விசாரிக்க லாயினர்.

உக்கிரன் கேட்டான் முதலில், "வாலிபனே! நீ யார்?" என்று.

பதில் அலட்சியமாக வந்தது வாலிபனிடம் இருந்து. "நாடோடி!" என்று சொன்னான், வாலிபன்—இளமுறுவல் துலங்க.



"நாடோடியானால் உனக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் ஏன் தலையிட்டாய்?" என்று கன்னித்தேவன் கேட்டான்.

வாலிபன் லேசாக நகைத்தான். "கொலை நடப்பதை வேடிக்கை பார்ப்பது என் பழக்கமல்ல!" என்றான் நாடோடி.

"நாடோடி!" உக்கிரன் மீண்டும் உரையாடலைத் தொடர்ந்தான்.

"சொல்லுங்கள்" என்றான் நாடோடி, சர்வ சாதாரண மாக.

"இப்பொழுதுகூட நீ பிழைத்துப் போக மார்க்கம் இருக்கிறது!" என்று கருணை காட்டும் வகையில் பேசினான் உக்கிரன்.

"இதுவரை நான் பிழைத்துச் செல்ல வழியில்லை என்று யார் சொன்னது?" வாலிபன் கேட்டான் இடக்காக.

உக்கிரன் இம்முறை புன்முறுவல் கொண்டான். "நாடோடி! மறைவிலிருந்து வீரர்களுடன் போராடுவது வேறு. பகிரங்கமாகச் சண்டையிடுவது அத்தனை சுலப மல்ல!" என்று உக்கிரன் சுட்டிக் காட்டினான்.

நாடோடியின் கண்கள் சிரித்தன. "வீரர்களா! எங்கிருக்கிறார்கள்?" என்று விஷமமாகக் கேட்டான் வாலிபன்.

அதுவரை வாளாவிருந்த கன்னித்தேவன் தனது காலில் இருந்து பிடுங்கிய குறுவாளைத் திடீரென எறிந்தான், வாலிபனை நோக்கி.

அப்படிச் சீறிவந்த குறுவாளின் இலக்கில் இருந்து தப்ப, சிறிது பக்கவாட்டில் நகர்ந்த வாலிபன் அதன்

பிடியை மிக லாவகமாகப் பிடித்து மீண்டும் தனது கச்சையில் செருகிக்கொண்டான். "இப்பொழுது நிராயுதபாணியோடு நீங்கள் போராட அவசியமில்லை. தவிர உங்கள் குறியையும் சரி செய்து கொள்ளுங்கள். அந்தத் தடியனுக்குக் குறுவாளை வீசத் தெரியவில்லை!" என்று கன்னித்தேவனைச் சுட்டிக்காட்டி உக்கிரனிடம் சொன்னான் வாலிபன்.

"டேய்! சிறு பயலே! நாடோடி! யாரைத் தடியன் என்கிறாய்? உன்னை என் இரு கைகளால் பிண்டமாகப் பிடித்துப் போடுவேன்" என்று கன்னித்தேவன் கூவினான். பூதாகரமான தனது உடலுடன் நாடோடியை நோக்கி வரவும் தொடங்கினான்.

"உங்களுடன் போராடுவது சாத்தியமில்லை!" என்றான் வாலிபன்.

"ஏன்?" கன்னித்தேவன் கூவினான் பயங்கரமாக.

"நான் உன்னிடம் சண்டை போடும்போது உன் சகாக்கள் என்னை முதுகில் குத்தலாம்!" என்றான் வாலிபன்.

"குத்த மாட்டார்கள். நான் உத்தரவாதம்."

"ஒரு சிறுவனை நான்கு பேர் சேர்ந்து கொலை செய்ய முயன்றீர்கள். அப்பேர்ப்பட்ட மகா வீரர்களை எப்படி நம்புவது?"

"சிறுவன் விஷயம் வேறு" என்றான் உக்கிரன் இடைபுகுந்து.

"ஆமாம். அவ்னால் நாலு பேரைச் சமாளிக்க முடியாது."



"உன்னால் முடியுமா?"

"உங்கள் நாலு பேரையா?"

"ஆம். ஒவ்வொருவராக."

"உக்கிரா! உன்னை நம்புகிறேன். இந்தா, என் குறுவாளை வைத்துக்கொள். முதலில் அந்தப் பரம தடியனுடன் மற்போர் செய்துவிட்டு வருகிறேன்" என்ற நாடோடி தனது மேலங்கியைக் களைந்தான். இடுப்பில் இருந்த ஜல்லடத்தைக் கட்டிக் கொண்டு கன்னித்தேவனை நெருங்கினான்.

கன்னித்தேவன் தொடைகளை ஆரவாரமாகத் தட்டினான். புஜங்களையும் தட்டிக் கொண்டான். பிறகு சிறிதும் அசையாமல் பந்தத்தின் வெளிச்சத்தில் நின்ற வாலிபன் மீது பாய்ந்து அவனை இறுக்கினான் தனது உலக்கைக் கைகளால். தனது பலம் முழுவதையும் உபயோகித்து அவனைக் கொன்றுவிடப் பெருமூச்சையும் விட்டான்.

கன்னித்தேவன் பெரு உடலுக்குள் வாலிபன் சிறிது நேரம் மறைந்து விட்டான். வெகு சீக்கிரம் கன்னித்தேவன் அகலுவான், வாலிபன் பிணம் கீழே விழும் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருந்த உக்கிரனுக்குப் பெரும் வியப்புக் காத்துக் கொண்டிருந்தது.

சுமார் பத்து விநாடிகளில் கன்னித்தேவன் பின் நோக்கி நர்த்தனம் செய்யத் தொடங்கினான். நடன சாஸ்திரத்துக்குப் புதிதான வகையில் ஜதிகளை ஆடினான். பிறகு, கதக்களி இரணியன் போல் திடீரெனக் கீழே மல்லாந்து விழுந்தான். அவன் வயிறு மிகவும் சிவந்திருந்தது. இரண்டு இடங்களில் கறு ரத்தமும் தோய்ந்து இருந்தது.

நாடோடி மெள்ளத் தனது அங்கியை மீண்டும் போட்டுக் கொண்டான். "மன்னவா! எனது குறுவாளைக் கொடுக்கிறீர்களா?" என்று உக்கிரனை நோக்கிக் கையையும் நீட்டினான். அவன் முகத்தில் களைப்பு எதுவும் தெரியவில்லை.

உக்கிரன் அந்த வாலிபனை வியப்புடன் நோக்கினான். குறுவாளை அவனிடம் நீட்டியவண்ணம், "என்ன நடந்தது?" என்று விசாரித்தான்.

"ஒன்றும் நடக்கவில்லை. அவன் பெரு உடலில் முகம் கிடைக்கவில்லை. என் முகத்துக்கு எதிரில் வயிறுதான் தெரிந்தது. அங்கு சில குத்துகளை விட்டேன். அதைத் தாங்க முடியவில்லை அந்தத் தடியனால். மன்னவா! ஒன்று தெரிந்து கொள்ளுங்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் மனிதன் சதையை வளர்க்கக் கூடாது. உதாரணம் அதோ உங்கள் வீரர்!" என்று கீழே கிடந்த கன்னித்தேவனைச் சுட்டிக் காட்டிய வாலிபன், "இனி நான் போகலாமா?" என்று கேட்டான்.

உக்கிரன் அந்த வாலிபனை நோக்கினான். அவன் முகத்தில் சிந்தனை படர்ந்தது. பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்து, "நாடோடி! நீ எங்கே போகப் போகிறாய்?" என்று வினவினான்.

"நாடோடிக்கு இடம் என்பது ஏது?" என்று வினவினான் வாலிபன்.

"நான் இடம் தருகிறேன், வருகிறாயா?"

"எந்த இடம்?"

"உக்கிரன் கோட்டை."

"அங்கு எனக்கு என்ன வேலை?"



"எனது மெய்க்காவலனாகலாம்."

"அது என்னால் முடியாது."

"ஏன்?"

"மெய்க்காவலனானால் ஒரே இடத்தில் இருக்க வேண்டும்."

"வேண்டாம். என் அலுவல்களுக்கு உன்னை அனுப்புகிறேன்."

நாடோடி பெரிதாக நகைத்தான். "பெண் பிடிக்கும் வேலை என்னால் முடியாது!" என்றான் நகைப்பின் ஊடே.

அதுவரை பொறுமையாயிருந்த உக்கிரன் பொறுமையை அடியோடு இழந்தான். "உக்கிரனை நிந்தித்துவிட்டுப் பிழைப்பவன் யாருமில்லை! உன்னைக் காத்துக் கொள்!" என்று கூறிவிட்டு, சரேலென இடையிலிருந்த தனது வாளை உருவிக் கொண்டான்.

ஆனால் நாடோடி அதற்கு அஞ்சவுமில்லை, ஓடவுமில்லை. பக்கத்தில் நின்ற உக்கிரன் வீரன் ஒருவனுடைய வாளைத் திடீரென உருவிக் கொண்டான். "உக்கிரனுக்கும் எனக்கும் இடையில் யாரும் வரவேண்டாம்!" என்று எச்சரித்துவிட்டு உக்கிரன் வாளை அந்தரத்தில் தடுத்தான். அடுத்து கடுமையான சண்டை மூண்டது.

அந்தச் சண்டையில் உக்கிரன் நல்ல வாள் வீரன் என்பதையும், முறைப்படி வாள் பயிற்சி பெற்றவன் என்பதையும் நாடோடி புரிந்து கொண்டான். அதனால் மகிழ்ந்த நாடோடி, உற்சாகத்துடன் போரிட்டான். இருந்த இடத்தில் இருந்து நகராமல் இருவர் வாள்களும் பலமுறை மோதியும் உராய்ந்தும் மீண்டன.

இரண்டு நிமிடங்கள் வரை நின்ற இடத்தில் இருந்து அசையாமல் போரிட்ட நாடோடி தனது போர் முறையை மாற்றி முன்னேறினான். ஒவ்வொரு அடியிலும் பின் வாங்க வேண்டியிருந்ததால் நிதானத்தைத் தப்பவிட்ட உக்கிரன், தனது வாளை அளவுக்கு அதிகமாக வீசினான். அதனால் அவன் பிடியில் இருந்து சற்றுத் தளர்ந்துவிட்ட வாள், எதிரி வாளால் தூக்கியடிக்கப்பட்டுக் காட்டின் இருட்டில் அடைக்கலம் புகுந்தது.

இதனால் நிராயுதபாணியாகிவிட்ட உக்கிரனை நோக்கிய நாடோடி, "உக்கிரா! நீ உன் வீரர்களை அழைத்துச் செல்லலாம். ஆனால் ஒன்று சொல்கிறேன். உன்னைப்போல் சிறந்த வாள்வீரனை இதுவரை நான் சந்தித்ததில்லை. இத்தகைய வீரன் இழிசெயல்களில் ஈடு படுவது முறையல்ல. சிந்தித்துப் பார்!" என்று சொல்லிக் கொண்டு காட்டின் இருளில் நடந்தான் பின்நோக்கி.

"சற்று நில்," என்றான் உக்கிரன்.

"என்ன வேண்டும்?" என்று கேட்டுவிட்டு நின்றான் நாடோடி.

"நீலவல்லி எங்கே? அவளை எங்கே மறைத் திருக்கிறாய்?" என்று வினவினான் உக்கிரன்.

"நீலவல்லியா? அது யார்?" என்று ஏதும் அறியாதது போல் கேட்டான் நாடோடி.

"உனக்குப் படகைச் செலுத்தி வந்தாளே! அவள்."

"எனக்குத் தெரியாது. நீயே தேடிக் கொள்!" என்றான் நாடோடி.

"எப்படியும் அவளைக் கண்டுபிடித்து விடுவேன்!" என்று உக்கிரன் உக்கிரத்துடன் பேசினான்.



"நான் தடுக்கவில்லை!" என்ற வாலிபன் நகர முற்பட்டான்.

அப்பொழுது காட்டுக்குள் தடதடவென்று பலர் ஓடி வரும் சத்தம் கேட்டது. அடுத்து உக்கிரனும் அவனது சகாக்களும் பறந்தார்கள். அவர்கள் கிலிக்குக் காரணம் தெரியாமல் காட்டின் இருளில் நடந்தான் நாடோடி.

அவன் பத்தடி தூரம் நடந்திருக்க மாட்டான். பின்னால் இருந்து அவன் குறுவாள் அகற்றப்பட்டது. சரேலெனத் திரும்பிக் குறுவாளை எடுத்த பேர்வழியைப் பிடித்தான். பிடித்து ஒரு சுழற்றுச் சுழற்றித் தன் இரும்புக் கைகளால் பிடித்து உடலுடன் இறுக்கிக் கொண்டான். இம்முறை அவன் இறுக்கலில் சிக்கியது கன்னித் தேவனல்ல. வெறும் கன்னி! அவளை உதற முயன்றான் நாடோடி.

அவள் விடவில்லை. "உக்கிரா! இம்முறை நீ தப்ப முடியாது. பரதவர் இதோ உன்னைச் சூழ வருகிறார்கள்!" என்றாள் அவள், அவன் கைகளை இறுகப் பிடித்த வண்ணம். பேச முடியாமல் திணறினான் நாடோடி. 'இதென்ன தர்ம சங்கடம்!' என்று தனக்குள் சொல்லியும் கொண்டான்.

## 4. மார்மப் பயணி

முன்பின் அறியாத ஒரு கன்னியைக் கன்னித்தேவன் என்று எண்ணி ஒரு சுழற்றுச் சுழற்றி இறுகக் கட்டிக் கொண்டதும், தான் பிடித்தது பெண் என்று உணர்ந்ததன் விளைவாக அவளை உதறிவிட முயன்ற சமயத்தில், அவள் தன் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டதையும், தன்னை உக்கிரன் என்று அழைத்ததையும் எண்ணிப் பார்த்த நாடோடி, ஆள் மாறாட்டம் தனக்கு மட்டுமல்ல என்பதை அறிந்து பெரும் தர்மசங்கடத்தின் வசப்பட்டுத் திணறினான்.

அந்தச் சமயத்தில் அடவிக்குள் பல பந்தங்களை ஏந்தி வந்த பரதவர் நாடோடியின் கையை நீலவல்லி விடாமல் பிடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்துப் பெரு வியப்படைந்தனர். பந்தங்கள் வீசிய வெளிச்சத்தில், தான் கையைப் பற்றி நிற்பது உக்கிரன் அல்ல என்பதையும், தன் படகில் வந்த வாலிபன் என்பதையும் கவனித்த நீலவல்லி, தனது நயனங்களை நிலத்தில் தாழ்த்தி, "நீங்களா?" என்று மட்டும் கேட்டாள். அவள் குரலில் பெரும் சங்கடம் ஒலித்தது.

"நானும் ஏமாந்தேன். உன்னைக் கன்னித்தேவன் என்று நினைத்து உன்னை இறுகக் கட்டி..." என்ற நாடோடியால் மேற்கொண்டு எதுவும் பேச முடிய வில்லை.



காதுகளில் பெரும் வளையங்களையும் கழுத்தில் ஒற்றைச் சங்குகளையும் போட்டுக் கொண்டும், கைகளில் படகு தள்ளும் பெரும் கழிகளையும் ஏந்தி, திண்மை யான தேகங்களுடனும் பயங்கர மீசைகளுடனும் நின்ற பரதவரை நோக்கினான் நாடோடி. அவர்கள் ஒவ்வொருவராலும் பத்துப் பேரை எதிர்த்துச் சமாளிக்க முடியும் என்பதைப் புரிந்து கொண்டான். அவர்கள் பாதுகாப்பு இருக்கும் வரை நீலவல்லியைப் பிடிப்பது முடியாது என்றும் தனக்குள் சொல்லிக் கொண்டான். பரதவர் தன்னையும் நீலவல்லியையும் பார்த்துப் பிரமிப்பதையும் அவர்கள் கண்ணோட்டத்திலிருந்து அறிந்த நாடோடி, நிலையை விளக்க முற்பட்டு, "நீலவல்லியும் நானும் ஒருவரையொருவர் தவறாகப் புரிந்து கொண்டோம்!" என்றான் பரதவரை நோக்கி.

பரதவர் யாரும் பதில் சொல்லவில்லை. முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டாமல் சிலைபோல் நின்றிருந் தார்கள். அவர்கள் மன உளைச்சலைப் புரிந்துகொண்ட நீலவல்லி, "இவர் என்னைக் கன்னித்தேவன் என்று நினைத்துப் பிடித்தார். இவரை நான் உக்கிரன் என்று நினைத்துப் பிடித்தேன்!" என்று விளக்கினாள் பரதவரை நோக்கி.

அவள் விளக்கத்துக்கும் அவர்கள் பதில் சொல்ல வில்லை. ஆகவே வெகுண்ட நீலவல்லி அவர்களுக்குத் தலைவனாகத் தெரிந்த வயதான பரதவனை நோக்கி, "வேல்முருகா! நீயுமா என்னை நம்பவில்லை?" என்று வினவினாள்.

வேல்முருகன் பதில் சொல்லவில்லை. தனது இடது கையால், அவள் கைகளைக் காட்டினான்.

பரதவரின் கோபத்துக்குக் காரணம் அவளுக்கு அப்பொழுதுதான் புரிந்தது. அப்பொழுதும் அந்த வாலிபன் கையைத் தான் பிடித்து நிற்பதை உணர்ந்தாள். சட்டென்று அவன் கையை உதறிவிட்டு வேல்முருகனை ஏறெடுத்து நோக்கினாள்.

வேல்முருகன் அவள் செய்கையை ஆமோதிப்பது போல் தலையை அசைத்தான். "உக்கிரனும் அவன் ஆட்களும் எங்கே?" என்று வேல்முருகன் வினவினான், வாலிபனை நோக்கி.

"இருக்கும் இடம் தெரியாது. நீங்கள் வரும் காலடிச் சத்தம் கேட்டதும் ஓடிவிட்டார்கள்!" என்று சொன்னான் வாலிபன்.

வேல்முருகன் தன் பெரும் கண்களை உருட்டினான் ஒரு முறை. "நீ யார்?" என்று வினவினான்.

"ஒரு நாடோடி!" என்று உக்கிரனுக்குச் சொன்ன பாடத்தைத் திருப்பிப் படித்தான் வாலிபன்.

"உனக்கு ஊர் ஏதும் இல்லையா?" என்று பரதவர் தலைவன் மீண்டும் கேட்டான்.

"நாடோடிக்கு ஊர் ஏது?"

"பெயராவது உண்டா?"

"உண்டு."

"என்ன பெயர்?"

"சிலர் என்னை வீரன் என்று அழைக்கிறார்கள். என் தாய் இட்ட பெயர் நாராயணன். என் தந்தை இரண்டையும் சேர்த்து வீர நாராயணன் என்றழைத்தார். இவற்றில் எதை வேண்டுமானாலும் நீங்கள் எடுத்துக்



கொள்ளலாம்" என்ற வாலிபன் வேல்முருகனையும் மற்றப் பரதவர்களையும் நோக்கினான்.

வேல்முருகன் முகத்தில் மரியாதைக் குறி தோன்றியது. "வீரரே! இந்தப் பெயர் நன்றாயிருக்கிறது. பொருத்தமாகவும் இருக்கிறது.

"நீங்கள் கன்னித்தேவனுடன் போரிட்டதையும் அவளைக் காப்பாற்றிய விவரங்களையும் நீலவல்லி சொன்னாள்" என்ற வேல்முருகன், "ஆள் மாறாட்டத்தால் நீங்கள் ஒருவரையொருவர் கையைப் பிடித்து நின்றதும் நன்றாயிருந்தது!" என்றும் சொல்லிக் கலகலவென்று நகைத்தான். மற்றப் பரதவர்களும் அவனுடைய உற்சாகத்தில் கலந்து கொண்டு பெரிதாக நகைத்தார்கள்.

இந்தச் சிரிப்பைக் கேட்ட நீலவல்லியின் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது. இதழ்கள் கோபத்தால் மடிந்தன. ஒரு விநாடிக்குப் பிறகு சுடும் சொற்களை உதிர்த்தன. "வேல்முருகா! நீ இந்தப் பகுதியில் பெரிய வீரனென்று பெயர் எடுத்திருந்தாலும் உன் அல்ப புத்தி போகவில்லை. என்னைப் பார்த்து நகைக்கிறாய், ஒரு சிறிய தவறுக்காக!" என்று விடுவிடு என்று பேசினாள்.

மற்றப் பரதவர்கள் இதைக் கேட்டதும் சட்டென்று அடங்கினார்கள். வேல்முருகன் உதடுகளில் மட்டும் ஒரு சிறு புன்னகை தவழ்ந்தது. "அம்மா! என்ன சொன்னாய்? வயதுப் பெண் ஆண் பிள்ளையைப் பற்றி நிற்பது சிறு தவறு என்று நான் நினைக்கவில்லை!" என்றான்.

நீலவல்லி சிறிது நேரம் திணறினாள், என்ன பதில் சொல்வது என்று அறியாமல். "நான் பிடித்தது இவர் என்று தெரியாது. கன்னித்தேவன் என்று நினைத்தேன்!"

என்றாள் குழப்பமும் ஓரளவு பயமுங்கூடத் துளிர்த்த குரலில்.

வேல்முருகன் அப்பொழுதும் விடவில்லை. "அம்மா! கன்னித்தேவனும் ஆண் பிள்ளைதான் என்று நினைக் கிறேன்!" என்று சுட்டிக் காட்டினான்.

இதைக் கேட்டதும் சுய உணர்ச்சிகளைத் திரும்பப் பெற்ற நீலவல்லி மீண்டும் கோபம் நிறைந்த விழிகளைப் பரதவர் தலைவன் மீது திருப்பினாள். "கன்னித்தேவன் மனிதனல்ல, பெரிய பிசாசு!" என்று சொன்னாள் ஆத்திரத்துடன்.

"அந்தப் பிசாசுடன் இவர் மற்போர் செய்ததாகச் சொன்னாயே!" என்றான்.

"பார்த்ததைச் சொன்னேன்!" என்றாள் நீலவல்லி.

உரையாடலை வேறு மார்க்கத்தில் திருப்ப எண்ணிய அந்த வாலிப நாடோடி, "நீ பார்த்தாயா!" என்று வியப்புத் துலங்கிய குரலில் விசாரித்தான்.

"நீங்கள் ஏற்றிவிட்ட மரத்தில் இருந்தே பார்த்தேன். உக்கிரனின் ஆள் ஏந்தி நின்ற பந்த வெளிச்சத்தில் உங்கள் சண்டை விளக்கமாகத் தெரிந்தது. பிறகுதான் ஓசைப் படாமல் இறங்கி ஆற்றங்கரை வந்து பந்தத்தை ஆட்டி இவர்களை வரவழைத்தேன்" என்று கூறிய நீலவல்லி, "அப்பா! என்ன பயங்கரமான சண்டை! அவன் கைக்குள் சென்று நீங்கள் மறைந்ததும் நீங்கள் போய்விட்டீர்கள் என்றே நினைத்து மரத்தில் இருந்து மயக்கம் போட்டு விழ இருந்தேன். ஆனால் நீங்கள் எப்படியோ தப்பி அவனை வீழ்த்தியும் விட்டீர்கள்!" என்றும் சொன்னாள்.



அந்தச் சமயத்திலும் அந்த மற்போரை நினைத்ததால் சிறிது நடுங்கினாள் நீலவல்லி.

இதைக் கேட்ட வேல்முருகன், "அம்மா! இந்த விவரங்களை எல்லாம் நீ சொல்லவில்லையே. உன் தம்பியைத் தப்புவித்தவரை உக்கிரன் கொல்லப் பார்க்கிறான் என்றுதானே சொன்னாய்! சரி, நீ எதற்காக மரத்தில் ஏறினாய்?" என்று வினவினான்.

நீலவல்லி சற்றும் யோசிக்காமல், "இவர்தான் ஏற்றி விட்டார்!" என்று சொல்லி, வாலிபன் மீது கண்களைச் செலுத்தினாள்.

"இவர் ஏற்றி விட்டாரா?" வேல்முருகன் வாயைப் பிளந்தான்.

"தானும் ஏறிக்கொண்டார்!" என்றும் சொன்னாள் நீலவல்லி.

வேல்முருகனுக்கு ஏதும் புரியவில்லை. "மரத்தின் மீது ஏன் ஏறினீர்கள்?" என்று வினவினான்.

"பரதவர் தலைவரே! காரணம் சாதாரணம். நீலவல்லி யைத் தேடிக்கொண்டு உக்கிரன் காட்டுக்குள் வந்தான். அடிச்சுவடுகளைப் பார்த்து அடையாளம் பிடித்து வந்தான். அதற்குள் நீலவல்லியைப் பிடித்துவிட்ட நானும் நடக்கவே, நான்கு அடிச்சுவடுகளையும் ஆராய்ந்து வந்தான். பின்னால் யாரோ வரும் அரவம் கேட்கவே நீலவல்லியையும் மரத்தில் ஏற்றி நானும் ஏறிக் கொண்டேன். அந்த மரத்தின் அடிவரையில் வந்த உக்கிரன் காலடிகள் திடீரென்று மறைந்து விட்டதைப் பார்த்துக் குழம்பினான். சற்று அண்ணாந்து பார்த்திருக் கலாம். பார்க்கவில்லை. போய்விட்டான். பிறகு நான்

மட்டும் இறங்கிச் சென்றேன்" என்று விளக்கிய வீர நாராயணன், "பரதவரே! சில சமயங்களில் என்னைப் போன்ற நாடோடி கூடச் சுறுசுறுப்புடன் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. தோணியை இக்கரையில் கட்டியதும் துரத்தி வந்த தோணியில் இருந்தவர்களுக்குப் பயந்து நீலவல்லி காட்டுக்குள் ஓடிவிட்டாள். காட்டுக்குள் போனால் அங்கு இவள் தம்பியைக் கொல்ல ஏற்பாடு ஆகியிருந்தது. ஆகவே இருவரையும் காப்பாற்ற இரு புறங்களில் நான் வேலை செய்ய வேண்டியதாயிற்று. முதலில் நீலவல்லி அருகில் இருப்பதைச் சற்றே சலசலத்த மரச் சருகுகளின் ஒலியால் உணர்ந்து சிறுவனைப் பாதுகாக்கும் பணிக்குக் குதிரையை விட்டு, நீலவல்லி யைப் பாதுகாக்க நான் விரைந்தேன். இதுதான் விஷயம். இவள் தம்பி தப்பியதும் உக்கிரன் அழைப்புக்கிணங்க மற்போரும் வாட்போரும் செய்தேன். இதுதான் முழுக் கதை!" என்றும் சொன்னான்.

பரதவர் அனைவரும் அவனை வியப்புடனும் மிகுந்த மரியாதையுடனும் பார்த்தார்கள். வேல்முருகன் மட்டும் ஒரு கேள்வி கேட்டான், "உங்களிடம் வாள் ஏது மில்லையே!" என்று.

"உக்கிரன் வீரன் ஒருவனிடம் இருந்து வாளைக் கடன் வாங்கினேன். உக்கிரன் தோற்றதும் அங்கேயே போட்டு விட்டேன். திருப்பிக் கொடுக்கக் கூட அவகாசமில்லை. அதற்குள் நீங்கள் வந்து விட்டீர்கள்," என்றான் அலட்சியமாக.

"உக்கிரன் தோற்றுவிட்டானா!" என்று ஏக காலத்தில் பரதவர் கேட்டார்கள் வியப்புடன்.



"அந்தச் சண்டையை நான் பார்க்கவில்லையே!" என்றாள் நீலவல்லி பெருமை துலங்கிய குரலில்.

"அதற்குள் பரதவரை அழைத்துவர நீ ஓடியிருக்க வேண்டும்," என்று சர்வ சாதாரணமாகச் சொன்னான் வீரநாராயணன்.

"உக்கிரனை வாள் போரில் வெல்வது சாதாரண விஷயம் அல்ல!" என்றான் வேல்முருகன்.

"போரில் வெற்றி தோல்வி சகஜம். அதைப் பிரமாதமாக நினைக்க வேண்டாம்!" என்ற வாலிபன், தனது உதடுகளைக் குவித்து லேசாக ஊதினான் இரு முறை.

சில விநாடிகளில் சிறுவனைத் தாங்கிய புரவி பரதவர் கூட்டத்தை இடித்து விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தது. சிறுவன் தரையில் குதிக்க, நீலவல்லி அவனைத் தழுவிக் கொண்டாள். அத்துடன் தனது வேலை தீர்ந்ததென்று நினைத்த வீரநாராயணன், நீலவல்லியை நோக்கி, "உங்கள் தயவால் இன்று ஆற்றைத் தாண்டினேன். இனி நான் போகலாமா?" என்று விசாரித்துக் கொண்டே புரவியின் அருகில் சென்றான்.

வேல்முருகன் அதைத் தடுத்து, "இந்த இரவு இங்கேயே தங்குங்கள். காலையில் போகலாம்," என்றான்.

"இப்பொழுதே போய்விட்டால் நாளை விடியற் காலையில் கரவந்தபுரம் போய்விடுவேன்," என்றான் நாடோடி.

"காலைப் பயணம் சவுகரியமாயிருக்கும். தவிர உங்களுக்கு உணவு தயாரிக்கிறோம்!" என்று வேல் முருகன் கட்டாயமாகச் சொன்னான்.

மறுக்க வழியின்றி, அவர்களுடன் சென்றான் வாலிபன். தாமிரபரணிக் கரையில் பரதவர் அடுப்புகளை மூட்டி உணவு சமைத்தார்கள். அதை நீலவல்லியே பரிமாறினாள், வாலிபனுக்கு. பிறகு வேல்முருகனைத் தவிர மற்றப் பரதவர் தோணிகளில் அக்கரை சென்றனர்.

வேல்முருகன் நீலவல்லியின் தோணியிலிருந்து இரு கோணிகளைக் கொண்டு வந்து நிலத்தில் விரித்தான், வாலிபன் படுக்க. அவனும் சிறுவனும் ஒரு கோணியில் படுத்தார்கள். நீலவல்லி சற்று எட்ட குவிந்து கிடந்த மணலில் படுத்தாள்.

வீரநாராயணன் தனது புரவியைப் படுக்கச் சொல்லி அதன் ஒருபுற வயிற்றைத் தலையணையாக்கிக் கொண்டு கோணியில் மல்லாந்து படுத்து ஆகாயத்தை நோக்கினான். அவனுக்கு உறக்கம் வரவில்லை. ஏதேதோ எண்ணங்கள் மனத்தில் உலாவின. கேள்விகள் பிறந்தன. எதற்கும் விடை காண முடியவில்லை, அவனால். "இப்படி ஒரு இரவை வீணாக அடிப்பது சரியா?" என்று தன்னைக் கேட்டுக் கொண்டான்.

அது சரிதான் என்பதையும், அதனால் எதிர்பாராத பெரிய பலன் ஏற்பட்டதையும் மறுநாள் காலையில் உணர்ந்து கொண்டான்.

அதற்குப் பூர்வாங்கமாக நடுநிசி தாண்டியதும் ஒரு தோணி அக்கரையிலிருந்து வந்தது. அதில் விளக்கு ஏதுமில்லை. அதிலிருந்து கும்மிருட்டில் ஒருவன் இறங்கினான். அவன் கையில் சிறு மூட்டை இருந்தது. படகோட்டி யாரும் இல்லாததால் அவனே படகை ஓட்டி வந்திருக்க வேண்டும் என்று வாலிபன் தீர்மானித்தான்.



இக்கரையில் இறங்கியதும் அந்த மனிதன் தன் கையிலிருந்த சிறு மூட்டையைத் தடவினான் ஆசையாக. பிறகு காட்டின் ஒரு பகுதிக்குள் நுழைந்து சில விநாடிகள் நின்றான். காட்டுக்குள் இருந்து வந்த வேறொருவன் அவனுடன் சேர்ந்து கொண்டான். அவனிடம் அந்தச் சிறு மூட்டையைக் கொடுத்த தோணிப் பயணி திரும்பித் தோணியில் ஏறி அக்கரை சென்றான்.

மற்றவன் அவன் போவதைப் பார்த்துக் கொண்டே நின்றான். பிறகு காட்டுக்குள் நடந்தான். "இந்த மர்மப் பயணி யார்? காட்டுக்குள்ளிருந்து வந்தவன் யார்?" என்ற கேள்விகளை வீரநாராயணன் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். "நான் வந்த வேலைக்கும் இதற்கும் ஏதாவது சம்பந்தமிருக்குமா?" என்றும் வினவிக் கொண்டான். அந்தச் சந்தேகங்களுக்கு விடை காண எழுந்திருந்து காட்டில் மறைந்தவனைத் தொடர முற்பட்டான்.

## 5. அரசப் பிரதிநிதி

எழுந்ததுமே அவன் புரவி, வீரநாராயணன் வேறு, தான் வேறு அல்ல என்பதை நிரூபித்து எந்தவிதச் சத்தமும் செய்யாமல் மிகச் சாமர்த்தியமாக எழுந்து நின்றது. அவன் காட்டை நோக்கி அடிமேல் அடி வைத்து நடந்ததும் அதுவும் அப்படியே நடக்கலாயிற்று. நடந்தது அவ்விருவர் மட்டுமல்ல; மூன்றாவது ஒரு நபரும் நடந்தார்.

சற்று எட்ட இருந்த மணல் மேட்டில் படுத்துக் கொண்டு இருந்த நீலவல்லி கண்ணை மூடியிருந்தாளே தவிர உறங்கவில்லை. அந்த இரவு நடந்த நிகழ்ச்சிகள் அவள் சித்தத்தில் வலம் வந்து கொண்டிருந்தன. இந்த வாலிபன் இருட்டிய பிறகு தோணியைக் கேட்டிரா விட்டால் மற்ற நிகழ்ச்சிகள் ஏற்படக் காரணமில்லை என்பது நன்றாகத் தெரிந்தது அவளுக்கு. உக்கிரனோ அவனது ஆட்களோ பரதவர் குடியிருப்பு இருக்கும் பகுதிகளில் தலைகாட்ட மாட்டார்கள் என்பதையும், தலை காட்டினால் தலை போய்விடும் என்பதையும் அவள் உணர்ந்திருந்தாள். ஆதலால், அன்றைய ஆபத்தான நிகழ்ச்சிகளுக்குத் தானே காரணம் என்பதையும் சந்தேகமறப் புரிந்துகொண்டாள். தான் வீட்டில் இருக்காமல் தம்பியை விட்டு இருட்டு வேளையில் தோணிக் கரைக்கு வந்திருக்காவிட்டால் தம்பியையும் உக்கிரன் பிடித்திருக்க முடியாது என்பதும் அவள் சித்தத்துக்குப் புலனாயிற்று.



இத்தனையிலும் அவளுக்கு ஒரு விஷயம் மட்டும் விளங்கவில்லை. அந்த வாலிபனுக்கு இரவில் தான் தோணி ஓட்டி அக்கரை சேர்க்க வேண்டிய அவசியமென்ன? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல அவளால் முடியவில்லை. அவன் அழகு அதற்குக் காரணமாயிருக்க முடியாது. "அழகாயிருக்கிறார்கள் என்பதற்காக இருட்டில் தோணிவிட முடியுமா என்ன?" என்று அவள் தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். அவன் வீரத்தில் கொண்ட அன்பா? "இல்லை, அவன் வீரத்தை இக்கரை வருமுன்பு யார் பார்த்தார்கள்?" என்றும் சொல்லிக் கொண்டாள். திரும்பத் திரும்ப சற்று எட்டப் படுத்திருந்த வாலிபனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தாள். அடிக்கடி சிந்தனையை அகற்றி லேசாகக் கண் திறந்து அவனைப் பார்க்கவும் செய்தாள்.

அவள் பார்த்த சமயங்களில் அவன் கண்கள் மூடிக் கிடந்தன. சிறிதும் சலனமின்றி நன்றாக உறங்கிக்கொண்டிருந்தான். அதுகூட அவளுக்குக் கோபத்தையே அளித்தது. "காட்டில் நடந்த இத்தனை ஆர்ப்பாட்டத்துக்குப் பிறகு எப்படித்தான் தூக்கம் வருகிறதோ? சுரணை கெட்ட மனிதன்!" என்று அந்த வாலிபனைக் கடிந்தும் கொண்டாள். அந்தச் சமயத்தில்தான் அந்தத் தோணியும் வந்தது. அடுத்து நடந்ததை வீரநாராயணன் எப்படிக் கவனித்தானோ அப்படியே அவளும் கவனித்தாள். ஆகவே எஜமானனும் குதிரையும் பயணப்பட்ட உடன், அவளும் எழுந்து அவர்களைத் தொடர்ந்தாள். சிறிது தூரம் காட்டுக்குள் சென்ற பின்பு அவன் சென்ற திசையில் செல்லாமல் வேறு திசையில் சென்றாள். சுமார் கால் காதம் நடந்திருப்பாள்.

அடவிக்குள் யாரோ சிலர் புரவிகளில் வரும் சத்தம் கேட்கவே சட்டென்று பக்கத்து மரத்தில் ஏறிக் கொண்டாள். வந்தவை இரண்டே புரவிகள். அவற்றில் இரண்டு பாண்டிய நாட்டுப் போர் வீரர்கள் அமர்ந்து இருந்தார்கள். ஒரு வீரன் ஏதோ பெரிய பதவி வகிப்பவன் போல் தென்பட்டது. அவன் உடை மிகுந்த படாடோபத் துடன் காணப்பட்டது. அவன் அணிந்திருந்த நீண்ட வாளின் பிடியில் நவரத்தினங்கள் இழைக்கப்பட்டிருந்தன. அவன் தோரணையும் பக்கத்திலிருந்தவனை அவன் பார்த்த பார்வையும் அதிகாரத்தின் சின்னங்களாக விளங்கின.

"இந்த இடத்தில்தானே அவனை எதிர்பார்க்கிறாய்?" என்று கேட்டான் பெரிய மனிதன்.

"ஆம்" என்றான் மற்றவன்.

"சமந்தா! இத்தனை நாளபோல் நாம் ஏமாற வேண்டாமே?" என்று கேட்டான் மீண்டும் பெரிய மனிதன்.

"அச்சப்பட்டால் காரியம் நடக்காது!" என்றான் மற்றவன்.

"அச்சப்பட்டதாக யார் சொன்னது?"

"சரி, அது கிடக்கட்டும். அவநம்பிக்கைப்பட்டாலும் காரியம் நடக்காது."

"அவநம்பிக்கைப் பட்டதாக யார் சொன்னது?"

"இத்தனை நேரம் நீங்கள் கேட்ட கேள்விகளில் நம்பிக்கை மிகக் குறைவாயிருந்தது!" என்று தெளிவு படுத்தினான் சமந்தன்.



படாடோபி சிறிது சிந்தித்தான். "சமந்தா! இந்த விவாதத்தால் பயனில்லை. சொன்னவன் சரியான சமயத்தில் வரவேண்டும், இல்லாவிட்டால் நமது நேரம் வீணாகிறது. உருப்படியாக எதையும் செய்ய முடிய வில்லை!" என்றான் படாடோபி.

சமந்தன் அவனைக் கூர்ந்து நோக்கினான் சில விநாடிகள். "சற்றுப் பொறுங்கள். அதோ மனிதனின் காலடிச் சத்தம் கேட்கிறது!" என்று கூறிக் காலடிச் சத்தம் வந்த திக்கையும் சுட்டிக் காட்டினான்.

பிறகு இருவரும் ஏதும் பேசவில்லை. விநாடிகள் மெள்ள நகர்ந்தன. காலடிச் சத்தம் அவர்கள் இருக்கு மிடத்தை நோக்கி வந்தது. அவர்கள் இருக்குமிடத்தை அடைந்தான், அந்த ஒலியைக் கிளப்பினவன். அவன் கைகள் இரண்டையும் கவனித்ததும் அவனுக்காகக் காத்திருந்த இருவரும் சினத்தின் எல்லையை அடைந்தனர்.

"காத்தா! இதற்கென்ன அர்த்தம்?" என்று வினவினான் பெரிய மனிதன்.

"எது எஜமான்?" என்று கேட்டான் வந்தவன்.

"கை வெறுங்கையா யிருக்கிறதே!" என்றான் சமந்தன்.

"என்னை ஒரு மனிதன் தொடர்ந்து வந்தான்... அந்த மனிதன்...!" வாசகத்தை முடிக்கவில்லை.

இதைக் கேட்டதும் பெரிய மனிதன், சமந்தன் இருவருமே அதிர்ச்சியடைந்தனர். "யாரவன்?" என்று வினவினான் பெரிய மனிதன்.

"தெரியாது. புதியவனாக இருக்கிறான்."

"புதியவனுக்கு இங்கென்ன வேலை?" சமந்தன் கேட்டான்.

"அவனைக் கேட்க அவகாசமில்லை!" என்றான் வந்தவன்.

"அவனை மரத்தில் கட்டிப் போட்டு விசாரிக்க வேண்டியதுதானே?" சமந்தன் மீண்டும் கேட்டான்.

"அவன் பார்வை கொலைப் பார்வையாயிருக்கிறது. தவிர, அவன் மந்திரவாதி போலிருக்கிறது."

"என்ன உளறுகிறாய்!"

"உளறவில்லை எஜமான். அவன் புரவியொன்று அவனுடன் வருகிறது. அதன் காதில் அவன் எது சொன்னாலும் கேட்கிறது."

"உனக்குச் சித்தப்பிரமை ஏதுமில்லையே?"

"இப்படித்தான் நீங்கள் நினைப்பீர்கள். ஆனால், நடந்ததைக் கேளுங்கள். அவன் கேட்டான், புரவியை நோக்கி, "இங்கு யாரோ நம் முன் செல்கிறார்கள், எந்தப் பக்கம் போகிறார்கள்?" என்று.

"புரவி இருமுறை காற்றை மோப்பம் பிடித்தது. அடுத்த நிமிடம் நான் மறைந்திருந்த இடத்தை நோக்கி வந்தது. நான் பக்கத்து மரங்களில் மறைந்து சுற்றி வட்டமாகப் போக்குக் காட்டி இங்கு வந்தேன்!" என்று விளக்கினான் வந்தவன்.

இதைக் கேட்டதும் சமந்தன் பெரியவனை நோக்கி, "காயல் அரசப் பிரதிநிதிக்கு இதில் பயமேதுமில்லை. எங்களைப் போன்ற சின்ன வேலைக்காரர்கள்தான் சிக்கிக் கொள்வார்கள்!" என்றான்.



"சமந்தா! உன்னை எனக்குச் சமமாகத்தானே நடத்துகிறேன். தவிர காயலில் நீதி நிர்வாகம் உன் கையில்தானே இருக்கிறது?" என்று சமாதானப்படுத்த முயன்றான்.

சமந்தன் சமாதானமானதாகத் தெரியவில்லை. "விஷயங்கள் வெளிவந்து நான் சிறையில் சிக்கிக் கொண்டால் நீதி நிர்வாகம் பயன்படாது. என்னை வேறொருவர் விசாரிப்பார். இப்பொழுதுகூட விடை கொடுத்தால் நான் இந்த விவகாரத்திலிருந்து விலகி விடுகிறேன்!" என்றான் சமந்தன்.

"நீ போவதை யார் தடுத்தது?" என்று கேட்டான் காயலில் உள்ள பாண்டியப் பிரதிநிதி. அவன் குரலில் விபரீத ஒலியிருந்தது.

"உண்மையிலேயே என்னை விட்டுவிடுகிறீர்களா?" என்று சமந்தன் வினவினான்.

"தாராளமாக!" என்றான் பிரதிநிதி.

சமந்தன் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. "பிரபு! நீங்கள் தர்மவான். இத்தனை கருணையை நான் எதிர்பார்க்கவில்லை!" என்று கூறினான்.

"போய் வா, சமந்தா! வலுக்கட்டாயமாக நான் யாரையும் உடன் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. உன் ஊதியத்தைப் பொக்கிஷ அதிகாரியிடம் இருந்து வாங்கிக் கொள்," என்றான்.

சமந்தனிடம் இருந்து திருப்திக்கும் மகிழ்ச்சிக்கும் அறிகுறியாகப் பெருமூச்சொன்று வந்தது. புரவியில் இருந்தபடியே எஜமானுக்குத் தலைவணங்கிவிட்டுப் புரவியை நகர்த்தினான். புரவி பத்தடி தூரம்

சென்றிருக்கும். "சமந்தா! ஒரு விஷயம் மறந்துவிட்டேன்," என்றான் பிரதிநிதி.

சமந்தன் புரவியைத் திருப்பிப் பிரதிநிதியை நோக்கி னான். மின்னல் வேகத்தில் அவன் வாய் பிளந்தது. இதயத்தில் இருந்து இரத்தம் குமிழியெடுத்துப் பெருகியது. சமந்தன் கண்களில் பெருவியப்பு தெரிந்தது. அவன் புரவி யிலிருந்து தரையில் விழுந்தபோது.

அவன் புரவியிலிருந்து திரும்பிய சமயத்தில் பிரதிநிதி தன் குறுவாளை எடுத்து மின்னல் வேகத்தில் வீசி விட்டான். அதனால் நேர்ந்த விபரீதத்தைக் கண்டு வெறுங்கையோடு வந்தவன் நடுங்கினான். மரத்தின் மீதிருந்த நீலவல்லியும் நடுங்கினாள். அந்த ராஜப்பிரதிநிதி யின் கொடுமையைப் பற்றிப் பலமுறை கேட்டிருக்கிறாள். ஆனால், இப்படித் தன்னை நம்பினவனை இச்சகம் பேசிப் போகவிட்டு, பிறகு கொன்ற குற்றம் பயங்கரமாயிருந்தது. அந்தச் சமயத்தில் அவள் உட்கார்ந்திருந்த மரக்கிளையின் ஒரு பகுதி மளமளவென்று முறிந்தது.

## 6. காத்தன் காட்டிய வழி

காயல் ராஜப்பிரதிநிதி மட்டும் மிகுந்த எச்சரிக்கை யுடன் இருந்திராவிட்டால், அந்த மரக்கிளை அவன் தலையில் விழுந்திருக்கும்.

ஆனால், கிளை முறியும் சத்தம் கேட்ட உடனேயே ராஜப்பிரதிநிதி தனது புரவியைக் கனவேகத்தில் அப்புறம் நகர்த்திவிடவே, அந்தக் கிளை அருகில் நின்றிருந்த காத்தன் தலையில் விழுந்தது. ஆனால், கிளை அதிக பாரமான கிளையல்லவாதலாலும், மரத்தின் நுனிக் கிளையானபடியாலும், அப்படியொன்றும் பெரிய காயம் காத்தன் தலைக்கு ஏற்படாததால், அவன் 'அப்பாடா' என்று சிறு ஒலியொன்றை எழுப்பிவிட்டு மரக்கிளையை எடுத்து எட்ட எறிந்தான்.

பிறகு ராஜப்பிரதிநிதி, காத்தன் இருவருமே மரத்தின் முறிந்த கிளை இருந்த இடத்தை அண்ணாந்து பார்த்தனர். ஆனால், இருட்டின் விளைவு காரணமாக ஏதும் தெரியாததால், காயல் பிரதிநிதி, "காத்தா! மரத்தில் ஏறிக் கிளையை முறித்தது யாரென்று பார்!" என்று உத்தரவிடவே, காத்தன் தனது மூதாதை யாரென்று நிரூபிக்கும் வகையில் மரத்தில் தொத்தி ஏறினான். பல விநாடிகள் சென்றும் காத்தன் கீழே இறங்காததால் சந்தேகத்துக்கு உட்பட்ட பிரதிநிதி, "காத்தா, மரத்தின் மேல் என்ன செய்கிறாய்?" என்று வினவினான்.

பதிலுக்கு, அவன் மீது பெரிய கொய்யாக்காயொன்று வேகமாக வந்து அண்ணாந்திருந்த அவன் நெற்றியைத் தாக்கியது. "காத்தா! விளையாடுகிறாயா?" என்று சீறினான் பிரதிநிதி.

"எஜமான்! இந்தக் குரங்கைப் பிடிக்க முடியவில்லை. கிளைக்குக் கிளை தாவுகிறது. இன்னொரு கிளையையும் முறிக்கப் பார்க்கிறது!" என்று காத்தன் கூறினான்.

"மடையா! உன்னை யார் குரங்கைப் பிடிக்கச் சொன்னார்கள்?" என்று உஷ்ணமாகக் கேள்வியை வீசினான் பிரதிநிதி.

காத்தன் பெருமூச்சு விட்ட சத்தம் மரத்திலிருந்தே கேட்டது பிரதிநிதிக்கு. "எஜமான், நீங்கள் தானே என்னை மரத்தில் ஏறச் சொன்னீர்கள்?" என்று கூவினான் காத்தன்.

"அங்கு யாராவது மனிதர் ஒளிந்திருக்கிறார்களா என்று பார்க்கச் சொன்னேன். குரங்கையா பிடிக்கச் சொன்னேன்?" என்று மறுபடியும் கேட்ட பிரதிநிதி, "சரி, கீழே இறங்கி வா!" என்று உத்தரவும் இட்டான்.

காத்தனிடமிருந்து உடனடியாகப் பதிலேதும் வராததால், சினம் தலைக்கேறியதால், "நான் சொன்னது உன் காதில் விழவில்லையா?" என்று அதிகாரத்துடன் கூவினான்.

"எஜமான்!" தீனமாயிருந்தது காத்தன் குரல்.

"என்னடா?"

"குரங்கை நான் பிடிக்கவில்லை."

"என்ன உளறுகிறாய்?"



"குரங்கு என்னைப் பிடித்துக் கொண்டிருக்கிறது."

"பக்கத்திலிருக்கிற கிளையொன்றை முறித்துவிட்டு, விரட்டு அதை."

"கிளையை முறித்து அது கையில் வைத்துக் கொண்டிருக்கிறது."

"எப்படியாவது தொலைந்து போ, காலையில் காயல் வந்து சேர்!" என்று உத்தரவிட்ட பிரதிநிதி தனது புரவியை அந்த இடத்திலிருந்து நகர்த்தினான். போகும் போது, "வரவரக் கொற்கைக் காட்டில் குரங்கு சேஷ்டை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஆட்களை விட்டு இவற்றை அழித்துவிட வேண்டும்!" என்று காத்தன் மீதிருந்த கோபத்தைக் குரங்குக் கூட்டத்தின் மீது திருப்பினான்.

அவன் போகும்போது காத்தன் மரத்தின் மேலிருந்து கூவினான், "எஜமான்! என்னைத் தனியாக விட்டுப் போகாதீர்கள்!" என்று.

ஆனால் பிரதிநிதி அதைக் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. அவன் அந்தக் காட்டுப் பகுதியை விட்டு வெளியேறித் தாமிரபரணி நதிக்கரையை அடைந்து புரவியைக் கனவேகத்தில் செலுத்தினான்.

மரத்தின் மீதிருந்த காத்தன், "அம்மா! உன் கத்தியை எடுத்துவிடு. நீ என்னைக் கொன்றாலும் பாதகமில்லை. எப்படியும் நான் நாளை சாகப் போகிறேன்!" என்றான் துக்கம் தொண்டையை அடைக்க.

அந்தப் பெரிய மரக்கிளையில் தனது குறுவாளைக் காத்தன் கழுத்தில் அழுத்திய வண்ணம் உட்கார்ந்திருந்த

நீலவல்லி, "இனிப் பயமில்லை. வா, இறங்கிப் போவோம்" என்றாள்.

அவள் இறங்குவதற்குக் காத்தன் வழிவிட்டான். "நீ போ முன்னே!" என்று விரட்டிய நீலவல்லி அவன் இறங்கியதும், அவளும் இறங்கினாள். அவன் தரையில் குதித்ததும் அவளும் குதித்தாள். அப்பொழுதும் அந்தப் பயங்கரக் குறுவாள் கையிலிருந்தது.

அவள் இறங்கியதும், "அம்மா! நான் போகலாமா?" என்று வினவினான்.

"எங்கே போவதாக உத்தேசம்?" என்று நீலவல்லி கேட்டாள்.

"என் ஊருக்கு."

"எது உன் ஊர்?"

"காயலுக்கு."

"காயலில் இருந்து இங்கு என்ன வேலையாக வந்தாய்?"

"பிரதிநிதி வேலையாக."

"பிரதிநிதிக்கு என்ன வேலை செய்கிறாய்?"

இதற்குக் காத்தன் பதில் சொல்லவில்லை. மவுனமே சாதித்தான். "மீண்டும் கேட்கிறேன். பிரதிநிதிக்கு என்ன வேலை செய்கிறாய்?" என்று அதட்டினாள் நீலவல்லி.

"அதை மட்டும் கேட்காதீர்கள். சொன்னால் என் உயிர் போய்விடும்!" என்று மன்றாடினான் காத்தன்.

நீலவல்லியின் முகத்தில் அதுவரை காணப்படாத கோபம் துளிர்த்தது. "சொல்லாதிருந்தாலும் உன் உயிர் போய்விடும்!" என்று கத்தியைக் காட்டினாள் நீலவல்லி.



"அம்மணி! உங்கள் உயிரைக் காப்பாற்றவில்லையா நான் சற்று முன்பு? உங்களை..." காத்தன் மென்று விழுங்கினான்.

"குரங்கு என்று சொன்னாய்?" என்ற வாசகத்தை முடித்த நீலவல்லி, "டேய்! அடிமுட்டாள், என்னைக் குரங்கென்று சொன்னதற்கே உன்னைக் கொல்லலாமே!" என்று சீறினாள்.

காத்தன் விழித்தான். "அம்மணி! இது அக்கிரமம். நீங்கள்தானே அப்படிச் சொல்லச் சொன்னீர்கள்!" என்று கெஞ்சினான்.

நீலவல்லி விடவில்லை அவனை. "டேய் காத்தா! என்னை அவமதிப்பதை மன்னித்துவிட்டேன்!" என்று கூறினாள். அவனைப் பார்த்து ஆதரவாகப் புன்முறுவலும் காட்டினாள்.

காத்தான் ஆசுவாசப் பெருமூச்சு விட்டான். "அம்மணி! உங்கள் குணம் தங்கம்!" என்றும் பாராட்டினான்.

"மன்னிப்புக்குப் பதில் நீ என்ன செய்யப் போகிறாய்?" நீலவல்லியின் குரல் குழைந்தது.

"உத்தரவிட்டுப் பாருங்கள்!" என்றான் காத்தன்.

நீலவல்லி அவனைக் கருணைக் கண்களால் நோக்கினாள். "காத்தா! நீ உண்மையில் நல்லவன்!" என்று அன்புடன் சொல்லவும் செய்தாள்.

"உங்கள் அடிமை அம்மணி!" காத்தன் குழைந்தான்.

"சரி, பிரதிநிதிக்கு ஒரு மூட்டை கொண்டு வந்தாயல்லவா?"

"கொண்டு வரவில்லை."

"சரி, மூட்டையைப் பற்றி அவர் கேட்டாரல்லவா?"

"ஆம்."

"அது இருக்குமிடத்துக்கு என்னை அழைத்துப் போ."

காத்தன் முகத்தில் திகில் பெரிதும் உதயமாயிற்று. "அம்மணி! அந்த ஓர் இடத்திற்கு மட்டும் உங்களை நான் அழைத்துப் போக முடியாது!" என்று கிலி பொருந்திய சொற்களை உதிர்த்தான்.

நீலவல்லி சிந்தித்தாள். "சரி, என்னை அழைத்துப் போக வேண்டாம். நான் ஒருவரை அனுப்புகிறேன். அவரை அழைத்துப் போ," என்றாள்.

"யாரவர் அம்மணி?" என்று காத்தன் கேட்டான்.

நீலவல்லி முகத்தில் மகிழ்ச்சியின் சாயை படர்ந்தது. "நீ ஒரு புரவி வீரரைப் பற்றிப் பிரதிநிதியிடம் சொன்னா யல்லவா...?" என்று வாசகத்தை முடிக்காமல் விட்டாள் நீலவல்லி.

"ஆம், அம்மணி!" என்றான் காத்தன் சந்தேகம் நிரம்பிய குரலில்.

"அவரை அழைத்துப் போ," என்று நீலவல்லி கூறினாள்.

காத்தன் கிலி அதிகமாயிற்று. "அம்மணி! அவரைப் பார்த்தால் நல்லவராகத்தான் தெரிகிறது. ஆனால் என் நண்பர்கள் அவரைப் பற்றி நல்ல அபிப்பிராயம் சொல்ல வில்லையே!" என்றான்.

"யார் உன் நண்பர்கள்?"

"ஒருவனைச் சொல்கிறேன்."

CPL 6 9 4 9 9 5



"சொல்."

"கன்னித்தேவன்!" என்ற சொல்லைப் பயபக்தியுடன் உதிர்த்தான் காத்தன்.

அந்தப் பெயரைக் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டது நீலவல்லிக்கு. "யார், உக்கிரனின் கையாளா?" என்று வினவினாள் கடுமையாக.

694995

காத்தன் முகத்தில் வியப்பும் கிலியும் கலந்து உலாவின. "கன்னித்தேவனை உங்களுக்கு முன்பே தெரியுமா?" என்று வினவினான் காத்தன், தனது உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு.

"அவன் என் நண்பன்!" என்று நீலவல்லி பெரும் பொய்யைச் சொன்னாள்.

894.8113 SAN:1

"உங்கள் நண்பரா?" காத்தன் குரலில் வியப்பு மிக அதிகமாயிருந்தது.

"வேண்டுமானால் தேவனைக் கேட்டுப் பார்ப்போம், வா!" என்ற நீலவல்லி காட்டுக்குள் நடக்கத் தொடங்கி னாள்.

"அவர் தற்சமயம் இருக்குமிடம் உங்களுக்குத் தெரியுமா?" என்று வினவினான் காத்தன்.

"தெரியாமலா போகிறேன்!" என்று நீலவல்லி மேலும் நடந்தாள்.

காத்தன் நீலவல்லியின் மோக வலையில் வீழ்ந்தான். "அம்மணி! வழி கரடுமுரடாயிருக்கிறது. பந்தமும் இல்லை நம்மிடம். நான் முன்னால் வழிகாட்டிச் செல்கிறேன், நீங்கள் என்னைத் தொடர்ந்து வாருங்கள்," என்ற காத்தன் முன்னால் நடந்தான்.

நீலவல்லி, "சற்று இரு காத்தா!" என்று கூறிக் கீழிருந்த நீளக் காட்டுச் சுள்ளியொன்றை எடுத்து, இரண்டு சுக்காங் கற்களை எடுத்துத் தட்டித் தீ மூட்டிச் சுள்ளியைப் பற்ற வைத்தாள். "காத்தா! இதை எடுத்துக் கொண்டு முன்னால் செல். நான் பின்னால் வருகிறேன்," என்று கூறக் காத்தன் சுள்ளிப் பந்தம் காட்டி முன் நடந்தான்.

அவன் சென்ற வழி மிகவும் கரடுமுரடாயிருந்தாலும் நீலவல்லிக்கு அந்தக் காட்டுப் பகுதி மிகவும் பழக்க மானதால் அவள் அனாயாசமாக அவனைப் பின்பற்றிச் சென்றாள். காத்தன் நடந்து கொண்டே போனான். மூன்றாம் ஜாமம் கடக்கும் வேளை வந்தும் கூட அவன் நடையை நிறுத்தாததாலும், தான் எண்ணிய வழிக்கு நேர் எதிர்த் திக்கில் அவன் நடந்து சென்றதாலும், "காத்தா! நீ எங்கு போகிறாய்?" என்று வினவினாள்.

காத்தன் திரும்பிப் பார்க்காமலே பதில் சொன்னான், "அம்மணி! நீங்கள் உத்தரவிட்ட இடத்துக்குத்தான்!" என்று.

"அந்த இடம் இத்தனை தூரம் இருக்கிறதா?" என்று வினவினாள் நீலவல்லி.

"இருக்கிறது அம்மணி!" என்று காத்தன் மேலும் நடந்தான்.

இருவரும் கிழக்கே நீண்ட தூரம் வந்துவிட்டதாக நீலவல்லிக்குத் தோன்றியதால், "நில் காத்தா!" என்று கடுமையாக உத்தரவிட்டாள்.

காத்தன் நிற்கவில்லை; நடந்தான். நீலவல்லி மீண்டும் கூறினாள், "காத்தா! நில்," என்று.



காத்தன் நிற்கவில்லை. நீலவல்லி மட்டும் நின்றாள்.

"காத்தா! ஒரு அடி நீ நகர்ந்தால் பிணமாகி விடுவாய்!" என்று எச்சரித்த நீலவல்லி தனது கையிலிருந்த குறுவாளை ஓங்கினாள்.

காத்தனும் சரேலென்று திரும்பிச் சுள்ளியை நெருப்போடு அவள் முகத்தை நோக்கி வீசினான். அதே சமயத்தில் குறுவாளை ஓங்கிய நீலவல்லியின் கையைப் பின்னாலிருந்து யாரோ பலமாகப் பற்றினார்கள். அவள் தலையில் பலமான அடியொன்றும் விழுந்தது. அவள் நினைவு இழந்தாள். அரை நினைவாயிருக்கும் சமயத்திலேயே அவள் காதில் பலமான சிரிப்பொலி விழுந்தது. அந்தச் சிரிப்பை உதிர்த்தவன் யாரென்று உணர்ந்ததன் விளைவாக ஏற்பட்ட சினம் அவளை ஆட்கொள்ளு முன்பு அவள் நினைவிழந்து நிலத்தில் சாய்ந்தாள்.

# 7. கடலாடு படலம்

எத்தனை நேரம் நினைவிழந்த நிலையில் கிடந்தாளோ நீலவல்லிக்கே புரியவில்லை. கண்ணை விழித்த போது தான் இருந்த நிலை கண்டு அவள் பிரமித்தாள். அதுவரை தான் கண்டதெல்லாம் கனவா அல்லது அப்பொழுது புலனான நிலைதான் கனவா என்பது அவளுக்குப் புரியவில்லை. அப்பொழுது காண்பது கனவாயிருக்கும் பட்சத்தில் அந்தக் கனவை இழக்க இஷ்டப்படாமல் மீண்டும் அவள் இமைகளை மூடிக்கொண்டாள்.

அவள் விழித்த நேரத்தில் கதிரவன் கடலில் உதயமாகிக் கொண்டிருந்தான். கடலலைகள் அவள் காலை அலம்பி அலம்பிச் சென்று கொண்டிருந்தன. உதடுகளை நாவினால் தடவிப் பார்த்த நீலவல்லி அது உப்புக் கரித்ததை உணர்ந்து தனது முகமும் கடல் நீரால் கழுவப்பட்டிருப்பதைப் புரிந்து கொண்டாள். இருப்பினும் தான் எப்படி அங்கு வந்தாள், எப்படி வீரநாராயணன் மடியில் அப்பொழுது கிடந்தாள் என்பது புரியவில்லையாகையாலும் அந்த ஆண்மகன் மடியில் படுத்திருந்தது வேதனையும் வேட்கையும் கலந்த உணர்ச்சிகளை உடலெங்கும் பரவ விட்டதாலும், அவள் கண்களைத் திறக்கவும் வெட்கினாள். ஆதலால் பெரிய மயக்கம் காட்டி மீண்டும் இமைகளை மூடிக்கொண்டாள்.

ஆனால் அலை ஓரத்தில் ஒரு காலை மடித்து மண்டியிட்டுத் தனது மடியில் அந்த மலரைக் குறுக்கே படுக்க விட்டு, முகத்தில் நீர் அடித்து மயக்கம் தீர்த்துக்கொண்



டிருந்த வீரநாராயணனுக்கு, அவள் இமைகளை அனாவசியமாக இறுக மூடியதிலிருந்து அவள் உண்மை மயக்கம் தீர்ந்து விட்டதென்பது நன்றாகப் புலனானதால், அவன் தனது இதழ்களில் புன்முறுவலொன்றைத் தவழ விட்டான். அவள் மீது தனது கண்களையும் பூர்ணமாக ஓடவிட்டான். படகு தள்ளியதால் திண்மையாகி உருண்ட கைகள், கச்சையை மீறி வெளிவரத் திமிறிய இரட்டை மொட்டுகள், வழவழத்த கொழுத்த கன்னக் கதுப்புகள், வெளேரென்ற கழுத்து, தனது காலுக்குக் குறுக்கே கிடந்த பருத்த தொடைகள், அவற்றுக்குள்ளே சற்று ஒட்டிக் கிடந்ததாலேயே அழகையும் பரிமாணத்தையும் ஓரளவு வெளிப்படையாகக் காட்டிய இந்திர ஜாலம்— இத்தனையையும் அந்த வாலிபன் நன்றாகக் கவனித்தான். அவன் அப்படித் தன்னை ஊடுருவிப் பார்த்ததால் நிலை குலைந்த நீலவல்லி ஒரு பெரிய "உம்"காரம் கொட்டிப் பெருமூச்சு விட்டுக் கண்களை மெதுவாகத் திறந்தாள். "நான் எங்கிருக்கிறேன்?" என்றும் வினவினாள். அவள் மார்பு மிதமிஞ்சிய உணர்ச்சிகளால் படக்படக்கென்று அடித்துக் கொண்டது.

"பயப்படாதே! என்னிடந்தான் இருக்கிறாய்!" என்ற அந்த வாலிபன், அவள் மார்பின் பதற்றத்தைப் பார்த்து அதன் எழுச்சியில் கையை வைத்து, "உன் மார்பு ஏன் இப்படி அடித்துக் கொள்கிறது?" என்று கவலையுடன் விசாரித்தான்.

நீலவல்லி கண்களை மீண்டும் மூடிக்கொண்டாள். வெட்கத்தால் அவள் கீழ் உதடு மடிந்து உள்சென்று இரண்டு முத்துப் பற்களுக்கிடை கடிபட்டு நின்றது. சிறிது உடலை அசைக்கவும் செய்தாள் நீலவல்லி. அந்த

அசைப்பில் அவள் மார்பும் அசைய முயன்றாலும் அந்த வாலிபன் கை அழுந்திக் கிடந்ததால் அசைய முடியாமல் திணறியது. அப்பொழுது அவள் கச்சையும் நெகிழ்ந்து விட்டதால் அவன் கை அவள் சதையின் மீதே அசைந்ததன் விளைவாக உணர்ச்சிகள் அவள் உடலில் கனலை வாரிக் கொட்டின.

அவள் நிலையை வீரநாராயணன் உணரவே செய்தான். அவள் உதட்டை முத்துப் பல்லிரண்டு கடித்ததைப் பார்த்து, வெட்கத்தால் வேதனைப்படுகிறாள் நீலவல்லி என்பதைப் புரிந்துகொண்டான். "அவள் ஏன் சிரமப்பட வேண்டும்? அந்தப் பற்களுக்குப் பதில் என்..." என்று ஏதோ நினைக்க, அவன் நினைப்பை அறுத்துக் கொண்டான். தனது உணர்ச்சிகளை அடக்கிக்கொள்ள மார்பில் இருந்து கையை விலக்க முயன்றான்.

ஆனால், நீலவல்லி திடீரெனப் புரண்டதால் அவன் கை அந்த மார்புக்கும் தன் தொடைக்கும் இடையில் சிக்கிக் கொண்டதை உணர்ந்தான். அவள் மார்பு என்ன காரணத்தாலோ அவன் கையில் அழுந்தக் குழைந்தது. "பாவம் குழந்தை! ஏதும் அறியாதவள்!" என்று அவளிடம் அனுதாபப்பட்டாலும் கையை எடுக்கவில்லை அவன். வலதுகை சிறைப்பட்டதால் அவள் உடலை ஓரளவு தாங்கிக் கொண்டிருந்த இடதுகை மெள்ளக் கீழ்நோக்கி நழுவத் தொடங்கியது. இறங்கிய இடத்தின் எழுச்சியில் சிறிது நேரம் தங்கவும் துளையவும் தொடங்கியதால், இணையிலா இம்சைக்கு உள்ளான அந்தப் பருவ மங்கை சட்டென்று அவனிடம் இருந்து விலகி மணலில் விழுந்தாள். அப்பொழுதே வந்து மடிந்த ஒரு அலையின் நுரையும் நீரும் அவள் உடல் மீது ஓடியது.



அந்த அலை திரும்பியபோது, இழுத்த சீலையைப் பிடித்துக் கொள்ளத் தனது இடது கையை நீட்டிக் காலைப் பற்றிக்கொண்ட நீலவல்லிக்கு உதவ வீரநாராயணனும் கையை நீட்டினான். இரு கைகளும் இடையே ஒன்றையொன்று பற்றிக் கால்களுக்கு இடையில் சிக்கி, ஒன்று மீற முயலவும், இன்னொன்று அதை மீற முடியாமல் அடக்கவும் முயன்ற விளையாட்டு, இருவருடைய நிலைமையையும் மிகுந்த சங்கடத்தில் கொண்டுபோய்விட்டதால், அந்த வாலிபனும் அவளுடன் தரையில் உருள, இருவரையும் பேரலையொன்று இழுத்துச் சென்றது.

அந்த அலையில் உருண்ட நீலவல்லி வாளை மீன் போல் வெகு வேகமாகக் கால்களை அடித்து நீந்திக் கடலில் வெகு வேகமாகச் சென்றாள். அந்த வாலிபன் மட்டும் அலையை மீறிக் கரையில் நின்றான் சில விநாடிகள். பிறகு வேகமாக ஓடிக் கடலுக்குள் மறைந்தான், இருபது விநாடிகளுக்கு மேல். அவன் தலை தூக்கியபோது நீலவல்லியின் மார்பு அவன் தலையில் இடித்தது. நீலவல்லி நீந்திக்கொண்டே கேட்டாள், "நீங்கள் சுத்தப் போக்கிரியாக இருப்பீர்கள் போலிருக்கிறது!" என்று.

"பெண் சம்பந்தப்படும்போது எந்த ஆண் மகனும் போக்கிரிதான்!" என்று அந்த வாலிபன் மல்லாந்து நீந்திய வண்ணம் கூறினான். கூறியதும் ஒருமுறை புரண்டு நீரில் மூழ்கி அவள் உடலுக்குக் கீழ்ச் சென்று அவள் உடலைத் தன் உடலுக்கு மேல் தாங்கிய வண்ணம் எழுந்திருந்தான். மல்லாந்து அவன் நீந்தினான். அவன் உடலுக்கு மேலே அவள் வான் நோக்கிப் படுத்துக்கொண்டிருந்தாள். ஒருவரைத் தாங்கிக்கொண்டு இன்னொருவர் அனாயாசமாக நீந்த முடியும் என்பதை அன்றுதான் அவள் புரிந்து

கொண்டாள். அப்படி நீந்தினாலும் நீண்ட நேரம் ஒருவன் அப்படியே மிதக்க முடியும் என்பதை அவள் அறிந்தாள் இல்லை.

அப்படி அலைகள் குறைந்த இடத்துக்குச் சென்று நீந்திக்கொண்டிருந்ததால் ஏற்பட்ட இன்ப வேதனைகளையும் அவள் குறையாமல் அனுபவித்தாள். அவன் அலைகளில் நிதானித்து நிற்கக் கால்களை மேலும் கீழும் உதைத்தபோது அவள் கால்களில் ஏற்பட்ட தாக்குதல்கள் அவள் உள்ளச் சோதனையை, உணர்ச்சி வேதனையை அதிகப்படுத்தவே செய்தன. இன்ப விளைவு இப்படியும் இருக்க முடியும் என்பதை அன்றுவரை அவள் எண்ணிக் கூடப் பார்க்கவில்லை.

அப்பொழுது திடீரென அவள் விழித்துக் கொண்டாள். தாங்கள் இருந்த இடம் தாமிரபரணி சங்கம இடம் என்பதும், அதிலிருந்து சற்றுத் தள்ளியிருந்த பரதவர் படகுகள் பல கடலில் சஞ்சரிக்க ஆரம்பித்து விட்டதையும் நீலவல்லி உணர்ந்தாளாதலால், அவன் உடல் மீதிருந்து நழுவி விழுந்து கரை நோக்கி நீந்திச் சென்றாள். அவனும் அவளைத் துரத்தி நீந்தினான்.

இருவரும் கரையை அடைந்ததும், சீர்கெட்டிருந்த தனது ஆடைகளைச் சரிப்படுத்திக் கொள்ள எதிரே இருந்த ஒரு மணல் மேட்டை நோக்கிச் சென்று அப்புறத்தில் மறைந்தாள். பிறகு அவன் பார்க்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள இருமுறை மேட்டில் ஏறிப் பார்த்துவிட்டுத் தனது ஆடைகளைக் கழற்றிப் பிழியத் தொடங்கினாள். அப்படிப் பிழிந்து அரைகுறையாகச் சுற்றிக்கொண்டு, மார்பை நன்றாக மறைக்க முந்தானையை இழுத்துக் கழுத்தில் சுற்றிக் கொண்டதும்,



தலையை உதறி ஆற்றினாள். அதை ஆற்றிக் கோடாலி முடி போட்டதும், "இனி அவரைச் சந்திக்க வேண்டியது தான்!" என்று இரைந்தே சொல்லிக்கொண்டாள்.

அந்த வேளையில், அவள் பின்புறத்தில் கோடாலி முடிச்சில் யாரோ மலரைச் செருகவே திரும்பி நோக்கிய நீலவல்லியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. "உங்களை யார் இங்கு வரச் சொன்னது?" என்று சீறி, அவன் சூடிய மலரை எடுத்து, விசிறி எறியப் போனவள், "என்ன! கொன்றை மலரா? எனக்கு இது பிடிக்கும் என்று உங்களுக்கு யார் சொன்னது?" என்று வினவினாள் ஆசையுடன். அந்த மலரை அவனிடம் மீண்டும் கொடுத்து, "உங்கள் ஆசையைக் கெடுப்பானேன்? சூட்டுங்கள் உங்கள் கையால்!" என்று கூறிப் பழையபடி திரும்பி நின்றாள்.

அவன் சூட்டினான். சூட்டியதோடு நிற்கவில்லை. பின்புறத்தில் அவள் தோள்களைப் பிடித்து இழுத்துத் தனது உடலுடன் இணைத்துக் கொண்டான். கொன்றை மலரை முகர்ந்தான். "நீலவல்லி!" என்று அவள் காதுக் கருகில் குனிந்து மெதுவாக அழைத்தான்.

"இன்றைக்குக் கடலாடு படலம் எப்படி இருந்தது?" என்று வினவினான் அவன்.

"முதலில் மணலாடு படலம் நடந்தது. கடற்கரையில் தள்ளினீர்கள். பிறகு கடலில் விளையாடினீர்கள். இரண்டும் அழகாகத்தான் இருந்தது!" என்று அவள் கூறித் தலையைக் குனிந்து கொண்டாள்.

அவன் கண் முன்பு அவள் வெண்மைக் கழுத்து மிக நன்றாகத் தெரிந்தது. அதில் இதழ்களைப் பொருத்தினான். அத்துடன் நிற்கவில்லை அவன்!

# 8. மணல் மேட்டுச் சரசம்! தோப்பு வீட்டு மர்மம்!

**நீ**லவல்லியின் கொண்டையில் கொன்றை மலரைச் சூடிய அந்த வாலிபனின் இதழ்கள் அவள் வெண்மைக் கழுத்தில் புதைந்ததோடு நில்லாமல் கழுத்தை அடுத்த முதுகுப் பகுதியிலும் புதைந்தன. மலரைச் சூடிய கைகள் முன்புறத்திலிருந்த அழகிடங்களையும் அவன் ஆள்வதற்கு வசதியாக அவள் சரேலென்று திருப்பிக் கொடுத்ததன் விளைவாக, அதே இதழ்கள் அவள் மார்புக்கு நடுவிலும் புதைந்தன. புதைந்த இதழ்கள் புரண்டன, அண்டையிலிருந்த இரு அழகு மேடுகளையும் நோக்கி. விளிம்புகளை அவன் வலிய உதடுகள் மடிந்து லேசாகப் பற்றின. பிறகு திடீரென எழுந்து அவள் கொவ்வை இதழ்களில் முரட்டுத்தனமாகப் பதிந்தன. என்ன காரணத்தினாலோ அவள் இதழ்கள் அவன் இதழ்களை எதிர்த்தன, இழைந்தன. அப்படிப் பதிந்த இதழ்களில் கீழ் உதட்டை அவன் பற்களிரண்டு லேசாகக் கவ்வின. அத்துடன் அவ்விருவருமே அந்த மணல் மேட்டின் மறைவில் உட்கார்ந்து மற்றவர்கள் கண்களுக்கு இலக்காகாத நிலையை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

அப்படி ஏற்படுத்திப் பரஸ்பரத் தழுவலில் இருந்த இருவரில் நீலவல்லியே மிக முரட்டுத்தனமாக நடந்து கொண்டாள். தன்னை வலிய அணைத்திருந்த வாலிபன் கைகளை அகற்றாமல் தன் கைகளால் அவன் தலைக்



குழலைப் பிடித்து அவனையும் இழுத்துத் தன்னையும் மணலில் தள்ளிக் கொண்டாள். அவன் வலிய உதடுகளை இம்முறை கவ்வியவை அவளுடைய சின்னஞ்சிறு முத்துப் பற்கள் ஆனாலும், அவற்றின் கூர்மையால் சிறிது இரத்தமும் வந்தது அவன் உதட்டில். ஆனால் அந்த இரத்தத்தை அவன் இன்பமாகச் சுவைத்தான். "அடி! கள்ளி! நீ கடல் தேவதையா! உன் இரத்தம் உப்புக் கரிக்கிறதே!" என்று வினவி அவள் உதட்டை அவனும் வலியப் பற்றினான், தனது உதடுகளால். ஆனால் அவளைக் கட்டி நின்ற கைகள் வாளாவிருக்கவில்லை. அவள் அவனை இழுத்து விழுந்தபோது அவள் பின்புற எழில் மலையில் சிக்கிக் கொண்ட இடதுகை, தன்னை விடுவித்துக் கொள்ள முடியாததால் அதை முரட்டுத்தனமாகப் பிடித்தது. வலதுகை முன் பகுதிகளில் அலைந்தது. சில இடங்களில் தவழ்ந்தது. சில இடங்களில் புகுந்தது. சில இடங்களை நெருடியது.

இத்தனை திருட்டுத்தனமும் வேண்டியிருந்தது அவளுக்கு. அவள் உணர்ச்சி மிகுதியால் மணலில் கிடந்தாள். கதிரவன் சற்று உஷ்ணம் வீசும் நிலைக்கு எழுந்து விட்டதால் மணல் சுடவும் செய்தது. ஆனால் அந்த வாலிபன் சேஷ்டைகளால் அவள் தேகத்தில் சுழன்ற உஷ்ணம் மணலின் உஷ்ணத்தைவிட அதிகமாயிருந்ததால், அவள் மணலின் உஷ்ணத்தை திரணமாக மதித்தாள். அவளை மணலின் உஷ்ணத்தில் இருந்து காக்க அந்த வாலிபன் அவளுடன் சுழன்று உருண்டு, தான் மணலின் சூட்டை ஏற்று அவளைத் தன் மீது கிடத்திக் கொண்டான்.

நிலைமை இப்படியே போயிருந்தால் விளைவு என்ன ஆகியிருக்கும் என்பதை விளக்கத் தேவையில்லை. அவள் அவன்மீது உடலை அழுத்திப் படுத்தது அவனுக்கு

ஆனந்தமாகத்தான் இருந்தது. இதற்கு மேல் தனியாகச் சொர்க்கம் இல்லையென்றே அவன் நம்பினான். சொர்க்கத்திலும் இடைஞ்சல்கள் பல உண்டு என்பதை அவ்விருவருமே உணரவில்லை. உலகை மறந்திருந்த காரணத்தால், அதுவரை எட்ட நின்று அவர்கள் லீலைகளைப் பார்த்துக்கொண்டு இருந்த வீரநாராயணன் புரவி திடீரெனக் கனைத்தது இருமுறை. அதனால் நீலவல்லியை அப்புறம் தள்ள முயன்ற வீரநாராயணனை, "ஏன்? என்ன?" என்று வினவினாள் நீலவல்லி. அவன் உடலை விட்டு அகலவும் மறுத்தாள்.

"ஏதோ ஆபத்து நீலவல்லி! இல்லாவிட்டால் நண்பர் இப்படிக் கனைக்க மாட்டார்; வரும்படி உத்தரவும் இடமாட்டார்" என்றான் வீரநாராயணன், அப்போதும் அவள் முதுகைத் தடவிக்கொண்டே.

"நண்பரா?" நீலவல்லி அப்பொழுதும் கேள்வி கேட்டாளே தவிர எழுந்திருக்க மறுத்தாள்.

"ஆம், எனது புரவியார்!" என்று மிகுந்த மரியாதையுடன் கூறிய வீரநாராயணன், அவளை பலவந்தமாய்ப் பிடித்துத் தள்ளிவிட்டு எழுந்திருந்தான்.

அந்த மணல்மேட்டை அடுத்து சற்றுத் தூரத்தில் தெரிந்த தோப்பில் சுமார் பத்துப் புரவி வீரர் நின்றிருந்தார்கள். அவர்கள் மத்தியில் நீலவல்லியின் தம்பி சிறைப்பட்டு நின்றிருந்தான். அவனுக்கு ஒரு பக்கத்தில் உக்கிரனும் இன்னொரு பக்கத்தில் கன்னித்தேவனும் நின்றிருந்தார்கள். அந்தக் கூட்டத்தை நீலவல்லியும் மணல் மேட்டில் உட்கார்ந்த வண்ணம் பார்த்தாள். அவள் முகத்தில் தனது தம்பியைப் பற்றிக் கிலி பரவியதால், "அவனை எப்படியாவது காப்பாற்றுங்கள்!" என்றாள். அதுவரை அவளை



ஆட்கொண்டு இருந்த காம உணர்ச்சிகள் அச்சத்துக்கு இடங்கொடுத்தன.

"கவலைப்படாதே நீலவல்லி! நீ எழுந்து முதலில் கடலை நோக்கிச் செல். அங்கிருக்கும் பரதவர் குடிசைகளில் ஏதாவதொன்றில் தங்கு. விரைவில் வருகிறேன், உன் தம்பியுடன். எக்காரணத்தை முன்னிட்டும் பரதவர் பாதுகாப்பில் இருந்து செல்லாதே!" என்று அவளை எச்சரித்து, அவள் எழுந்து கடல் அலைகள் மோதிய இடத்திலிருந்து சிறிது தள்ளியிருந்த குடிசைகளை நோக்கி நடந்து செல்லும்வரை காத்திருந்து, தனது புரவியை அழைத்தான்.

அவனை நோக்கி வந்த புரவி, அவன் ஏறியதும் உக்கிரனும் அவன் ஆட்களும் இருந்த திக்கை நோக்கிச் சென்றது. இடையில் இருந்த தனது குறுவாளை ஒரு முறை தடவிப் பார்த்துக்கொண்ட வீரநாராயணன், சர்வ சாதாரணமாக உதட்டில் புன்முறுவலைப் படரவிட்டுக் கொண்டு சென்றான். அந்தக் கும்பலை அடைந்ததும், பத்தடி முன்னதாகவே நின்றுவிட்ட புரவியை நோக்கி, "நண்பரே! இவர்களும் நண்பர்கள்தான், செல்லும்!" என்று உத்தரவிட்டும் நண்பர் பெருமான் நகர மறுத்தார். ஆதலால் அவன் கீழே குதித்து நடந்து எதிரிகள் இருந்த இடத்தை நாடினான்.

மரக்கூட்டத்தின் முகப்பிலிருந்து சகலத்தையும் கவனித்துக் கொண்டிருந்த உக்கிரனுக்கும் கன்னித்தேவனுக்கும் வீரநாராயணன் போக்கு பெரும் வியப்பை அளித்ததால், அவன் அவர்களை அணுகியதும், உக்கிரன் சொன்னான், "வீரநாராயணா! நீ உண்மையில் வீரன் தான். ஆனால் உனக்கு அசட்டுத் துணிச்சல் அதிகமிருக்

கிறது. இங்கு காத்திருப்பவர் உன் ஆசைநாயகிகள் அல்லர்; உன்னுடன் சரசமாடவும் நிற்கவில்லை!" என்று.

அவர்கள் எதிரில் நின்ற வீரநாராயணன் அவர்களைத் தனித்தனியே நோக்கினான். "நல்லவேளை, பிழைத்தேன்!" என்று சொன்னான் முடிவில்.

"என்ன நல்லவேளை?" உக்கிரன் ஆத்திரத்துடன் கேட்டான்.

"நீங்கள் என்னுடன் சரசமாட முற்படாதது. உங்கள் விகார உருவங்கள் எனக்குக் கிட்டாதது என் அதிர்ஷ்டம்!" என்ற வீரநாராயணன் இதழ்கள் இளநகை கொண்டன.

கன்னித்தேவன் முகத்தில் கோபம் ஏறியது. "எங்களை இகழ்ந்து பேசுகிறாய்..." என்று உறுமினான்.

"உங்களையா!"

"ஆம்."

"இல்லை."

"இல்லையா?"

"இல்லை. நீங்கள் இகழ்ச்சிக்கும் தகாதவர்கள். சிறுவர்களைக் கொல்லவும் பெண்களைப் பிடிக்கவும் முயலுபவரை இகழ்வதும் அவர்களுக்குப் பெருமை அளிப்பதாகும்." இதைச் சொன்ன வீரநாராயணன், "இங்கு எதற்காக வந்தீர்கள்?" என்றும் வினவினான்.

உக்கிரன் எட்ட நடந்து பரதவர் குடிசைகளுக்கு மத்தியில் மறைந்துவிட்ட நீலவல்லி இருந்த திக்கில் கையை நீட்டினான். "அந்தச் சிறுக்கியைப் பிடிக்க!" என்றும் சொன்னான்.



"சிறுவனைப் பிடித்து விட்டீர்கள். சிறுக்கியைப் பிடிக்கப் பார்க்கிறீர்கள்!" என்ற வீரநாராயணன் பெரிதாக நகைத்தான். "இந்த அலுவல்களுக்குப் பத்து வீரர்கள்! நீ ஒரு வாள்வீரன்! இந்த மாமிசப்பிண்டம்! அதோ அந்தத் தடியர்கள்!" என்று ஒவ்வொருவராகக் கை காட்டினான். "உங்களைப் பிழைக்க விடுகிறேன், சிறுவனை விட்டுவிட்டுப் போய்விடுங்கள்!" என்றும் கூறினான்.

உக்கிரன் அவனை எரித்துவிடுவது போல் பார்த்தான். அவனிடமிருந்து பத்தடி பின்னால் தள்ளி நின்றிருந்த புரவியையும் நோக்கினான். "அந்தப் புரவியிருக்கிற தைரியம் உனக்கு. கன்னித்தேவா! முதலில் அதைப் பிடித்து வா!" என்று உத்தரவிட்ட உக்கிரன், தனது வாளை எடுத்து வீரநாராயணன் மார்பின் மீது பதிய விட்டான், அவன் வெகு அருகிலிருந்த காரணத்தால்.

வீரநாராயணன் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. கன்னித்தேவன் இறங்கி ஒரு மணிக்கயிற்றுச் சுருளுடன் சென்றபோதும் அசையவில்லை. திரும்பி ஒருமுறை தனது புரவியை மட்டும் பார்த்தான். அது அவனைப் பார்த்துக் கனைத்தது. பல்லையும் பெரிதாக இளித்தது. பிறகு வீரநாராயணன் திரும்பி உக்கிரனை நோக்கி நின்று கொண்டான். பின்னால் என்ன நடக்கிறதென்று பார்க்கவே இல்லை அவன். பார்த்த உக்கிரனும் மற்ற வீரர்களும் வீரநாராயணனை விட்டுவிட்டுப் புரவியை நோக்கித் தங்கள் புரவிகளை விரட்டினார்கள்.

எட்ட நடந்து கொண்டிருந்த வேடிக்கையை வீரநாராயணனும் திரும்பிப் பார்த்தான். அவன் புரவியைப்

பிடிக்கக் கயிறு கொண்டு வந்த கன்னித்தேவன் கயிற்றுச் சுருளைப் பிரிக்கத் துவங்கு முன்பாகவே புரவி அவனை நோக்கிப் பாய்ந்தது. அது பாய்ந்த வேகத்தில் அதனிடமிருந்து தப்ப முயன்ற கன்னித்தேவன் பின்னால் மணலில் கால் புதைந்ததால் மல்லாந்து விழுந்தான். அவனைத் துவைத்துவிடப் புரவி தன் முன்னங்கால்களை உயரத் தூக்கி இரண்டு கால்களால் மனிதனைப் போல் நின்றது. பிறகு அந்தக் கால்களை வெகு வேகமாகக் கீழே கொணர்ந்தது.

அதை எதிர்பார்த்த கன்னித்தேவன், மளமளவெனப் புரண்டு அதன் கொலைக் கால்களிலிருந்து தப்பினான். ஆனால் அது மீண்டும் அவனை நோக்கிச் சென்றது.

அதே சமயத்தில், மணலில் உக்கிரனும் அவன் ஆட்களும் புரவிகளில் பறந்து வரவே, அது கடற்கரையை நோக்கி ஓட ஆரம்பித்தது. உக்கிரனும் மற்றோரும் அதைத் துரத்தினார்கள். அந்தப் புரவி காற்றைப் போல் பறந்து பரதவர் குடிசைக் கூட்டத்தை ஒருமுறை சுற்றி வந்தது. பிறகு ஏதோ ஒரு குடிசைக்குள் தலையை நுழைத்துக் கனைத்தது. அதிலிருந்து வெளியே வந்த நீலவல்லி அதன் மீது தாவி ஏற, அது மீண்டும் தோப்பை நோக்கிப் பறந்தது. அங்கு நீலவல்லியின் தம்பியின் கையைப் பிடித்துக் கொண்டு வீரநாராயணன் நின்றிருந்தான். நீலவல்லியையும் புரவியை விட்டு இறங்கச் சொன்னான். நீலவல்லி எட்ட வந்து கொண்டிருந்த உக்கிரனையும் மற்றவர்களையும் சுட்டிக் காட்டினாள். புரவிக்குப் பயந்து உருண்டு மீண்டும் எழுந்து தங்களை நோக்கி வந்து கொண்டிருந்த கன்னித்தேவனையும் காட்டினாள்.



"இவர்களைப் பற்றிக் கவலை வேண்டாம்!" என்று கூறிய வீரநாராயணன், ஒரு கையால் நீலவல்லியின் இடையை வளைத்துக் கொண்டும், இன்னொரு கையால் சிறுவன் தோளை ஆதரவாகப் பற்றிக் கொண்டும் எதிரிகள் வருகைக்காகத் தோப்பின் முகப்பிலேயே நின்றிருந்தான். அப்படி அலட்சியமாக நின்றிருந்த வீரநாராயணனைக் கண்ட உக்கிரனும் மற்றோரும் அவன் துணிவை நினைத்து வியந்தார்கள். கன்னித்தேவன் மட்டும் உடலில் இருந்த மணலைத் தட்டிவிட்டுக் கொண்டு முஷ்டி பிடித்து, வீரநாராயணனைக் கொன்று விடும் நோக்கத்துடன் தள்ளாடி நடந்து வந்தான்.

கன்னித்தேவன் எண்ணத்தைப் புரிந்து கொண்ட வீரநாராயணன் தன் எதிரே புரவியை நிறுத்திக் கொண்ட உக்கிரனைப் பார்த்து, "அந்த முட்டாளுக்குப் புத்தி சொல். இன்னொரு முறை அவனைத் தாக்கும்போது கொல்லத் தயங்க மாட்டேன்!" என்று வெகு நிதானமான குரலில் அறிவித்தான்.

உக்கிரனும் அவனது ஆட்களும் வீரநாராயணனை நோக்கினார்கள். கன்னித்தேவன் அவர்கள் அருகில் வந்து, அவர்களை அலட்சியம் செய்து வீரநாராயணனை நோக்கி நடந்தான். "தேவா! நில்!" வீரநாராயணன் அதட்டல், நிறுத்தவில்லை அவன் முன்னேற்றத்தை. "தேவா! வேண்டாம், பொறு!" என்ற உக்கிரன் கட்டளையும் அவனைத் தேக்கவில்லை. ஆனால் தேக்கியது ஒன்று. அவன் வீரநாராயணனை நெருங்கியதும் பக்கத்தில் இருந்த சிறுவன் தனது பாதக் குறட்டால் அவன் முன்னங்காலின் எலும்பில் விட்ட பலமான உதை அவன் உடலில் மிதமிஞ்சிய வேதனை உணர்ச்சிகளைப்

பாய்ச்சியதால், காலை மடித்து உட்கார்ந்தான் கன்னித் தேவன்.

வீரநாராயணன் கண்கள் சிறுவனை வியப்பும் கவுரவமும் கலந்த ஒளியுடன் நோக்கின. "உனக்கும் நரம்புப் போர் தெரியும் போலிருக்கிறது. நீ அடித்த இடத்தின் பெயர் தெரியுமா?" என்று வினவினான் வீர நாராயணன்.

"தெரியாது!" என்றான் சிறுவன்.

"அதன் பெயர் குதிரை முகம்!" என்று வீர நாராயணன் விளக்கினான்.

"நமது உடலில் உள்ள பலமான எலும்பு அதுதான். ஆனால் அதை அடுத்திருப்பவை மிகப் பலவீனமான நரம்புகள்!" என்றும் சொன்னான்.

"இந்தப் போர்முறை எனக்குத் தெரியாது. ஒருமுறை நான் பழகிய புரவியின் பின்னால் நின்றிருந்த போது அது இந்த இடத்தில்தான் என்னை உதைத்தது. அதனால் என் பிராணனே போய்விட்டது. அப்பொழுதுதான் வேல் முருகன் சொன்னான், 'நீ யாரை ஜெயிக்க வேண்டு மானாலும் முதலில் இங்கு உதைத்து விடு' என்று. பிறகு தான் எனக்குத் தெரியும். ஆனால் இதுவரை இதை நான் பரீட்சை செய்யவில்லை. இன்றுதான்..." என்று சிறுவன் வாசகத்தை முடிக்கவில்லை.

"இன்றுதான் அதைப் பரீட்சை பார்க்க அவகாசம் கிடைத்ததா?" என்று கன்னித்தேவன் சீறி எழுந்து, "இன்னொருமுறை காலை நீட்டு அதை உடைத்து விடுகிறேன்!" என்று தன் கைகளை சிறுவன் காலை நோக்கி நீட்டிக் கொண்டு வந்தான்.



அந்தச் சமயத்தில் ஒலித்தது உக்கிரன் குரல், "தேவா! நிறுத்து! உன் முட்டாள்தனத்தை விட நான் கவனிக்க வேண்டிய வேலை அதிகமிருக்கிறது!" என்று.

முன்னேறிய கன்னித்தேவனை உக்கிரன் குரல் சட்டென்று நிறுத்தியது. கன்னித்தேவன் திரும்பி, உக்கிரனை நோக்கித் தனது ராட்சதக் கண்களை உருட்டி னான். "உக்கிரா!" என்று அவனைப் பெயர் சொல்லி அழைத்து, "சில சமயங்களில் உன் அதிகாரம் எல்லை மீறிப் போகிறது. நீ என் எஜமான் அல்ல; நான் உனது அடிமையும் அல்ல; இதை நீ புரிந்து கொள்வது உனக்கு நல்லது. இல்லையேல்..." என்று பேசினான். கடைசியில் முடிக்காமல் விட்ட பகுதியில் மிரட்டல் இருந்தது.

உக்கிரன் தேவனை இகழ்ச்சி ததும்பும் கண்களால் நோக்கினான். "இல்லையேல், என்ன செய்து விடுவாய்?" என்று விசாரித்தான் ஏளனம் நிரம்பிய குரலில்.

"கரவந்தபுர ரகசியம் வெளிப்படுத்தப்படும்!" என்றான் கன்னித்தேவன்.

உக்கிரன் விழிகள் நெருப்பைக் கக்கின. "கரவந்தபுரம் என்று ஊர் எதுவும் கிடையாது தென்பாண்டிச் சீமையில்!" என்று கடுமை நிறைந்த குரலால் சொன்னான் உக்கிரன்.

"கரவந்தபுரத்துக்கு உன் பெயரை வைத்து விட்டதால் அதன் பழைய பெயர் மாறாது. உக்கிரன் கோட்டைதான் கரவந்தபுரம் என்பதைக் காயல் அதிகாரியும் அறிவார்!" என்றான் கன்னித்தேவன்.

"யாரவன் காயல் அதிகாரி?" என்று சீறினான் உக்கிரன்.

"உன்னைப்போல் இன்னொரு அயோக்கியன்!" என்றான் கன்னித்தேவன். அவன் அடியோடு நிலை தடு மாறிவிட்டான் என்பது வீரநாராயணனுக்கும் நீலவல்லிக் குங் கூடப் புரிந்துவிட்டதால் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அதன் விளைவாக வீரநாரா யணன் தன் போக்கையும் பேச்சையும் அடியோடு மாற்றிக் கொண்டான். "உக்கிரா! கன்னித்தேவர் பரிதாபத்துக்குரிய வர். சிறுவன் உதைத்தால் எந்தப் பெரிய வீரன் மனமும் புண்படும். ஆகையால் அவர் பேச்சைப்பற்றி அதிகமாகக் கவனிக்காதே!" என்று கூறினான் வீரநாராயணன்.

வீரநாராயணன் சொல்வதில் பொருள் இருந்ததைப் புரிந்துகொண்ட உக்கிரன், அவன் சொன்னதை ஆமோதிக்கும் வகையில் தலையசைத்தான். அடுத்து என்ன செய்வது என்று அவன் தீர்மானிக்க முற்பட்ட போது அதற்கும் வழி சொன்னான் வீரநாராயணன். "உக்கிரா! இந்தப் பகலையும் இரவையும் இந்தத் தோப்பிலேயே கழிப்போம். நாளைக் காலையில் உக்கிரன் கோட்டைக்குப் பயணமாவோம். நமது விவகாரங்கள் அனைத்தையும் அங்கு தீர்த்துக் கொள்வோம்!" என்று கூறினான்.

உக்கிரன் முகத்தில் வியப்பு விரிந்தது. "இப்பொழுதே உங்கள் மூவரையும் சிறைசெய்து உக்கிரன் கோட்டைக்குக் கொண்டு போவதை யார் தடை செய்ய முடியும்?" என்று வினவினான். "தவிர நீ உக்கிரன் கோட்டைக்கு வருவதாகச் சொல்வது எனக்கு வியப்பையும் சந்தேகத் தையும் அளிக்கிறது!" என்றும் சொன்னான்.

வீரநாராயணன் உக்கிரனை நோக்கி, "உக்கிரா! அதோ இருக்கும் மணல்மேட்டைப் பார்!" என்றான்.



உக்கிரன் திரும்பி நோக்கி வியப்பையும் பிரமிப்பையும் ஒருங்கே அடைந்தான்.

அங்கு குடிசையிலுள்ள பரதவர் பதினைந்து பேர் வாளை மீனைப் பிடிக்கும் கூர்மையான செருகு கத்தி களுடன் நின்றிருந்தனர்.

"பக்கத்திலும் பார்!" என்றான் வீரநாராயணன்.

பக்கத்தில் தோப்பில் வேல்முருகனும் பத்துப் பரதவரும் நின்றிருந்தனர் ஈட்டிகளுடன்.

இந்த இருவிதப் போர்க் கூட்டத்தைக் கண்டதும், அச்சத்தின் வசப்பட்டான் உக்கிரன்.

அந்த அச்சத்தை ஊகித்த வீரநாராயணன், "உக்கிரா! உன்னைப் பிடிக்க வேண்டுமானால், உங்கள் அனைவரை யும் அழிக்க வேண்டுமானால், இதைவிட எனக்குச் சிறந்த சமயம் கிடையாது. ஆனால் உன்னை அழிக்கும் நோக்கம் எனக்கில்லை. உன் உதவி எனக்குத் தேவையாயிருக் கிறது!" என்று சொல்லி இரு பரதவர் கூட்டங்களையும் நோக்கிக் கையசைக்க இரு கூட்டங்களும் மறைந்தன, சிறிது நேரத்தில்.

இதையெல்லாம் கண்ட உக்கிரன் ஏதும் பேசாமல் சிலையென நின்றான். "உக்கிரா! உன் ஆட்களை விட்டு உணவுக்கு ஏற்பாடு செய். பரதவர் குடிசைகளிலும் உணவுப் பொருள்கள் கிடைக்கும். வாங்கி வரச்சொல். இந்தத் தோப்பில் மிக ரம்மியமான இடம் ஒன்றிருக்கிறது. வா அங்கு செல்வோம்," என்று கூறி நீலவல்லியுடனும் சிறுவனுடனும் தோப்பிற்குள் நடந்தான். அவர்களைப் பின்பற்றிப் புரவி நடந்தது. தனது வீரர்களிடம் பகல் உணவுக்கு ஏற்பாடு செய்யச் சொன்ன உக்கிரன், வீர

நாராயணன் புரவிக்குப் பின்னால் தனது புரவியை நடத்தி அவர்களைத் தொடர்ந்தான்.

இப்படிக் கால்காத தூரம் சென்றதும் ஒரு புதருக்குள் நுழைந்து சென்ற வீரநாராயணன் தன்னுடன் வரும்படி மற்றவர்களுக்கும் சைகை செய்தான். அந்த இடத்தைக் கண்ட உக்கிரன் பெரும் வியப்புக்குள்ளானான். "இப்படியொரு இடம் இருப்பது எனக்கு இதுவரை தெரியாதே. அதோ அந்தச் சிங்கார வீடு யாருடையது?" என்று வினவினான் பிரமிப்புடன்.

"புரவியை விட்டு இறங்கு. உணவருந்திய பிறகு பேசுவோம்!" என்றான் வீரநாராயணன்.

"இந்த வீடு உண்மையில் வீடுதான். பலருக்கு மோட்சத்தை அளித்திருக்கிறது!" என்ற வீரநாராயணன், அதை நோக்கி நடந்தான்.

அவனைத் தொடர முற்பட்டு அனைவரையும் தொடர வேண்டாம் என்று கூறிவிட்டு, அந்த வீட்டை நோக்கி நடந்து அதன் கதவைத் திறந்தான். பிறகு திருப்திக்கு அறிகுறியாகத் தலை அசைத்துவிட்டுத் திரும்பினான். திரும்பி வந்தவன் அங்கிருந்த புல்தரையில் ஒரு பவளமல்லி மரத்தின் கீழ் மல்லாந்து படுத்தான். அவனுக்கருகே உட்காரப் போன நீலவல்லியைத் தடுத்த அவன் புரவி, அவன் பக்கத்தில் படுத்துக் கொண்டது.

இந்த விநோதங்களைப் பார்த்துக் கொண்டிருந்த உக்கிரனுக்கு ஏதும் புரியவில்லை. புரிந்தபோது அவன் உள்ளத்தில் என்றுமில்லாத அச்சம் உதயமாயிற்று.

# 9. இரவில் வந்தவன்

பவளமல்லி மரத்தடியில் புரவியின் பக்கத்தில் படுத்து இருந்த வீரநாராயணன் அன்று பகல் முழுவதும் நன்றாக உறங்கினான். நீலவல்லியும் அவள் தம்பியும் உக்கிரன் முதலானோரும் உறங்கவில்லை. அங்குமிங்கும் நடமாடிக் கொண்டும் பேசிக்கொண்டும் காலம் கழித்தார்கள்.

நீலவல்லி தன் தம்பியுடன் அந்த வீட்டை இருமுறை சுற்றிப் பார்த்தாள். வீடு பழைய வீடானாலும் அதிக பழுதுபடாமல் இருந்தது. வீட்டின் பக்கவாட்டுச் சுவர் ஒன்றில் இரண்டு இடங்களில் விழுந்து விட்ட பூச்சுக்குப் புதுப் பூச்சு செய்ததிலிருந்து அது யாருடைய பராமரிப்பிலோ இருந்து வருவது புரிந்தது நீலவல்லிக்கு. அந்த வீட்டின் வாயிலில் தொத்தியிருந்த இரண்டு மல்லிக் கொடிகள் கொத்துக் கொத்தாகப் பூக்களைப் பூத்திருந்ததால் நறுமணம் அந்த வீட்டைச் சூழ்ந்திருந்தது. வீட்டைச் சுற்றிலும் நூறு காலடிகளுக்கு மேல் இடைவெளியும், அந்த இடைவெளிக்கு அப்பால் அடர்ந்த மரங்களும் இருந்ததைக் கவனித்த நீலவல்லி, அந்த மரங்களும் புதர்களும் இயற்கையின் சிருஷ்டி அல்ல என்பதையும், வீட்டுக்குரியவர்கள் வீட்டை மறைக்கச் செய்த ஏற்பாடு என்பதையும் புரிந்துகொண்டாள். இப்படிச் சுற்றிப் பார்த்துவிட்டு மீண்டும் வீரநாராயணன் படுத்திருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

அப்பொழுது மாலை நேரம் நெருங்கிக்கொண்டிருந்ததால், வீரநாராயணன் மெள்ளக் கண்விழித்து எழுந்து உட்கார்ந்து உடலைச் சோம்பல் முறித்தான். அவன் புரவியும் மல்லாந்து கால்களை உதைத்து விட்டுப் புரண்டு எழுந்து நின்றது. "அக்கா! இந்தப் புரவி என்ன புத்திசாலி தெரியுமா?" என்று தம்பி கேட்டான் நீலவல்லியை.

"தெரியும்!" என்றாள் நீலவல்லி வீரநாராயணனைப் பார்த்துப் புன்முறுவல் செய்து.

"ஏன் அக்கா, நான் புரவியைப் பற்றிச் சொன்னால் நீ ஏன் இவரைப் பார்த்துச் சிரிக்கிறாய்?" என்று சிறுவன் வினவினான்.

"அவரும் புரவியைப் போல் கெட்டிக்காரர்!" என்றாள் நீலவல்லி.

"அக்கா!"

"என்னடா?"

"உனக்கு இவரை முன்பே தெரியுமா?"

"என்ன கேள்விடா இது? எப்படித் தெரியும் எனக்கு?"

"முன்பின் பழக்கமில்லாதவரைப் பார்த்துப் பெண் சிரிக்கலாமா?"

இதைக் கேட்ட நீலவல்லி, வீரநாராயணன் இருவருமே நகைத்தார்கள். "நீலவல்லி! என்ன இருந்தாலும் ஆண்பிள்ளை பார். சாண்பிள்ளை யானாலும் ஆண்பிள்ளை என்ற பழமொழி காரணமில்லாமலா வந்தது? உன்னை என்னுடன் பழகவிட மாட்டான் போலிருக்கிறதே!" என்று வீரநாராயணன் கேட்டான் நகைப்பைத் தொடர்ந்து.



"அவன் ஒருவன்தானே இப்பொழுது எனக்குப் புருஷத் துணை!" என்றாள் நீலவல்லி.

"இதுவரை?" வீரநாராயணன் விஷமமாகக் கேட்டான்.

அவன் கேள்வியின் மர்மத்தைப் புரிந்துகொண்டாள் நீலவல்லி. "இதுவரை நீங்களிருந்தீர்கள். அவன் வந்த பிறகு உங்களுக்கு என்னைப் பாதுகாக்கும் வேலையில்லை!" என்ற நீலவல்லி புன்முறுவல் செய்தாள்.

மீண்டும் இருவரும் நகைக்கவே சிறுவன் வெகுண்டு எழுந்தான். "நானிருப்பது உங்களுக்கு இடைஞ்சலாயிருந்தால் நான் போகிறேன்!" என்று நடக்க ஆரம்பித்தான், எதிரே தெரிந்த புதரை நோக்கி.

ஆனால் வீரநாராயணன் செய்த ஒரு சைகையால் அவன் புரவி சிறுவனுக்குக் குறுக்கே சுவரென நின்றது. சிறுவன் கோபத்துடன் கால்களைத் தரையில் உதைத்தான். அதைக் கண்ட வீரநாராயணன் உட்கார்ந்த நிலையில் இருந்து எழுந்து, "சிறுவனே! சிறுபிள்ளைத் தனத்துக்கு இது இடமில்லை. இங்கு நமக்கெல்லாம் எஜமானர் உக்கிரன். அவர் அனுமதி கேட்டுத்தான் நீ செல்ல வேண்டும்!" என்று கூறி உக்கிரனை நோக்கிக் கண்ணைச் சிமிட்டினான்.

உக்கிரன் சிறுவனை நோக்கிச் சொன்னான், "சிறுவனே! உன்னை அனாவசியமாகக் காப்பாற்ற நான் இஷ்டப்படவில்லை. என்ன காரணத்தினாலோ வீரநாராயணன் நம் எல்லோரையும் இங்கு அழைத்து வந்திருக்கிறார். ஆகையால் நீ ஏதாவது முட்டாள்தனமாக நடந்து கொள்ளாதிருப்பது நல்லது!" என்று மிரட்டினான்.

சிறுவன் அந்த மிரட்டலுக்கு அஞ்சியதாகத் தெரிய வில்லை. "என்னை யாரும் காப்பாற்றத் தேவையில்லை. என்னைக் காத்துக்கொள்ள எனக்குத் தெரியும்!" என்று கூறிவிட்டுக் குறுக்கே நின்ற புரவியைச் சுற்றிச் செல்ல முயன்றான்.

அந்தப் புரவி அவன் எந்தப் புறம் நகர்ந்தாலும், அந்தப் புறத்தில் திரும்பி அவனைத் தடை செய்யவே, சிறுவன் ஆத்திரத்துடன் எதிரே தெரிந்த வீட்டை நோக்கி ஓடினான். புரவி அவனைத் துரத்தத் தொடங்கியதைத் தனது கையசைப்பினாலேயே வீரநாராயணன் தடை செய்தான். பிறகு எதையும் கவனிக்காமல் மீண்டும் பவள மரத்தடியில் உட்கார்ந்துகொண்டான்.

மாலை நெருங்கிக் கொண்டிருந்தது. மெள்ள வீட்டை நோக்கி ஓடிய சிறுவன் வீட்டு முகப்பிலேயே மல்லிகைக் கொடியின் அருகில் உட்கார்ந்திருந்தான். உக்கிரனின் ஆட்கள் சுற்றிலுமிருந்த புதர்களின் அடிகளில் படுத்துக் கொண்டிருந்தார்கள். உக்கிரன் மட்டும் பவளமல்லி மரம் இருந்த இடத்தை அணுகி, "வீரநாராயணரே! எதற்காக நாம் இங்கு தங்க வேண்டும்?" என்று வினவினான்.

"இன்றிரவு உனக்கே தெரியும்!" என்று அலட்சிய மாகப் பதில் சொன்னான் வீரநாராயணன்.

"என்ன தெரியும்?"

"நீ எதை முன்னிட்டு நீலவல்லியையும் அவள் தம்பி யையும் சிறைப் பிடித்தாயோ, சிறுவனைக் கொல்லவும் முயன்றாயோ, அதன் மூலகாரணம் தெரியும்."

இதைக் கேட்டதும் ஆழ்ந்த சிந்தனை வசப்பட்டான் உக்கிரன். "உக்கிரன் கோட்டையைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?" என்று வினவினான்.



பவள மரத்தடியில் உட்கார்ந்த வீரநாராயணன் ஒரு சிறிய குச்சியை எடுத்துத் தரையில் சில கோடுகளை வரைந்தான். பிறகு உக்கிரனை உற்று நோக்கினான்.

உக்கிரன் முகத்தில் கிலியும் குழப்பமும் கலந்த உணர்ச்சிகள் தாண்டவமாடின. "ஆம். அதுதான் உக்கிரன் கோட்டை. அதன் அமைப்பும் அப்படித்தான். ஆனால் கோட்டை வாயிலுக்கு முன்பாக ஒரு சதுரம் போட்டிருக் கிறீர்களே, அது என்ன?" என்று வினவினான்.

"கோட்டைக்குள் செல்லும் சுரங்க வழி!" என்றான் வீரநாராயணன்.

பிரமித்தான் உக்கிரன். "அப்படி வழி எதுவும் கிடையாது. அங்கு பெரிய அரசமரம் ஒன்றுதான் இருக்கிறது. மரத்தடியில் சுரங்கம் அமைக்க முடியாது. அமைக்க வேண்டுமானால் வேர்களை வெட்ட வேண்டும். வேர்களை வெட்டினால் மரம் என்றோ பட்டிருக்கும். உங்கள் ஊகத்தில் அர்த்தமில்லை!" என்று திட்டமாகச் சொன்னான் உக்கிரன்— பிரமிப்புக்கிடையில்.

வீரநாராயணன் உக்கிரனை உற்று நோக்கினான் பல விநாடிகள். அவன் நோக்கு தன் ஆத்மாவையே ஊடுருவுவது போல் பட்டதால் சங்கடத்துடன் அசைந் தான் உக்கிரன். அப்படி அவனை ஊடுருவிப் பார்த்த வண்ணம் சொன்னான் வீரநாராயணன், "உக்கிரா! அப்படி வழி ஏதுமில்லாவிட்டால் நீ திருடி வைத்திருக்கும் முத்துக்குவியல் கரைந்து வருகிறதே, அது எப்படி? உள்ளிருக்கும் உன் ஆட்களே திருடுகிறார்களா?" என்று.

வீரநாராயணன் கேள்வி இடியென இறங்கியதால் திக்பிரமை பிடித்து மலைத்தான் உக்கிரன் பல விநாடிகள்.

"என் முத்துக்குவியல் திருடு போகிறதா? யார் சொன்னது?" என்று கேட்டான் கோபத்துடன்.

"நான் சொல்லுகிறேன்!" என்றான் வீரநாராயணன்.

"சாட்சியம்?" என்று வினவினான் உக்கிரன்.

"இன்றிரவு கிடைக்கும். அதற்குத்தான் இன்றிரவு இங்கு நாம் தங்குகிறோம்!" என்று வீரநாராயணன் கூறி, "சரி! உக்கிரா! நீங்கள் எல்லோரும் இந்த இடத்தை விட்டு நகராதீர்கள். நானும் நீலவல்லியும் பரதவர் குடிசை வரையில் போய் வருகிறோம்!" என்று எழுந்தான். நீலவல்லியும் உடன் எழுந்தாள்.

"வீரநாராயணா! நான் முட்டாளல்ல!" என்று உக்கிரனும் எழுந்தான்.

"அப்படியா!" இகழ்ச்சியிருந்தது வீரநாராயணன் குரலில்.

"இகழ்ச்சியிருக்கட்டும் வீரநாராயணா! பரதவர் குடிசைக்குச் சென்று அவர்களை அழைத்து வருவதை நான் அனுமதிக்க மாட்டேன்!" என்றான் உக்கிரன்.

"நீ முட்டாள் என்பது எனக்கு ஏற்கெனவே தெரியும். உன்னையும் உன்னைச் சேர்ந்த இந்தக் கையாலாகாத கூட்டத்தையும் அழிக்க வேண்டுமானால் இன்று காலை யிலேயே அழித்திருப்பேன். நான் கையசைத்ததும் இங்கு இரு பரதவர் கூட்டங்களை நீ பார்த்தாயல்லவா?" என்று வினவிய வீரநாராயணன், மேலே நடக்கத் தொடங்கி னான். நீலவல்லி அவனைத் தொடர்ந்தாள்.

பத்தடி நடந்ததும் வீரநாராயணன் திரும்பி, "உக்கிரா! சிறுவனை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்!" என்று எச்சரிக்கையும் செய்துவிட்டு நடந்தான்.



வீரநாராயணனும் நீலவல்லியும் திரும்பியபோது இருள் நன்றாக மூண்டுவிட்டது. வீரநாராயணன் உக்கிரனை நோக்கி, "உக்கிரா! நீங்கள் கொளுத்தியிருக்கும் பந்தங்களை அணைத்து விடுங்கள். புதர்களில் பதுங்கி மறைந்திருங்கள். யார் இருப்பதும் தெரிய வேண்டாம்!" என்று உத்தரவிட்டு, வீட்டு முனையில் அப்பொழுதும் அடம் பிடித்து உட்கார்ந்திருந்த சிறுவனை வலுக்கட்டாய மாக இழுத்து வந்து நீலவல்லியுடனும், சிறுவனுடனும் புதரொன்றின் மறைவில் தானும் தங்கினான்.

நாழிகைகள் ஓடிக்கொண்டிருந்தன. எதுவும் நடக்க வில்லை. உக்கிரன் முதலானோர் மெல்ல நம்பிக்கை யிழக்கலாயினர்.

நள்ளிரவு மெல்ல மெல்ல நெருங்கியது. எங்கிருந்தோ மெதுவாக ஒரு புரவியின் காலடிச் சத்தம் கேட்டது. பிறகு புரவியும் அதன் மீது கவசந்தரித்து உட்கார்ந்திருந்த வீரனும் நட்சத்திர வெளிச்சத்தில் கண்ணுக்குத் தெரிந்தனர். புரவி வீரன் நேராக அதைத் தோப்பு வீட்டுக்கு எதிரில் செலுத்தினான். வீட்டை அடைந்ததும் கடிவாளத்தை அவன் ஒருமுறை இழுத்துவிட, புரவி ஓரே தாவில் படிகளைத் தாண்டி வீட்டுத் தாழ்வாரை முகப்பில் நின்றது. அடுத்த கணம் வீட்டின் கதவு திறக்கப்பட்டு, உள்ளிருந்து ஒரு தீபம் வெளி வந்தது.

# 10. வீட்டுக்குள்

நள்ளிரவில் வந்த அந்தப் புரவி வீரன் யார் என்பது புதர்களில் மறைந்திருந்த அனைவருக்குமே தெரிந்திருந்த தால், அனைவரும் ஆச்சரியத்தின் வசப்பட்டு அடுத்து என்ன நடக்கும் என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருந் தனர். அடுத்து நடந்தது அவன் வந்ததைவிட விசித்திரமா யிருந்தது. காயல் ராஜப்பிரதிநிதி அந்த இருட்டில் திருடன் போல் அங்கு எதற்காக வந்தார் என்பதை உக்கிரன் முதலானோர் உள்ளத்துள் சர்ச்சை செய்து கொண்டிருந்த சமயத்தில், உள்ளிருந்து ஒரு தீபம் வந்ததும், தீபத்தையும் ஒரு சிறு மூட்டையையும் ஏந்தி ஒருவன் வந்ததையும், அப்படி ஏந்தி வந்தவன் காத்தன் என்பதையும் கண்ட நீலவல்லி, கோபத்துடன் துடித்து எழுந்திருக்க முயன்றாள். அவள் தோளைப் பிடித்து அழுத்திப் பழையபடி உட்கார வைத்தான் வீரநாராயணன்.

ஒரு கையில் தீபத்தைப் பிடித்திருந்த காத்தன், இன்னொரு கையிலிருந்த மூட்டையைக் காயல் பிரதிநிதி யிடம் கொடுத்தான். காயல் பிரதிநிதி அந்த மூட்டையை அழுத்தி அழுத்திப் பார்த்தான் இரு கைகளாலும். பிறகு திருப்தியடைந்தவனாய் மீண்டும் கடிவாளத்தை ஒரு கையில் ஏந்தி இன்னொரு கையில் அந்த மூட்டையுடன் புரவியைத் தட்டி விடவே, புரவி படிகளில் இறங்கி வேகமாக மரங்களிடையே புகுந்து மறைந்து விட்டது.



காத்தன் மீண்டும் உள்ளே சென்று வீட்டுக் கதவைத் தாழிட்டுக் கொண்டான்.

அதுவரை பொறுமையாயிருந்த உக்கிரனும் மற்றோரும், எல்லோருக்கும் மேலாக நீலவல்லியும், சினத்துடனும் பரபரப்புடனும் எழுந்தார்கள். அவர்களைச் சத்தம் செய்யாதிருக்கும்படி உத்தரவிட்ட வீரநாராயணன் மட்டும் புதர்களின் மறைவில் இருந்து கிளம்பி, தனது புரவியில் ஏறி எதிரேயிருந்த வீட்டை நோக்கி விரைந்தான். வீரநாராயணன் புரவியும் படிகளில் பாய்ந்து ஏறி வாயிலின் முகப்பில் நின்றது. மீண்டும் அந்த வீட்டின் கதவு திறக்கப்பட்டு தீபத்துடன் காத்தன் வந்தான். ஆனால் எதிரே நின்றவனைக் கண்டதும் அவன் முகத்தில் குழப்பம் அதிகமாகத் தெரிந்தது. கிலியும் பெரிதும் பரவியிருந்தது. திரும்பி உள்ளே ஓட முயன்றான் காத்தன். ஆனால் வீரநாராயணன் புரவி சரேலென்று திரும்பி அவனுக்கும் முன்னால் தாவி வீட்டு வாயிலை அடைத்து நின்றது. பந்தத்தை முன்பு நீலவல்லி மீது வீசியதுபோல் வீர நாராயணன் மீது தீபத்தை வீச முயன்ற காத்தன் பிரமை பிடித்து நின்றான். அடுத்த விநாடி, அவன் கையிலிருந்த தீபம் வீரநாராயணன் புரவியிலிருந்தபடியே வீசிய கடிவாளத்தின் முனையால் அவன் கையிலிருந்து பறிக்கப் பட்டுத் தொலைவில் போய் விழுந்தது. அப்படி விழுந்த தீபத்தின் மண் அமைப்பு சுக்கலாகி விட்டாலும் அதிலிருந்த எண்ணெயும் திரியும் பக்கத்திலிருந்த சுள்ளி களைப் பற்ற வைத்தது.

அந்தச் சமயத்தில் காத்தனைச் சர்வ சாதாரணமாக நோக்கிய வீரநாராயணன், "காத்தா! அந்தச் சுள்ளிகளில் ஒன்றை மாத்திரம் தீயுடன் எடுத்துக் கொள். இங்கு

நமக்கும் வெளிச்சம் வேண்டும். மற்றவற்றை அணைத்து விட்டு வா. நாம் பேச வேண்டியது நிரம்ப இருக்கிறது!" என்று உத்தரவிட்டான். குரல் மேலுக்குச் சாதாரணமாகயிருந்தாலும், அதில் கண்டிப்பும் எச்சரிக்கையும் சந்தேகத்துக்கு இடமின்றி ஒலித்ததால், காத்தன் சொன்னபடி செய்தான். "காத்தா! முன்னால் உள்ளே செல். ஆனால் சுள்ளியைத் தீயுடன் என் முகத்தில் எறிய முயலாதே. நான் நீலவல்லியுமல்ல, என்னைப் பின்னாலிருந்து மண்டையிலடிக்கக் காயல் பிரதிநிதியும் இங்கு இல்லை!" என்று முன்னால் நடந்ததை விளக்கவும் செய்தான்.

காத்தன் எரியும் சுள்ளியுடன் வீரநாராயணன் அருகில் வந்தான். "அப்படியானால், அன்று எங்களை நோக்கி வந்த புரவி உங்களுடையதாகத்தானிருக்க வேண்டும்!" என்றான்.

"ஆம்." ஒற்றைச் சொல் பதில் வந்தது.

"நானும் ராஜப்பிரதிநிதியும் மறைந்ததும், நீங்கள்தான் நீலவல்லியைக் காத்திருக்க வேண்டும். அவளை நீங்கள் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டதை நானே பார்த்தேன் மறைவில் இருந்து!" என்றான் காத்தன்.

வீரநாராயணன் வதனத்தில் சந்தேகச் சாயை படர்ந்தது. "பிரதிநிதியும் என்னைப் பார்த்தாரா?" என்று வினவினான் சந்தேகம் குரலிலும் ஒலிக்க.

"இல்லை, அவர் என்னைத் தவிர வேறு யார் கண்ணிலும் படுவதில்லை. யார் வந்தாலும் மறைந்து விடுவார்!" என்றான் காத்தன்.

"ஏன்?" என்று வினவினான் வீரநாராயணன்.



"காரணம் தெரியவில்லை. நீதியை அரசர் பெயரால் நிலைநாட்ட வேண்டிய ராஜப்பிரதிநிதி ஏன் யாரைக் கண்டாலும் மறைய வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை!" என்று காத்தன் சொன்னான்.

சிறிது சிந்தித்தான் வீரநாராயணன். பிறகு காத்தனை நோக்கி, "காத்தா! இங்கு நின்று பேசுவானேன்? உள்ளே போய்ப் பேசுவோம், வா!" என்று அழைத்துப் புரவியிலிருந்து இறங்கிக் காத்தனைத் தொடர்ந்தான் வீட்டுக்குள். உள்ளே செல்லுமுன்பு சற்றே தலையைத் திருப்பி ஒருமுறை புதர்களைக் கவனித்துவிட்டுச் சென்றான்.

வீட்டின் உட்புறம் பரம சுத்தமாயிருந்தது. அவ்வப் பொழுது அது உபயோகத்திலிருந்ததை வீரநாராயணன் புரிந்துகொண்டான். வீட்டுக்குள்ளே முகப்பில் ஒரு கூடமும் அடுத்து சிறு சமையற்கட்டும் இருந்தன. அதை அடுத்துத் துருப்பிடித்த பழைய பூட்டால் பூட்டப்பட்ட ஒரு அறையும் இருந்தது. காத்தன் சுள்ளித் தீபத்தைக் காட்ட இவையனைத்தையும் வீரநாராயணன் பார்த்தாலும் எதிலும் அக்கறை காட்டவில்லை அவன். "சரி, காத்தா! இந்த வீட்டில் என்ன இருக்கிறது பார்ப்பதற்கு? தீபத்தைக் கொளுத்து. நாம் சிறிது நேரம் பேசுவோம்!" என்றான்.

சுள்ளியிலிருந்த சுடரைக் கொண்டே முகப்பு அறையிலிருந்த குத்துவிளக்கொன்றை ஏற்றினான் காத்தன். அந்த விளக்குக்குப் பின்னால் பாண்டிய நாட்டுக் குயவர் செய்த பலவித அலங்கார மண் விளக்குகள் இருந்ததைக் கண்ட வீரநாராயணன் பெருமூச்சு விட்டு, "காத்தா! இந்த

நல்ல விளக்குகளில் ஒன்றை இன்று நான் உடைத்து விட்டேன். பாண்டிய நாட்டு மண் சிற்பிகளுக்கு நான் செய்த அபசாரம் அது!" என்று கூறினான்.

"கவலைப்படாதீர்கள் எஜமான். இந்த மாதிரி ஆயிரம் விளக்குகள் இந்த வீட்டின் பின்கட்டில் கிடக்கின்றன!" என்று சொல்லிக்கொண்டுபோன காத்தன், சட்டென்று பேச்சை நிறுத்தி விழித்தான்.

"இந்த வீட்டுக்குப் பின்கட்டு வேறு இருக்கிறதா காத்தா?" என்று ஏதுமறியாதவன் போல் கேட்டான் வீர நாராயணன்.

வீரநாராயணன் இந்தக் கேள்வியைக் கேட்பதற்குள் தன்னைச் சமாளித்துக் கொண்ட காத்தன், "இருக்கிறது எஜமான்!" என்றான்.

"எனக்கு அதைக் காட்டவில்லையே நீ!" என்று அலுத்துக்கொண்டான் வீரநாராயணன்.

"அது நீங்கள் பார்க்கத் தகுந்தது அல்ல, எஜமான்!" சமாளித்தான் காத்தன்.

"ஏன் காத்தா?"

"அதில் தட்டுமுட்டுச் சாமான்கள் கிடக்கின்றன. தவிர ஓட்டை உடைசல்களை அங்குதான் போடுகிறோம். அவற்றுடன் இந்த மண் விளக்குகளையும் குவிக்கிறோம். பாம்பு, தேள் எல்லாம் அந்த அடைசலில் இருக்கும்."

"அப்படியா!"

"ஆமாம், எஜமான்."

"காத்தா, நான் பாம்பையும் தேளையும் பார்த்து நாளாகிறது."



"எஜமான்!"

"அதனால் அவை இருந்தாலும் பார்க்கலாம். அந்தப் பின்கட்டையும் பார்ப்போமே."

இதைக் கேட்டதும் காத்தன் நடுங்கினான். "வேண்டாம் எஜமான், வேண்டாம்" என்று கெஞ்சினான்.

"காத்தா!" என்று மீண்டும் அழைத்தான் வீர நாராயணன்.

"எஜமான்!"

"ஏன் அச்சப்படுகிறாய் அதைக் காட்டுவதற்கு?"

"உங்கள் நன்மைக்குத்தான், எஜமான்."

"என் நன்மைக்கு என்ன! பாம்பு கடித்துவிடும் என்று அஞ்சுகிறாயா?"

ஒரு விநாடி விழித்தான் காத்தன். பிறகு வீர நாராயணன் அருகில் வந்து, "எஜமான்! இந்த ஒரு விஷயத்தில் அடம் பிடிக்காதீர்கள். காரணமாகத்தான் சொல்கிறேன். உங்கள் நன்மையை முன்னிட்டுத்தான் சொல்கிறேன்!" என்று மன்றாடினான்.

ஆனால் வீரநாராயணன் மசியவில்லை. "ஓசைப் படாமல் திற. நானும் ஓசைப்படாமல் பார்த்துவிட்டு வருகிறேன்!" என்று இரகசியமாகச் சொன்னான். "சரி எஜமான். ஆனால் ஒன்று. அங்கு காண்பதை நீங்கள் யாரிடமும் சொல்வதில்லை என்று சத்தியம் செய்ய வேண்டும்!" என்று கையை நீட்டினான் காத்தன்.

வீரநாராயணன் கையிலடித்துச் சத்தியம் செய்யவே மெள்ள ஒரு பக்கத்து வாயிற்படி வழியாகப் பின்கட்டுக்கு

அழைத்துச் சென்றான் காத்தன். அங்கிருந்து ஒரு பூட்டை ஓசைப்படாமல் திறந்து கதவையும் கால்வாசி திறந்து உள்ளே எட்டிப் பார்த்தான் திருடனைப் போல். பிறகு வீரநாராயணனையும் அருகில் வரச்சொல்லிப் பின்கட்டு இருந்த நிலையைக் காட்டினான். அதை இரண்டு விநாடிகளே பார்த்த வீரநாராயணன் திரும்பி வரவே காத்தனும் மிக மெதுவாகக் கதவைச் சாத்தினான்.

மீண்டும் இருவரும் கூடத்துக்கு வந்தவுடன், "காத்தா! இவர்கள் இங்கு வந்து எத்தனை நாளாகின்றன?" என்று வினவினான்.

"பத்து நாட்களாகின்றன!" என்றான் காத்தன்.

"சரி, இவர்கள் வந்த படகு எங்கே?" என்று விசாரித்தான் வீரநாராயணன்.

"இந்த இடத்திலிருந்து தென்புறம் சென்றால் பெரிய முந்திரித் தோப்பு இருக்கிறது..." என்று காத்தன் குறிப்பாகச் சொன்னான்.

வீரநாராயணன் புரிந்ததற்கு அறிகுறியாகத் தலையை ஆட்டினான். "ஆம், பார்த்திருக்கிறேன்," என்றும் சொன்னான்.

காத்தன் அதற்குப் பின்பு ஏதும் பேசவில்லை. வீரநாராயணனே உத்தரவுகளைப் பிறப்பித்தான். "காத்தா! நீ குற்றவாளியல்ல. ஒரு பெரிய மனிதனின்—அயோக்கியனின் கைப்பாவை. உனக்கு அரசனிடம் மன்னிப்புக் கிடைக்கும். ஆனால் நீ இனிமேல் நான் சொல்கிறபடி நடந்துகொள்ள வேண்டும்!" என்று கூறினான்.



"தாங்கள் யார்?" என்று கேட்டான் காத்தன்.

"அவசியம் வரும்போது சொல்கிறேன்!" என்ற வீரநாராயணன், "காத்தா, விளக்கை ஊதிவிடு. நீயும் உறங்கு. வழக்கம்போல் காலையில் பின்புறமாகச் சென்றுவிடு!" என்று கூறினான்.

காத்தன் மலைத்தான். "பிரபு! நான் அப்படி வருவதும் போவதும் உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வினவினான் விவரம் புரியாமல்.

"அவசியம் வரும்போது சொல்கிறேன்!" என்று வீர நாராயணன் வெளியே சென்றான். காத்தனும் விளக்கை ஊதிவிட்டுக் கதவைச் சாத்திக்கொண்டான்.

வீரநாராயணன் வெளியே வந்ததும் நேராகப் புதர்களுக்கு அருகே சென்று உக்கிரனை அழைத்து, "உக்கிரா! சீக்கிரம் உன் நண்பர்களுடன் உன் கோட்டைக்குச் சென்றுவிடு. இன்றிலிருந்து எட்டாவது நாள் நான் அங்கு வருகின்றேன். கோட்டையைப் பாதுகாப்புக்குப் பலப்படுத்து!" என்று கூறினான்.

உக்கிரன் விழித்தான். "என் கோட்டையை அவ்வளவு சீக்கிரத்தில் யாரும் பிடிக்க முடியாது!" என்றான்.

"பிடிக்க முடியாத எந்தக் கோட்டையும் உலகத்தில் கிடையாது. ஆகையால் வீண் எண்ணத்தால் அஜாக்கிரதையா யிருக்காதே. இன்னும் நான்கைந்து நாட்களில் உன் கோட்டை முற்றுகையிடப்படும்!" என்று தெளிவாக்கினான்.

"யாரால்?"

"யார் உன் முத்தை, அதாவது நீ திருடிய முத்தைத் திருடுகிறானோ அவனால்."

சிறிது சிந்தனையில் இறங்கினான் உக்கிரன். "சற்று முன்பு புரவியில் வந்தானே, அவனிடம் காத்தன் ஒரு மூட்டையைக் கொடுத்தானே, அதில் என்ன இருந்தது?" என்று கேட்டான்.

சர்வ சகஜமாக வந்தது வீரநாராயணன் பதில், "உன் முத்தில் சிறு பகுதி!" என்று.

# 11. சிங்களவர் பத்துப் பேர்

**வீ**ரநாராயணன் தெரிவித்த விஷயங்களால் அடியோடு நிலைகுலைந்து போன உக்கிரன், அதிகமான கோபத்தின் வசப்பட்டு, "அப்படியானால் விவகாரம் முற்றுகிறது!" என்று கூவினான் ஆத்திரத்துடன்.

அவன் கோபத்தையும், கோபத்தின் விளைவாக ஏற்பட்ட ஆத்திரத்தையும் கவனிக்கவே செய்த வீர நாராயணன், "உக்கிரா! எந்த விஷயமும் முழுதும் முற்றிய பிறகுதான் ஒரு முடிவுக்கு வரும். அப்படி வரும்போது முடிவு நாம் முற்றும் எதிர்பாராததாகவும் இருக்கும். ஆத்திரத்தால் நீ எதையும் சாதிக்க முடியாது. ஆகையால் நான் சொன்னபடி உன் கோட்டையைப் பலப்படுத்து. போய் வா!" என்று துரிதப்படுத்தினான்.

அவன் அப்படி உத்தரவிட்ட சில விநாடிகளுக் கெல்லாம், உக்கிரனுடைய வீரர்கள் புறப்படச் சித்தமாகி விட்டாலும், அப்பொழுது ஒரு யோசனை சொன்னான் வீரநாராயணன். "உக்கிரா! உன் எதிரி மிகவும் தந்திரசாலி. பெரிய அறிவாளி. ஆகையால் எச்சரிக்கையுடன் நடந்து கொள். தவிர, உன் வீரர்களைப் புரவியிலிருந்து இறங்கச் சொல். சிறிதும் சத்தம் செய்யாமல் இந்தத் தோப்பை விட்டு வெளியே செல்லுங்கள்!" என்று கூறினான்.

உக்கிரன் வீரநாராயணனை வியப்புடன் பார்த்தான். "சத்தம் செய்தாலென்ன? அந்த வீட்டில் காத்தன்

ஒருவன்தானே இருக்கிறான். அவன் வெளியே வந்தால் வெட்டிப் போடுகிறோம்!" என்று வீரம் பேசினான் உக்கிரன்.

"அங்கு காத்தன் மட்டும் இல்லை." வீரநாராயணன் பதில் சகஜமாயிருந்தாலும், அதில் குரூரம் சிறிது ஒலித்தது.

குரூரத்தை எப்பொழுதும் வீரநாராயணன் குரலில் கேட்டிராத உக்கிரன் சற்றுப் பிரமித்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல் "வேறு யார் இருக்கிறார்கள் அங்கே?" என்று தோப்பு வீட்டின் மீது கண்ணைச் செலுத்தினான்.

"சிங்களவர் இருக்கிறார்கள்." இதைச் சொல்லி முறுவல் செய்தான் வீரநாராயணன்.

இது எல்லோருக்கும் அதிர்ச்சியைத் தந்ததால், அதுவரை மவுனமாயிருந்த நீலவல்லி, "யார்? சிங்களவரா!" என்று வினவினாள் அதிர்ச்சி குரலிலும் ஒலிக்க.

"ஆம்."

"எத்தனை பேரோ?"

"பத்துப் பேர்."

"இங்கு எதற்காக வந்திருக்கிறார்கள்?"

"ஊரைச் சுற்றிப் பார்க்க வந்திருக்கலாம்."

"இந்த வீட்டில் தங்குவானேன்?"

"மறைவாயிருக்கிறது. அமைதியிருக்கிறது. தோப்பும் கடலுக்கருகே இருக்கிறது."



வீரநாராயணனின் இந்தப் பதில்கள் அவள் ஆத்திரத்தை அதிகமாகக் கிளறிவிட்டதால், "வீரரே!" என்று அவனை அழைத்தாள் சினத்துடன்.

இன்முறுவல் காட்டினான் அந்த வாலிபன் அவள் சினத்தைக் கண்டு. "நாராயணன் என்ற சொல்லையும் சேர்த்துக்கொண்டால் என் பெயர் முழுவதையும் சொன்னதாகும்!" என்று சொல்லி லேசாக நகைத்தான்.

மேலும் சினந்தாள் நீலவல்லி. "சொல்ல இஷ்டமில்லா விட்டால் திட்டமாக அப்படிச் சொல்வது தானே? இந்த விதண்டாவாதம் எதற்கு?" என்று வினவினாள் அவள்.

இந்த உரையாடலைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்த உக்கிரனையும் அவன் வீரர்களையும் நோக்கிய வீர நாராயணன், "உக்கிரா! நீங்கள் போகலாம். காலம் கடத்தாதீர்கள். இங்கு இன்னும் சில அலுவல்கள் இருக் கின்றன. நான் முடித்துக்கொண்டு வருகிறேன்!" என்று முடிவாகக் கூறவே, உக்கிரனும் அவன் வீரரும் புரவி களைக் கைகளில் பிடித்துக்கொண்டு ஓசைப்படாமல் நடந்தனர். அவர்கள் கண்ணுக்கு மறைந்ததும் வீர நாராயணன் நீலவல்லிக்கு அருகே வந்து, அவள் இடை யைத் தன் இரு கைகளாலும் பிடித்துக் கொண்டான். அதைப் பார்த்த அவள் தம்பி தோப்புக்குள் மறையவே அவள் நகைத்தாள்.

"எதற்கு நகைக்கிறாய், நீலவல்லி?" என்று வினவினான் வீரநாராயணன்.

"தம்பியையும் பழக்கி விட்டீர்கள்!" என்றாள் நீலவல்லி, அவன் இடையைப் பிடித்து இழுத்ததால் அவனுடன் நெருங்கி இணைந்து.

அவளைத் தனக்கெதிரில் இறுக்கிக் கொண்ட வீர நாராயணன், "என் மீது வரவர அபாண்டமான பழி களைப் போடுகிறாய்!" என்று அவளை நோக்கினான்.

அவளும் தலை நிமிர்ந்து அவனை நோக்கினாள். "என்ன அபாண்டமான பழிகளைப் போட்டு விட்டேன்?" என்று வினவினாள்.

"நான் விதண்டாவாதம் செய்வதாகச் சற்று முன்பு குற்றம் சாட்டினாய்..." என்றான் வீரநாராயணன்.

அவள் அவன் முகத்தைப் பார்த்த வண்ணம் நகைத்தாள். "உங்கள் பெயரை அத்தனை பேர்கள் எதிரில் சொல்லச் சொன்னீர்களே, அதன் அர்த்தமென்ன?" என்று கேட்டாள் நகைப்பின் ஊடே.

"என்ன சொன்னேன்?"

"வீரரே என்றழைத்தால் நாராயணனைச் சேர்த்துக் கொள் என்றீர்கள்."

"அதனாலென்ன?"

"உங்கள் பெயரை எல்லோருக்கும் எதிரில் நான் எப்படிச் சொல்ல முடியும்?"

"தனியாக இருந்தால் சொல்லுவாய்?"

"அதற்கும் சந்தர்ப்பம் உண்டு."

"எப்பொழுது?"

"சொல்லும்போது தெரியும்."

இதை அவள் சொன்னதும் அவளை இரு கைகளாலும் உயரத் தூக்கிய வீரநாராயணன், அப்படியே அவள் வயிற்றுக்குச் சற்று மேலே தனது தலையைப் புதைத்துப் புரட்டினான். அவள் குனிந்து, "அடே! வீர நாராயணா! அயோக்கியனே!" என்று அவன் பெயரைச் சொல்லி அழைத்தாள். அவன் தலையை மார்பில் இறுக்கிக் கொண்டாள். அதே நிலையில் அவன் மரத் தோப்புக்குள் நுழைந்தான். அங்கு நுழைந்ததும் அவளை நிலத்தில் இறக்கி— "அடீ! நீலவல்லி! என்னையா அயோக்கியன் என்றாய்..."



"ஆம். சுத்த அயோக்கியன்!" என்றாள்.

இதைச் சொல்லிக் கீழே குவிந்திருந்த மணலில் படுத்தாள். "வீரநாராயணா! நீ யார் என்பது எனக்குத் தெரியாது. எங்கிருந்து வந்தாய்? எதற்காக வந்தாய்? உன் ஊரென்ன? பேரென்ன? எதுவுமே எனக்குத் தெரியாது. ஆனால் சந்தர்ப்பங்கள் நம்மை இணைத்துவிட்டன. என் உள்ளம் உன்பால் லயித்துவிட்டது. அதை மீட்க என்னாலும் முடியவில்லை!" என்று கூறிப் படுத்த வண்ணம் அவனை நோக்கி இரு கைகளையும் நீட்டினாள்.

அந்த வரவேற்பில் சந்தேகத்துக்கு இடமில்லை. இருப்பினும் அவள் அழைப்பை அவன் ஏற்கவில்லை. ஏதோ யோசித்துக் கொண்டு நின்றான். பிறகு நின்ற வண்ணமே, சொன்னான். "நீலவல்லி! உன்னை முறைப்படி மணக்கிறேன், வெகு சீக்கிரம். அதற்கு முன்பு சில முக்கிய அலுவல்கள் இருக்கின்றன!" என்று கூறிவிட்டு, குனிந்து அவளை இரு கைகளாலும் தூக்கிக் கொண்டு அவள் இதழ்களில் தனது இதழ்களைப் பொருத்தினான்.

அவள் இதழ்களை மீட்டுக் கொண்டாள். "இப்படி எத்தனை நாள் ஏமாற்றப் போகிறீர்கள்?" என்று கேட்டு, "உங்களால் என் வெட்கமும் போய்விட்டது!" என்று குற்றமும் சாட்டினாள்.

"எந்தப் பெண்ணும் ஒரு நாள் தனது நாணத்தை யாராவது ஒரு புருஷனுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும். அதில் தவறில்லை. அது சிருஷ்டியின் நியதி!" என்று கூறி, அவளைக் கைகளில் ஏந்திய வண்ணம் தோப்புக்குள் நடந்து கடற்கரை சமீபம் வந்தான். அங்கு அவளை இறக்கி விட்டு, "நீ போய்க் குடிசைகளில் இருந்து பரதவர் நாலு பேரை அழைத்து வா!" என்றான்.

அவள் பேசாமல் குடிசைகளை நோக்கி நடந்தாள். அடுத்த சில நிமிடங்களில் அவளைப் பின்பற்றி வந்த பரதவரை நோக்கி, "அதோ அந்த முந்திரித் தோப்பில் ஒரு படகு இருக்கிறது. அதை வெளியில் இழுத்துப் பற்ற வைத்து விடுங்கள். உங்களை யாராவது எதிர்த்தால் வெட்டிப் போடுங்கள். யாரும் வராவிட்டால் அதோ நான் வந்த தோப்புக்குள் இருக்கும் வீட்டில் பத்துச் சிங்களவர் இருக்கிறார்கள். அவர்களைச் சிறைப்பிடித்து வையுங்கள்!" என்று உத்தரவிட்டு, "நீலவல்லி! நீயும் உன் தம்பியும் விடியும்வரை பரதவர் குடிசைகளில் இருங்கள். நான் மீண்டும் வருகிறேன்!" என்று கூறிவிட்டு, தனது புரவியில் ஏறித் தாமிரபரணிக் கரையோரம் சென்றான்.

அவன் முகத்தில் மிகுந்த திருப்தி நிலவியது. "நண்பரே! நாம் வந்த காரியம் நான் எதிர்பார்த்ததற்கு முன்னமேயே முடிந்துவிடும் போலிருக்கிறது!" என்று குனிந்து குதிரையின் காதில் சொன்னான்.

குதிரை தலையசைத்தது. பிறகு காற்றெனப் பறந்தது. அரபுப் புரவியாதலால் கடற்கரை மணலை அது லட்சியம் செய்யவில்லை.

# 12. அவள் பிறப்பு மர்மம்

நன்றாக விடிந்து கதிரவன் கிளம்பிய பின்பே வீரநாராயணன் பரதவர் குடிசைகள் இருந்த இடத்துக்குத் திரும்பி வந்தான். அவன் வெகு தூரம் விரைவாகப் பயணம் செய்துவிட்டுத் திரும்பியிருக்கிறான் என்பதை அவன் புரவியின் வாயில் கப்பிக்கிடந்த நுரையிலிருந்தும், முதுகில் பளபளத்த வியர்வைத் துளிகளிலிருந்தும் நீலவல்லி புரிந்துகொண்டாள். புரவியின் அழுத்தமான குளம்பொலிகளைக் கேட்டதுமே நீலவல்லியின் தம்பியும் இதர பரதவரும் வெளியே வந்து விட்டதால், ஒரு வரவேற்புக் கூட்டமே அவனுக்காகக் காத்திருந்தது. ஆனால், அவர்கள் யாரையும் பார்க்காமல், நீலவல்லியிடம் கூடப் பேசாமல், புரவியின் சேணங்களைக் கழற்றிப் போட்டு அலைகளுக்கருகே அழைத்துச் சென்று வீர நாராயணன் அதைக் கடல் நீரில் நன்றாகத் தேய்த்துக் குளிப்பாட்டினான். பிறகு கடல் நீரில் நீந்தவும் விட்டுத் திரும்பினான் கரைக்கு.

புரவியைக் குளிப்பாட்டியதால் அவன் அங்கி முழுவதும் நனைந்திருந்தது. இரண்டு இடங்களில் தட்டையான அழுக்கும் படிந்திருந்தது. அதையெல்லாம் கைகளால் அனாயாசமாகத் தட்டிவிட்ட வீரநாராயணன் பரதவரை அணுகி, "சிங்களவர் எங்கிருக்கிறார்கள்?" என்று வினவினான்.

எட்ட இருந்த இரு குடிசைகளைப் பரதவர் தலைவன் காட்டினான். அவர்கள் படகு எரிக்கப்பட்டிருந்த மற்றொரு மூலையையும் சுட்டிக் காட்டி, "தாங்கள் இட்ட இரண்டு கட்டளைகளையும் நிறைவேற்றி விட்டோம்!" என்று பரதவர் தலைவன் சொல்ல, திருப்தியுடன் தலையசைத்த வீரநாராயணன், "நானும் நீராடிவிட்டு வருகிறேன்," என்று கூறி இரண்டடி கடல் நீரை நோக்கி நடந்தவன், சட்டென்று நின்று திரும்பி, "நீலவல்லி! நீயும் வருகிறாயா?" என்று வினவினான்.

நீலவல்லி அவனைக் கோபத்துடன் ஒரு விநாடி பார்த்தாள். பிறகு கோப நடை நடந்து அவனிருக்கும் இடத்தை அடைந்தாள். பிறகு இருவரும் அலைக்குள் மூழ்கி நீந்திச் சென்றார்கள். ஆனால் அன்றைய நீச்சல் முதல் நாள் நீச்சலைப் போல் இல்லை. எந்தச் சரசத்திலும் வீரநாராயணன் ஈடுபடவில்லை. அவளைத் தொடக்கூட முயலவில்லை. அக்கம் பக்கத்தில் நீந்திக் கொண்டே சொன்னான், "நீலவல்லி! நாம் இன்றே புறப்பட்டு உக்கிரன் கோட்டைக்குப் போய்விட வேண்டும்!" என்று.

அந்தச் சமயத்தில் உக்கிரன் கோட்டை அவளுக்கு சுவாரஸ்யப்படவில்லை. "என்ன வைத்திருக்கிறது உக்கிரன் கோட்டையில்?" என்று வினவினாள்.

"போர் மூள இருக்கிறது. இன்று பிற்பகல் காயல் பிரதிநிதி அதை முற்றுகையிட ஏற்பாடு செய்திருக்கிறார்!" என்று வீரநாராயணன் சொன்னான்.

"அப்படியா!" என்றாள் வியப்புடன் நீலவல்லி. "இதற்கு மன்னர் சம்மதம் இருக்கிறதா?" என்று வினவினாள்.



"மன்னர் சம்மதம் இல்லை. மன்னருக்கு விஷயம் அடியோடு தெரியாது!" என்றான் வீரநாராயணன்.

"இது அபாயமல்லவா?" நீலவல்லியின் குரலில் ஒலித்தது.

"அபாயத்தைப் பார்த்து அலுவல்களை நடத்தக் காயல் பிரதிநிதிக்கு அவகாசமில்லை. தவிர இந்தப் போர் போராகவும் நடக்காது. ஒரு குற்றவாளியைப் பிடிக்க ராஜப்பிரதிநிதி எடுக்கும் சாதாரண முயற்சியாகவும் இது அறிவிக்கப்படும்!" என்ற வீரநாராயணன், "நீ எதற்கும் முன்னதாக உன் தம்பியுடன் இங்குள்ள பரதவரில் சிலரைத் துணைகொண்டு கொற்கை செல். அங்கு வேல்முருகன் கூட்டத்தை அழைத்துக் கொண்டு உக்கிரன் கோட்டை முன்புள்ள மேற்குப்புறக் காட்டில் மறைந்திரு. மீதி நடவடிக்கைகளை நான் வந்த பிறகு தொடங்கலாம்" என்று கூறிவிட்டுக் கரையை நோக்கி நீந்திச் சென்றான்.

இருவரும் கரையை அடைந்ததும் நீலவல்லி பரதவர் குடிசையை நாடிச் சென்றாள். வீரநாராயணன் கரையில் நின்றபடியே தன் உடைகளைப் பிழிந்து மணலில் போட்டுவிட்டு மாற்றுடை புனைந்து மணலில் உட்கார்ந்து கொண்டான். சேணமில்லாத நண்பர் மணலில் மல்லாந்து புரண்டுவிட்டு ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்து மணலை உதறிக் கொண்டு வீரநாராயணன் தோளில் தனது கழுத்தை வைத்துக்கொண்டார். அதை மெதுவாகத் தடவிக் கொடுத்தான் வீரநாராயணன். "நண்பரே! தென்பாண்டி நாட்டில் நமது திக்விஜயம் இன்னும் இரண்டு நாட்களில் முடிந்துவிடும். நாமிருவரும் வேறு இடத்துக்குப் பயணமாகலாம்!" என்று அதன் செவியில் ஓதினான். அதுவும் பல்லைக் காட்டி மகிழ்ச்சியுடன் கனைத்தது.

அந்த இருவரும் ரகசியம் பேசிக்கொண்டிருந்த சமயத்தில், அங்கு வந்த நீலவல்லி சட்டென்று திரும்ப முயன்றாள். "நீலவல்லி! இப்படி வா!" என்ற வீர நாராயணனின் அதிகாரக் குரல் அவள் நடையைத் தேக்கியதென்றாலும் சினத்தைக் குறைக்கவில்லை. ஆதலால், "புரவியுடன் உங்கள் கொஞ்சல் முடியட்டும்!" என்று சீறினாள்.

"முடிந்து விட்டது. இனி உன்னுடன்தான் கொஞ்சல். வா!" என்று அழைத்த வீரநாராயணன் நகைத்தான்.

நீலவல்லி மிகுந்த கோபத்துடன் திரும்பி நடக்க முற்பட்டாள். ஆனால் இரண்டு எட்டில் பறந்த புரவி, அவளை வழி மறித்து முட்டிக் கொணர்ந்து வீர நாராயணன் மீது தள்ளவே, அவளை இறுகப் பிடித்துக் கொண்டான் வீரநாராயணன்.

எட்ட நின்ற பரதவர் இதைப் பார்த்து நகைத்தனர். நீலவல்லி அவர்களை எரித்து விடுபவள் போல் பார்த்தாள். வீரநாராயணன் அவளைச் சமாதானப்படுத்தி, "நீலவல்லி! இப்படி உட்கார். யாரும் என் உத்தரவை மீறுவதை நண்பர் விரும்ப மாட்டார்!" என்று கூறினான்.

"நண்பராம் நண்பர். குதிரை ஒரு நண்பன். அவமானம்!" என்றாள் நீலவல்லி.

"உன் தம்பி உயிரையும் உன் மானத்தையும் இரு முறை காத்தது நண்பர்தான்!" என்று விளக்கினான் வீரநாராயணன்.

"என் தம்பியைக் காப்பாற்றினார் நண்பர். என் மானத்தை எப்பொழுது காத்தார்?" என்று நீலவல்லி வினவினாள்.



"காயல் பிரதிநிதி உன்னை மண்டையிலடித்தது நினைவிருக்கிறதா?"

"இருக்கிறது."

"பிறகு அவர் ஏன் உன்னைத் தூக்கிப் போகவில்லை? என் மடிக்கு எப்படி வந்தாய்?"

"தெரியவில்லை."

"சொல்கிறேன், கேள். உன்னை நினைவிழக்கும்படி பிரதிநிதி குறுவாளால் உன் மண்டையில் தட்டியதும், உன்னைத் தூக்க முயன்றார். காத்தனையும் துணைக் கழைத்தார். "காத்தா! என் ஆசைநாயகியை லேசாகப் பிடி. என் புரவியின்மீது கிடத்துவோம். பிறகு அவளை இன்று என் சயன அறைக்கு அழைத்துச் செல்கிறேன்!" என்றும் சொன்னார் ராஜப்பிரதிநிதி. அப்பொழுது அவன் மீதும் காத்தன் மீதும் பாய்ந்தார் நண்பர். இருவரும் விழுந்ததும் காயல் பிரதிநிதியின் கழுத்தில் பற்களைப் பொருத்த முயன்றார். பிரதிநிதி எழுந்து பறந்தார். காத்தன் ஒரு விநாடி நின்றான். அவனை நோக்கிப் பறந்தார் நண்பர். காத்தன் காற்றை விட வேகமாகப் பறந்தான். பிறகு நான் உன்னை அவர்மீது கிடத்தி இங்கு கொண்டு வந்தேன். மீதி விஷயம் உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்!" என்று விவரித்தான் வீர நாராயணன்.

இந்தக் கதையைக் கேட்டுப் பிரமை பிடித்து உட்கார்ந்துவிட்ட நீலவல்லி, சட்டென்று எழுந்து சென்று நண்பரின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். அதன் கன்னங்களிலும் நெற்றியிலும் முத்தமிட்டாள்.

"நண்பரே! நீலவல்லி உம்மை முத்தமிடுவது தகாது. இது நீர் நண்பனுக்குச் செய்யும் துரோகம்!" என்று கூவினான் வீரநாராயணன்.

நீலவல்லி இன்பமாக நகைத்தாள். அப்பொழுது வீசினான் அந்தக் கேள்வியை வீரநாராயணன். "நீலவல்லி! நீ யாரையும் முத்தமிட முடியாது. இதுவரை நமக்குள் இருந்த உறவும் இனி இருக்காது..." என்றான் துன்பம் தோய்ந்த குரலில்.

அவன் தன்னிடம் வழக்கம்போல் நடக்காமல் வேறு விதமாக இன்று கடலாடியபோது நடந்துகொண்ட முறையை எண்ணிப் பார்த்த நீலவல்லியின் சந்திர முகத்தில் துன்பமேகம் ஆட்கொண்டு, அதன் பொலிவைக் குறைத்தது சில விநாடிகள். "என்ன உளறுகிறீர்கள்?" என்று வினவினாள் நீலவல்லி.

வீரநாராயணன் முகத்திலும் துன்பச் சாயை படர்ந்தது. "உளறவில்லை, நீலவல்லி. இன்றுதான் நீ யாரென்பதை உணர்ந்தேன். நீ ஏற்கெனவே இந்த நாட்டு இளவரசனுக்கு நிச்சயிக்கப்பட்டவள் என்பதையும் கேள்விப்பட்டேன். இனி நாம் நமது உறவை மறந்துவிட வேண்டும்!" என்றான்.

நீலவல்லி அதிர்ச்சியுடன் நோக்கினாள் வீர நாராயணனை. பிறகு மணலில் கண்களை ஓட்டி, "வீரரே! நான் விற்பனைப் பண்டமில்லை. தவிர ஒரு புருஷனை வரித்த பின்பு இரண்டாவது புருஷனை என் மனம் நாடாது. அவன் அரசனாயிருந்தாலும் என்னைத் தொட முடியாது!" என்று திட்டமாக அறிவித்தாள் நீலவல்லி.



வீரநாராயணன் அவளை நோக்கினான் அனுதாபத் துடன். "இது நிச்சயமா? அரசபோகம் உனக்கு வேண்டாமா நீலவல்லி?" என்று வினவினான்.

"வேண்டாம்."

"இளவரசன் மனைவியாவது அற்பசொற்பப் பதவி அல்ல."

"வேண்டாம்."

"இந்த ஒரு விஷயம் உன் கையில் இல்லை. உன் பெற்றோர்கள் உன் சிறு வயதிலேயே நிச்சயித்தது."

"என் பெற்றோரை நான் பார்த்ததில்லை. அவர் களைப் பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை. அவர்களைப் பற்றி எனக்குக் கவலையும் இல்லை!" என்று அடித்துச் சொன்னாள் நீலவல்லி. "பெற்றோராம் பெற்றோர். பதினாறு ஆண்டுகள் மகளைப் பரதவர் குடிசையில் அலைய விட்டார்கள். அவர்கள் யார்? நான் யார்?" என்று மனம் வெறுத்துப் பேசினாள் நீலவல்லி.

அப்பொழுதுதான் அந்த மர்மத்தை உடைத்தான் வீரநாராயணன். "நீ சேரன் மகள்!" என்றான். அவன் சொல்லில் மரியாதை நிரம்பிக் கிடந்தது.

Connemara (State & Central) Library
29 JUL 2018
Received
Chennai-600 008

# 13. பிரதிநிதியின் புதுத் திட்டம்

அன்று அவன் சொன்ன ஒவ்வொரு செய்தியும் பேரதிர்ச்சியைக் கொடுத்தது நீலவல்லிக்கு. தான் ஏற்கெனவே பாண்டி நாட்டு இளவரசனுக்கு நிச்சயிக்கப் பட்டு விட்டதாகச் சொன்னது உள்ளத்தை உலுக்கியது. இத்தனை நாள் தான் கரவந்தபுரம் மன்னன் செல்வி என்று நினைத்திருந்தது போக, சேரன் மகள் என்று அந்த வாலிபன் அறிவித்ததும், முந்திய அதிர்ச்சி பன்மடங் காகவே, அவள் பேசும் சக்தியை இழந்தாள். வீர நாராயணன் கூறியது போன்ற திருமணங்கள் நாட்டு நன்மையைக் குறித்து நிர்ணயிக்கப்படுவதால், தான் அதிலிருந்து தப்புவதும் கடினம் என்றும் அவளுக்கு நன்றாகத் தெரிந்ததன் விளைவாக, அவள் இதய வேதனை சொல்லத் தரமல்லாததாயிற்று. ஆகவே உணர்ச்சிகள் உள்ளத்தைச் சமட்டி கொண்டு அடிக்க, அவள் உலகை மறந்து உட்கார்ந்திருந்தாள்.

நீண்ட நேரம் மவுனமாயிருந்த அவள், "அப்படி யானால் என் தம்பி?" என்று வினவினாள்.

"உன் தம்பியல்ல அந்தச் சிறுவன். கரவந்தபுர மன்னனின் அதாவது முன்பு பாண்டிய அமைச்சரா யிருந்தவரின் பேரன். இப்பொழுது உக்கிரன் கோட்டையா யிருக்கும் கரவந்தபுரத்தின் வாரிசு அவன்தான்!" என்று விடை பகர்ந்தான் வீரநாராயணன்.



வீரநாராயணன் நிலை கண்டு நீலவல்லி பெரும் சினமடைந்தாள். தன்னை அத்தனை தூரம் காதலித்து விட்டுத் திடீரென்று இன்னொருவனுக்குத் தன்னை நிச்சயித்திருப்பதாக அறிந்த பின்பு அவன் சர்வ சாதாரணமாயிருப்பதைக் கண்டு பெரிதும் வெகுண்ட நீலவல்லி, "வீரரே!" என்று உஷ்ணத்துடன் அழைத்தாள்.

"உம்?" இந்தப் பதில்தான் வீரநாராயணனிடம் இருந்து வெளிவந்தது.

"உங்களுக்குச் சூடு சுரணை ஏதாவது இருக் கிறதா?"

"இருக்கிறது."

"இல்லை."

"ஏன்?"

"உங்கள் காதலியை இன்னொருவனுக்கு விட்டுக் கொடுக்கச் சித்தமாய் இருக்கிறீர்கள்."

"இல்லை."

"என்ன இல்லை?"

"நான் காதலிக்கும் முன்பே நீ இன்னொருவர் சொத்து. இது எனக்குத் தெரிந்திருந்தால் காதலித்திருக்க மாட்டேன். இந்நாட்டு இளவரசருக்கு நீ சொந்தம் என்று எனக்கு எப்படித் தெரியும்?"

அவன் விளக்கத்தைக் கேட்ட நீலவல்லிக்கு, அவனை அறையலாம் போலிருந்தது. "உங்களைப் போன்ற ஒரு மட்டமான மனிதரை நன் பார்த்ததில்லை!" என்று

கூறிவிட்டுப் பரதவர் குடிசையை நோக்கி வேகமாக நடந்தாள்.

வீரநாராயணன் அவள் போகும் திக்கை பார்த்துக் கொண்டே இருந்தான். பிறகு எழுந்து அவனும் குடிசை களை நாடிச் சென்றான், புரவி பின்தொடர. நேரம் ஓடியது வேகமாக. நடுப்பகல் வந்ததும், பரதவரை அழைத்து, "யாராவது சிலர் சிங்களவரைக் கவனித்துக் கொள்ளுங்கள். தகுந்த காவலுடன் அவர்களை இன்றி லிருந்து நான்காவது நாள் உக்கிரன் கோட்டைக்கு அழைத்து வாருங்கள். உங்களில் இருபது பேர் வேல் களுடன், நீலவல்லியுடன் இன்று மாலை புறப்படுங்கள். மீதி விஷயங்களை அவளிடமே சொல்லியிருக்கிறேன்!" என்று உத்தரவிட்டு, நீலவல்லி இருந்த குடிசைக்குச் சென்றான். குடிசை சாத்தி இருந்ததால், "நீலவல்லி" என்று குரல் கொடுத்தான்.

பதில் ஏதும் வரவில்லை. இரண்டாவது முறையும் கூப்பிட்டான். பதிலில்லாததால், "கதவைத் திற; முக்கிய விஷயம் சொல்ல வேண்டும்!" என்றான்.

"இதுவரை சொன்ன விஷயங்கள் போதும்; நீங்கள் நடக்கலாம்," என்றாள் நீலவல்லி.

"நீலவல்லி, சத்தியபாமா நாடகத்துக்கு இது சமயமல்ல!" என்று கூறி நகைத்தான்.

"இது சத்தியபாமா நாடகமல்ல. ஏனென்றால் நீங்கள் கிருஷ்ணனாயிருக்க முடியாது. நான் வேறொருவருக்கு நிச்சயிக்கப்பட்டிருக்கிறேன்!" என்று உள்ளிருந்து சீறினாள் அவள்.



"நான் கிளம்புகிறேன். நான் சொன்னபடி நீ இங்குள்ள சில பரதவரையும் வேல்முருகன் கூட்டத்தை யும் அழைத்துக்கொண்டு உக்கிரன் கோட்டைக்கு வந்து சேர்!" என்று கட்டளை இட்டு, அங்கிருந்து தனது புரவி யிருக்குமிடம் வந்து அதன் மீது தாவி ஏறினான். புரவியும் மீண்டும் கொற்கைச் சாலையில் நடந்தது. ஏரிக்கரை யோரமாகவே பயணம் செய்த வீரநாராயணன், இரவின் ஆரம்பத்தில் கொற்கை வந்து சேர்ந்தான். அப்பொழுதும் தாமிரபரணியில் வெள்ளம் போய்க்கொண்டிருந்தது. அதை நீண்ட நேரம் பார்த்த வீரநாராயணன் தனக்குள் ஏதோ சொல்லிக்கொண்டு ஊருக்குள் சென்றான். அந்த ஊர்த் தலைவன் இருப்பிடம் சென்று, அவனிடம் ஏதோ பேசிவிட்டுக் கொற்கையில் இருந்து கிளம்பிக் காயல்பட்டினம் சென்றான்.

காயல் இரவிலும் பெரும் சுறுசுறுப்பைக் காட்டியது. ஆங்காங்கு வீரர் நடமாட்டம் அதிகமாயிருந்தது. இரவும் பகலும் வாணிபம் நடத்தும் காயல் வியாபாரிகள் கூடிய மட்டும் கடை அடைப்புச் செய்திருந்தனர். அங்கிருந்த ஒரு காவலனை அணுகிக் கடையடைப்பின் காரணத்தைக் கேட்டபோது, "முத்துத் திருடர்கள் இங்கு அதிகமாக உலாவுவதாக ராஜப்பிரதிநிதி அறிவித்து இருக்கிறார். ஆகவே இரவில் கடைகளைத் திறக்க வேண்டாம் என்று கட்டளையிட்டிருக்கிறார். ஊரில்கூட ஜன நடமாட்டம் அதிகமாயிருக்கிறது. காயலை எதிரிகள் எதிர்க்கக் கூடும் என்ற வதந்தி உலாவுகிறது!" என்றான் காவலன்.

இதைக் கேட்டதால் முகத்தில் மகிழ்ச்சியைப் படர விட்டுக் கொண்ட வீரநாராயணன், தனது புரவியை

உக்கிரன் கோட்டையை நோக்கிச் செலுத்தினான். ஆனால் அவன் விரைவாகச் செல்லவில்லை. இடையிடையே இருந்த காடுகளில் தங்கியும், அவ்வப்பொழுது அக்கம் பக்கத்தில் சுற்றியும் பயணம் செய்தான். ஒரு நாளில் அடைய வேண்டிய உக்கிரன் கோட்டையை இரண்டு நாள் கழித்து மூன்றாவது நாள் அடைந்த வீரநாராயணன், அந்தக் கோட்டை முற்றுகையிலிருந்ததைத் தூரத்தில் இருந்தே கவனித்தான்.

பாண்டியர் படை அந்தக் கோட்டையைச் சூழ்ந்து நின்றது. அதன் வாயிலில் கூடாரமடித்துத் தங்கி யிருந்த காயல் ராஜப்பிரதிநிதி தனது புரவிமீது ஏறிப் படைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். சுமார் நடுநிசியில் தனது கூடாரத்தை அடைந்தான். படைகளை எச்சரித்து விட்டுப் பிறகு கூடாரச் சீலையை இரு காவலர் அவிழ்த்துவிட நித்திரைக்குச் சென்றுவிட்டான் பிரதிநிதி. சீலை தொங்கவிடப்பட்டதும் அவன் கூடாரத்தைச் சுற்றிலும் இருந்த விளக்குகள் அணைக்கப்பட்டன.

இதைக் கவனித்ததும் எச்சரிக்கை அடைந்த வீர நாராயணன் கோட்டைக்கு வெளியே இருந்த அரச மரத்தடியை அடைந்து அதிலிருந்த வேர்களைப் பரிசோதித்தான். பிறகு ஏதோ ஒரு பெரிய கோடாரிக் காம்பு கைக்குத் தென்படவே அதைத் திருகினான் இரு முறை. அரச மரத்தின் வேர்கள் அசைந்தன, இருபுறமும். ஆனால் மரம் அசையவில்லை. ஆகவே அவை செயற்கை வேர்கள் என்பதை உணர்ந்த வீரநாராயணன் புன்முறுவல் கொண்டான். அதே வேர்கள் விலகி மண் சிறிது அகன்று கீழே படிகள் ஓடியதையும் சுரங்க வழியும் விசாலமாயிருந்ததையும் கவனித்த வீரநாராயணன்,



முதலில் தனது புரவியை அதில் இறங்க விட்டு, தானும் இறங்கினான். அவன் இறங்கியதும் பக்கத்திலிருந்த இன்னொரு கோடாரிக் காம்பைச் சுழற்ற, வழி பழையபடி மூடிக் கொண்டது.

சுரங்க வழியே சிறிது தூரம் சென்ற வீரநாராயணன் முடிவில் உக்கிரன் கோட்டையின் உட்புறத் தோப்பு ஒன்றில் எழுந்தான். அந்த இடத்திலும் ஒரு அரச மரம் இருந்ததைக் கவனித்த வீரநாராயணன் பழைய பாண்டிய அமைச்சரும் அந்தக் கோட்டையை நிர்மாணித்தவருமான மாறன் காரியை மனதில் பெரிதும் பாராட்டினான்.

பெரிய கோட்டை கொத்தளங்களுடன் அகழியுடனும் இருந்த கரவந்தபுரம் அகழியை அடைந்து கோட்டைச் சுவர்கள் பழுதுபட்டு எத்தனை குட்டிச் சுவராகி விட்டது என்பதைக் கவனித்துப் பின் தலைமுறைகளைப் பெரிதும் நொந்தான். "தலைமுறைச் சொத்தைக் காக்க முடியாதவர் களால் கோட்டையும் நசிகிறது, குலமும் நசிகிறது, வேறொருவன் சொத்தை ஆள்கிறான்!" என்று தனக்குள் சொல்லிக்கொண்ட வீரநாராயணன், அன்றிரவு மரத்தடி யிலேயே படுத்தான். அடுத்த நாள் விடியற்காலை அந்த மரத்துக்கு அருகாமையிலிருந்த குளத்தில் நீராடிக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு உக்கிரனை நாடிச் சென்றான்.

வீரநாராயணன் வந்திருப்பதை அறிந்ததும், உக்கிரன் அவனைத் தனது சபா மண்டபத்தில் வரவேற்று, பக்கத்திலேயே ஆசனம் அளித்து, "உள்ளே எப்படி வந்தீர்கள்?" என்று விசாரித்தான்.

"சுரங்க வழியாக." தாமதமின்றிப் பதில் வந்தது வீரநாராயணனிடம் இருந்து.

"காயல் பிரதிநிதி முற்றுகையிட்டிருக்கிறார்!" என்ற உக்கிரன், "நானும் சித்தமாயிருக்கிறேன் போருக்கு" என்று கூறினான்.

"நீலவல்லியும் சித்தமாயிருக்கிறாள் பரதவருடன் மேலைப்புறக் காட்டில். நீ இங்கிருந்தும், நீலவல்லி மேலைப்புறத்திலும் தாக்கினால், இரு இடுக்கிகளுக்கு இடையில் ரகுநாத பாண்டியன் சிக்கிக் கொள்வான்!" என்றான் வீரநாராயணன்.

உக்கிரன் விழித்தான். "காயல் பிரதிநிதியின் பெயர் ரகுநாத பாண்டியனா?" என்று வியப்புடன் வினவினான்.

"ஆம்."

"இதுவரையில் அவர் பெயர் எனக்குத் தெரியாது. காயலில் கூட யாருக்கும் தெரியாது. அவரைக் காயல் பிரதிநிதி என்றுதான் எல்லோரும் அழைக்கிறார்கள். அவர் தமது மாளிகையை விட்டு அதிகமாக வெளி வருவதில்லை. யாரையும் பார்ப்பதில்லை. அவர் வந்து இரண்டே ஆண்டுகள்தான் ஆகின்றன. இந்த இரண்டே ஆண்டுகளில் அவர் எந்தப் பொதுக் களியாட்டங்களிலும் கலந்து கொள்வதில்லை."

உக்கிரனின் இந்தக் கதையைக் கேட்ட வீரநாராயணன் எந்த வியப்பையும் முகத்தில் காட்டவில்லை. "அவருக்கு மனைவி மக்கள் யாருமில்லையா?" என்று வினவினான்.

"திருமணம் ஆகவில்லையாம். ஆனால் அவருக்குச் சேர மன்னன் பெண் கொடுக்கப் போவதாகக் கேள்வி!" என்று உக்கிரன் கூறினான்.



வீரநாராயணன் சிந்தனையில் இறங்கினான். "உக்கிரா! பல விஷயங்கள் எனக்கு இப்பொழுது தெளிவாகின்றன. காயல் பிரதிநிதியிடம் இருந்து இன்று உனக்குத் தூது வரும். அப்படி வந்தால் என்னைக் கலந்து கொள்ளாமல் எந்த முடிவும் செய்யாதே. அவன் வீண் மிரட்டலுக்குப் பணியாதே!" என்று சிந்தனைக்குப் பிறகு கூறினான்.

"பாண்டியர் படைபலம் அவனிடமிருக்கிறதே!" என்றான் உக்கிரன்.

"படை இருக்கிறது. ஆனால் முற்றுகைக்கான வசதியோ, கோட்டை வாயிலை உடைப்பதற்கான வசதிகளையோ அவன் கொண்டு வரவில்லை!" என்று விளக்கினான் வீரநாராயணன்.

"ஆம். அதை நானும் கவனித்தேன்!" என்றான் உக்கிரன்.

"ஆகவே கோட்டையைத் தாக்கி உள்புகும் எண்ணம் ரகுநாதனுக்கு இல்லை. தூதுவன் வருவான். உனக்கு இதமான சமாதான யோசனையும் சொல்லுவான். அப்பொழுது நீ இணங்காதே. அடுத்து செய்ய வேண்டியதை நான் சொல்கிறேன்!" என்று உபதேசம் செய்தான் வீரநாராயணன்.

இதே சமயத்தில் காயல் பிரதிநிதியின் பாசறையில் ஒரு தூதன் வந்திருந்தான். அவன் கூறியதைக் கேட்ட ரகுநாதபாண்டியன், அச்சத்தின் எல்லையை அடைந்தான். "என்ன உளறுகிறாய்? வீரநாராயணன் சடையன் இங்கு வந்திருக்கிறானா?" என்று பீதியுடன் கேட்டான்.

"ஆம், நிச்சயமாக!" என்றான் தூதுவன்.

"அப்படியானால், அவன் இருக்கும் இடத்தைக் கண்டுபிடி. அவனையும் ஒழித்துவிட வேண்டும்!" என்ற ரகுநாத பாண்டியன், தூதனை அனுப்பிவிட்டுத் தனது படுக்கையில் விழுந்தான். அவன் மூளை துரிதமாக வேலை செய்து கொண்டிருந்தது. அதுவரை விளங்காத பல உண்மைகள் அப்பொழுதுதான் விளங்க முற்பட்டன. "என்ன முட்டாள் நான்!" என்று தன்னை நொந்து கொண்டான் பிரதிநிதி. அப்பொழுதுதான் அவன் மூளையில் பயங்கரத் திட்டமொன்று உருவாயிற்று.

## 14. சீறி வந்த அம்புகள்

**ப**ல நாட்டு மரக்கலங்களும் வாணிபப் பொருள்களை இறக்கி, இங்குள்ள மஸ்லின் துணி, சீனப் பட்டு, முத்து ஆகியவற்றை வாங்கிச் செல்லும் பாண்டிய நாட்டின் பெரும் துறைமுகமான காயல் பட்டினத்தில் இரண்டாவது வரகுண பாண்டிய மகாராஜாவின் பிரதிநிதியாக அதிகாரம் செலுத்தி வந்த ரகுநாத பாண்டியன், தன் பதவிக்கும், ஏன்— சுதந்திரத்துக்கும், உயிருக்குங்கூடப் பேராபத்து வந்திருப்பதை உணர்ந்ததால், தீவிர சிந்தனை யிலேயே அன்று பகல் பொழுதைக் கழித்தான். அவன் பகலில் தீட்டிய பயங்கரத் திட்டம் பயனளிக்குமானால், உக்கிரன் கோட்டையை மட்டுமின்றி, வீரநாராயணனையும் அழித்துவிட முடியும் என்று எண்ணினான்.

மாறன் காரியின் பேரனான அந்தச் சிறுவனிட மிருந்து கரகிரி எனப்படும் கரவந்தபுரம் கோட்டையைக் கைப்பற்றி, அந்தக் கோட்டைக்கு உக்கிரன் கோட்டை என்னும் தனது பெயரையே உக்கிரன் சூட்டிவிட்டதைப் பற்றிப் பிரதிநிதி கவலைப்படவில்லை. நீலவல்லியும் அவள் தம்பியும் பரதவரிடம் சரண் புகுந்தபோதுகூட அதை அதிகப்படுத்தாமல் காலம் வரும்போது அந்த இருவரையும் சரிப்படுத்திக் கொள்ளலாம் என்று நினைத்தான் பிரதிநிதி. அவள் அழகு வேறு அவனைக் கவர்ந்ததும், அதை அவன் வெளிக் காட்டாமல் சமயத்தில்

அவளை மணந்து அந்தச் சாக்கை வைத்துக்கொண்டு முறை மாப்பிள்ளையாக உக்கிரன் கோட்டையைக் கைப்பற்றிக் கொள்ளலாம் என்று திட்டம் போட்டிருந்தான். ஆனால் அடிக்கடி உக்கிரன் அவளைத் தூக்கிச் செல்ல முயன்றது அவன் திட்டத்துக்குப் பெரும் இடையூறாக நின்றது. அது தவிர உக்கிரனிடம் பெரும் முத்துக் குவியல் இருப்பதைப் பிரதிநிதி உணர்ந்திருந்தான். அதைப் பகிரங்கமாகக் கைப்பற்றினால் மதுரைப் பொக்கிஷத்துக்கு அனுப்பும்படி நேரிடும் என்ற காரணத்தால், உக்கிரன் திருடிய முத்திலிருந்து சிறுகச் சிறுகத் திருடவும் ஆட்களை நியமித்திருந்தான். முத்துதான் பாண்டிய நாட்டுச் சொத்து என்பதையும், அதனால்தான் பாண்டிய நாட்டு மகிமையும் வாணிபமும் பெருகுகின்றன என்பதையும் உணர்ந்திருந்த பிரதிநிதி, போதிய முத்து கிடைத்துவிட்டால், உக்கிரனிடம் முத்து இருப்பதைச் சாக்காக வைத்து அதையும் கைப்பற்றிவிட்டால், தென்பாண்டி நாட்டில் தான் ஏகபோக உரிமையுடன் வாழ முடியுமென்றும், அவசியமானால் காயலைச் சிற்றரசாக்கி, தானும் ஒரு குறுநில மன்னனாக முடியும் என்றும் திட்டமிட்டு இருந்தான்.

இந்தத் திட்டம் அனைத்துக்கும் பெரும் இடைஞ்சலாயிருந்த உக்கிரனைத் தீர்த்துக்கட்டத் தான் திட்டமிட்டிருந்த சமயத்தில், எங்கிருந்தோ வீரநாராயணன் வந்து முளைத்தது பெரும் தலைவலியாயிற்று பிரதிநிதிக்கு. யாரோ ஒருவன், புரவியிடம் பேசுகிறவன், வாட்போர் வல்லவன், கன்னித்தேவனையே மற்போரில் புறங்கண்டவன் என்பதையெல்லாம் பராபரியாகக் கேட்டிருந்தானேயொழிய, அவன் மேலிடத்து வீரநாராயணனா



யிருக்க முடியும் என்பதை அவன் கனவிலும் நினைக்கவில்லை. ஆகையால் எப்படியும் நீலவல்லியைப் பிடித்தால் வீரநாராயணனை வரவழைக்கலாம் என்றும், அப்படி அவன் வந்தால் அவனைத் தீர்த்துக் கட்டுவது கஷ்டமான வேலையல்ல என்பதையும் நினைத்த ரகுநாத பாண்டியன், தனது காவலரில் இருவரை அழைத்து, நீலவல்லி எங்கிருந்தாலும் சல்லடை போட்டுச் சலித்துக் கொண்டு வரும்படி உத்தரவிட்டான். காவலர் சென்றதும் மெள்ளப் பகல் பொழுதைக் கழித்துவிட்டு மாலை நெருங்கியதும் நடந்தே தனது படைகள் இருந்த காட்டைப் பார்வையிட்டான்.

இருள் மூண்ட பின்பும் அவன் படைப் பிரிவுகளின் ஊடே நடந்து சென்றான். ஏதோ யோசித்தவண்ணம் படைப் பிரிவுகளையும் தாண்டி நடந்துவிட்டான். அப்பொழுது கேட்ட ஏதோ ஓர் அரவம் அவன் நடையைத் தேக்கியது. சட்டென்று பக்கத்தில் இருந்த மரத்தின் மறைவில் நின்றான். அப்பொழுதுதான் தன்னைப் புகழ்ந்து கொண்டு, "ரகுநாதா! நீ அதிர்ஷ்டசாலியடா!" என்று மனத்துக்குள் குதூகலித்தான். அவனிருந்த இடம் நோக்கி நீலவல்லி நடந்து வந்து கொண்டிருந்தாள்.

அவளும் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தாள். விநாடிக்கொரு முறை எதிரே தெரிந்த கோட்டை மதிலை நோக்கினாள். கோட்டைப் பந்தங்கள் அமைதியாக எரிந்து கொண்டிருந்தன. அதைக் கண்டு பெருமூச்சு விட்டு, பிரதிநிதி மறைந்திருந்த மரத்தை நோக்கிப் பின்னால் நகர்ந்து, அதில் சாய்ந்து கொண்டாள்.

அவள் சிந்தனை வசப்பட்டுக் கண்களை மூடினாள். "அவர் குறித்த நாள் இதுதானே? ஏன் போருக்கு

உத்தரவிடவில்லை?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். அடுத்த விநாடி அவளை யாரோ அழைத்தார்கள், "நீலவல்லி!" என்று. கண் விழித்த அவள், காயல் பிரதிநிதியைக் கண்டதும், இடையிலிருந்த குறுவாளை எடுக்கப் போனாள்.

"அதற்கு அவசியமில்லை. பேசாமல் என்னுடன் வா. உனக்கு எந்த ஆபத்துமில்லை!" என்று சர்வ சாதாரணமாகச் சொன்னான் ரகுநாத பாண்டியன்.

"பிரதிநிதி! எனக்கு எந்த ஆபத்தையும் விளைவிக்க உம்மால் முடியாது. உமது சாயம் வெளுத்து விட்டது. உம்மை வீரநாராயணர் நாற்புறமும் மடக்கியிருக்கிறார். உமது முத்துத் திருட்டு அவருக்குத் தெரிந்திருக்கிறது. உமது சிங்களவர் சிறைப்படுத்தப்பட்டு விட்டார்கள். என்னுடன் வேல்முருகனும் பரதவர் இருநூறு பேரும் வந்திருக்கிறார்கள்— உம்மீது எந்தச் சமயத்திலும் பாய. கோட்டையும் எந்த நிமிடத்திலும் திறக்கப்படும். எங்கள் வீரர் சாரிசாரியாக வருவார்கள். உக்கிரன் முத்தை நீர் சிறுகச் சிறுக களவாடியதால் உம்மீது பழிவாங்க அவன் சித்தமாயிருக்கிறான். இன்னும் அவன் உங்களின் மீது பாயவில்லையென்றால் அதற்குக் காரணம் வீரநாராயணர்தான். அவர் எங்கிருக்கிறாரென்று தெரியவில்லை. அவர் வரும்வரையில் காத்திருக்க எங்களுக்கு உத்தரவிட்டு இருக்கிறார். இல்லையேல் இதோ ஒருமுறை இப்படிச் சீட்டி அடித்தால் எனது வீரர்கள் பாய்ந்து வருவார்கள்..." என்று சீட்டி அடிக்கும் முறையை விளக்க வாயில் இரு விரல்களை வைத்துக் கொண்டாள்.

அதுதான் அவள் செய்த தவறு. அவள் விரலை வாயிடம் கொண்டு போன அதே விநாடியில் ரகுநாதன்



கை அவள் குரல்வளையைப் பிடித்தது. அவள் விழிகள் பிதுங்கின. அப்படியே அவளை ஆட்டிப் பூமியில் எறிந்தான் பிரதிநிதி. பிறகு அவளைத் தானே எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு நடந்தான், தனது பாசறையை நோக்கி. அங்கு அவள் வாயில் துணியை அடைத்துக் கூடாரக் கம்பத்தில் அவளைக் கட்டி நிறுத்தினான். இரவு கழிந்து பொழுதும் விடிந்தது. கட்டிலில் உட்கார்ந்திருந்த பிரதிநிதியை நீலவல்லியின் கண்கள் சுட்டுவிடுவன போல் தீ விழி விழித்தன. அவளுக்கு நேர்ந்த அநீதியைப் பொறுக்காதவன் போல் கதிரவனும் தீ விழி விழித்து, தனது நெருப்புப் பார்வையை உக்கிரன் கோட்டை மீது வீசினான். கோட்டை காவலர்கள் மாறினார்கள். விடியற்காலை முரசுகள் கோட்டையிலிருந்து சப்தித்தன. அதைத் தொடர்ந்து கோட்டை மீது உக்கிரனும் வந்தான். அவன் வந்ததும் இரு வீரர்கள் அவன் பக்கத்தில் வந்து நின்று இரு கொம்புகளை ஊதினார்கள்.

கொம்புகள் ஊதப்பட்டதும் ரகுநாத பாண்டியன் தனது கூடாரத்தை விட்டு வெளியே வந்து தனது புரவியில் ஏறி மதிலுக்குச் சற்று தூரத்தில் நின்று கொண்டான். அவனுடன் இரு வீரர் நின்றிருந்தார்கள். அந்த வீரரில் ஒருவன் காதில் பிரதிநிதி சொல்லவே அந்த வீரன் பெரிய குரலில் சொன்னான், "உக்கிரா! உனக்கும் எனக்கும் பகை ஏதுமில்லை. உன்னிடம் இருக்கும் வீரநாராயணனை என்னிடம் அனுப்பிவிடு. நான் முற்றுகையை நீக்கிவிடுகிறேன். மன்னருக்கும் உன் முத்துக் களவை எடுத்துச் சொல்லவில்லை. தவிர நீ முயன்றும் கிட்டாத பரிசையும் தருகிறேன்!" என்று.

பதிலுக்கு உக்கிரனே ஒரு பெரும் குழலை எடுத்து அதன் மூலம் பேசினான். "நீ எனக்குத் தரக் கூடியது ஏதுமில்லை. நீயும் முத்துத் திருடன் ஆகையால் நீ இதில் எனக்குச் செய்யக்கூடிய உதவி எதுவும் இல்லை!" என்று கூறினான்.

"என் பரிசை அல்பமாக மதிக்காதே!" என்றான் பிரதிநிதி.

"எந்தப் பரிசையும் நீ கொடுக்க வேண்டியதில்லை. உன்னை அழிக்க என்னிடம் பலமான படை இருக்கிறது!" என்றான் உக்கிரன்.

"சற்றுப் பொறு. பரிசை நீயே பார்!" என்று கூவிய பிரதிநிதி, தன்னிடமிருந்த வீரனுக்குச் சைகை செய்யவே, வீரன் புரவியில் விரைந்து நீலவல்லியைப் பிடித்து இழுத்து வந்து நிறுத்தினான்.

நீலவல்லியைக் கண்டதும் திகிலடைந்தான் உக்கிரன். "சரி, யோசித்து இன்று பகல் பதில் சொல்கிறேன். ஒரு தூதனை மட்டும் அனுப்பி வை!" என்றான் உக்கிரன்.

பிரதிநிதி சைகை செய்ய நீலவல்லி திரும்பி இழுத்துச் செல்லப்பட்டாள். ரகுநாதனும் கூடாரத்துக்குத் திரும்பினான். அவன் திரும்பியதும் உக்கிரனும் கோட்டை மதிலிலிருந்து இறங்கி மிக வேகமாகத் தனது அரண்மனை வந்து வீரநாராயணனிடம் நடந்ததையெல்லாம் தெரிவித்தான். வீரநாராயணன் புருவத்தைக் கூட அசைக்காமல் அனைத்தையும் கேட்டுக் கொண்டான். "சரி, தூதன் வந்தால் என்னை ஒப்படைப்பதாகக் கூறிவிடு!" என்றான்.

உக்கிரன் வியப்பால் வாயைப் பிளந்தான். "வீரரே! உங்களை நம்பித்தான், பிரதிநிதியை எதிர்க்க முன்வந்தோம். உங்களை நாங்கள் இழந்துவிட்டால்?" என்று வினவினான் வியப்பும் வருத்தமும் இணைந்த குரலில்.



வீரநாராயணன் சர்வ அடக்கத்துடன் பதில் சொன்னான், "உக்கிரா! யாரும் யாரையும் இழக்கப் போவதில்லை. சொன்னபடி செய்!" என்றான்.

இந்தச் செய்தியைக் கேட்ட பிரதிநிதி, மறுநாள் காலை மகா உற்சாகத்தில் இருந்தான். அதிலும் சில நிபந்தனைகளைச் சொன்னான். வீரநாராயணனைத் தலையிலிருந்து உள்ளங்கால் வரை கறுப்புச் சீலையால் மறைத்து அனுப்ப வேண்டும். அவன் கால்நடையாக வரவேண்டும். ஆயுதம் எதையும் தரிக்கக் கூடாது!" என்று நிபந்தனைகளை விதித்தும், உக்கிரன் ஒப்புக்கொண்டான். உண்மையில் உக்கிரன் பயந்துவிட்டான் என்று தன்னை உற்சாகப் படுத்திக் கொண்டான் பிரதிநிதி.

சரியாகப் பகல் ஒரு மணிக்குக் கோட்டையின் பெரும் கதவுகள் திறக்கப்பட்டன. கறுப்பு சீலை மூடிய ஒரு உருவத்தை உக்கிரன் வீரர்கள் அழைத்து வந்து நிறுத்தினார்கள். அவர்களில் ஒருவன் ரகுநாத பாண்டியனை நோக்கி, "நீலவல்லியை இங்கு அனுப்பினால்தான் இவர் இங்கிருந்து நகருவார். எங்கே அவள்? கொண்டு வாருங்கள்" என்று அதிகாரக் குரலில் வினவினான்.

பதிலுக்கு ரகுநாத பாண்டியன் நகைத்தான் பெரிதாக. "உக்கிரனைப் போல் நான் முட்டாளல்ல!" என்று கூறித் தனக்குப் பின்னால் கையை ஆட்டினான். சுமார் நூறு அம்புகள் அம்மூவரையும் நோக்கிச் சீறி வந்தன.

## 15. ரோஜா முள்

கறுப்புத் துணியால் முழுவதும் மூடப்பட்ட உருவத்தையும், மற்ற இரு வீரர்களையும் நோக்கிச் சீறி வந்த அம்புகளால் அந்த மூவரும் ஒழிந்து விடுவார்கள் என்று நினைத்த ரகுநாத பாண்டியன் எண்ணத்தில் மண் விழுந்தது. அவன் கையசைத்ததும் அந்த மூவரும் சரேலென்று தரையில் விழுந்து விட்டதன் காரணமாக, அவர்கள் உடல்களுக்கு மேலேயே பறந்த அம்புகள் உக்கிரன் கோட்டையின் கற்சுவர்களையே தாக்கின. அதனால் வெகுண்ட ரகுநாத பாண்டியன், மீண்டும் கையைத் தூக்க முற்பட்டபோது அந்தக் கையில் எங்கிருந்தோ பாய்ந்தது ஒரு சிறு ஈட்டி. திரும்பிப் பார்த்த காயல் பிரதிநிதி சற்று எட்ட நின்றிருந்த பரதவர் கூட்டத்தையும் அதன் தலைவனான வேல்முருகனையும் பார்த்தான். ஆனால் நன்றாகப் பழக்கப்பட்ட பாண்டியன் படை முன்பு அந்தப் பரதவர் கூட்டம் நிற்க முடியாதென்ற துணிவில், "வேல்முருகா! உன் ஆட்களை வேல்களைக் கீழே போடச் சொல். இல்லையேல் பாண்டிய வீரர்கள் உங்களை அழித்து விடுவார்கள். வேண்டுமானால் எனக்குப் பின்னால் வியூகம் வகுத்துச் சக்கர வட்டமாக நிற்கும் சைதன்யத்தைப் பார்!" என்று கூவினான், அதிகாரத் தோரணையில். அத்துடன் கையில் தைத்திருந்த சிறு ஈட்டியையும் அனாயாசமாகப் பிடுங்கி எறிந்தான். அதிலிருந்து ஊற்றெடுத்து வந்த இரத்தத்தைப்



பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், "உக்கிரன் கோட்டை வீரர்களே! உங்களுக்கு உயிரின் மீது ஆசையிருந்தால் அந்தக் கறுப்புச் சீலையை இங்கேயே விட்டுச் செல்லுங்கள். உக்கிரனையும் சரணடையச் சொல்லுங்கள்!" என்று கூவினான். பிறகு தனது வீரர்கள் பதின்மரை விட்டு, "அந்தக் கறுப்புச் சீலையைக் கிழித்து எறியுங்கள். அந்த ராஜத் துரோகியைப் பிடித்து வாருங்கள்!" என்று தனது வீரர்களுக்குக் கட்டளையிட்டான்.

பாண்டிய வீரர்கள் அவன் சொற்படி செய்தார்கள். கறுப்புச் சீலை வீரனை அணுகி அவன் மீதிருந்த சீலையை அகற்றினார்கள். அதைப் பக்கத்தில் இருந்த உக்கிரனின் வீரர்களோ, எட்ட இருந்த பரதவர் கூட்டமோ தடுக்கவில்லை. அந்தச் சீலை எடுக்கப்பட்டதும் உள்ளே தெரிந்த உருவத்தைக் கண்டு அனைவருமே பிரமித்தார்கள். அடுத்த கணம் பெரிதாக நகைத்தார்கள்.

உள்ளேயிருந்தவன் உக்கிரன். எல்லோரையும் விட அவன் பெரிதாக நகைத்தான். "ரகுநாத பாண்டியா! பாண்டியர்கள் பெயரைக் கெடுக்க வந்த துரோகி. உன் அதிகார காலம் முடிந்து விட்டது. உன் திருட்டு அம்பலப்பட்டு விட்டது. சீக்கிரம் நீ ஓடாவிடில் உன் ஆயுட்காலமும் இப்பொழுதே முடிந்து விடும்!" என்று கூறி, அவனும் தனது கத்தியை எடுத்து ஆட்டினான். கோட்டையைத் திறந்து கொண்டு அவன் வீரர்கள் ஈசல்களைப் போல் வந்தார்கள். கோட்டை மதில் மீது எரியம்புகளையும் வேல்களையும் வீசும் எந்திரங்கள் இழுத்து வரப்பட்டு பாண்டியர் படைகளை நோக்கித் திரும்பலாயின. "இப்பொழுது பார், பிரதிநிதி! உன் படைகளின் கதியை நீயே நிர்ணயித்துக் கொள்!" என்று தனக்குப் பின்னால்

அணிவகுத்து விட்ட கோட்டை வீரரையும், கோட்டை மதில் ஏற்பாடுகளையும் கையால் சுட்டிக் காட்டவும் செய்தான் உக்கிரன்.

அத்தனை ஏற்பாடுகளையும் கண்டும் பிரதிநிதி மசிந்தான் இல்லை. தனது கைக் காயத்துக்குக் கட்டுப் போடச் சொல்லிக் கையை வீரனிடம் நீட்ட அவன் கட்டுப் போட்டான். அத்துடன் தனது புரவியையும் வரவழைத்து, அதில் ஏறிக்கொண்ட பிரதிநிதி சொன்னான் உரத்த குரலில்: "படைகள் மோது முன்பு உனக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் அளிக்கிறேன். பக்குவப்பட்ட பாண்டியர் படை முன்பு இந்தக் கூலிக் கூட்டம் எதுவும் செய்ய முடியாது. ஆகையால் வீரநாராயணனை என்னிடம் ஒப்படைத்து விடு!" என்று அறிவித்தான். அதற்குப் பதில் ஏதும் கிடைக்காது போகவே வாளை உயர்த்தினான் ஆகாயத்தை நோக்கி. பாண்டியப் படைகள் நகர்ந்தன எந்திரம் நகருவது போல.

அந்தச் சமயத்தில்தான் அந்த விந்தை நிகழ்ந்தது. "பாண்டிய வீரர்களே! பாண்டிய நாட்டு மன்னர் இரண்டாவது வரகுண மகாராஜாவின் பெயரால் அவர் பிரதிநிதி என்ற பெயரில் உத்தரவிடுகிறேன். யாரும் ஒரு அடிகூட நகர வேண்டாம். முன்னேறிய அதே பாணியில் பின்னடையுங்கள். உங்கள் வாட்களை உறையில் போடுங்கள்!" என்ற வீரநாராயணன் குரல் மேல் திசையில் இருந்து கேட்டது. அந்தத் திக்கில் நோக்கிய பாண்டிய வீரர்கள் திகைப்படைந்தனர்.

மேலைத் திக்கிலிருந்த ஒரு மேட்டில் பெரிதாக வளர்ந்திருந்த அரச மரத்தடியில் பூர்ண ஆயுதங்களைத் தரித்தும், பாண்டிய இளைய ராஜமுத்திரையான இரு



மீன்கள், ஒரு கோடரி இவற்றைக் கொண்ட பெரும் பதக்கமொன்றை மார்பில் அணிந்து கொண்டும், பிறைச் சந்திரனைப் போல் திலகம் அணிந்தும், வீரநாராயணன் தனது புரவி மீது அமர்ந்திருந்தான். காலைக் கதிரவன் அவன் பக்கத்தின் மீது தனது கிரணங்களைப் பாய்ச்சி, அதையும் ஒரு சூரியனாகச் செய்திருந்ததால், இதயத்தின் ஒளியே வெளிப்படுவது போன்ற பிரமையை ஏற்படுத்திக் கொண்டு, புரவி மீது சிலைபோல் உட்கார்ந்திருந்தான் வீரநாராயண சடையன்.

இரண்டாவது வரகுண மகாராஜாவின் தம்பியும், மகா வீரனென்று பிரக்தியாதி பெற்றவனும், வீரநாராயணன் என்ற சிறப்புப் பெயரால் எதிரிகளாலும் பாராட்டப் பட்டவனும், ஸ்ரீ மாறன் ஸ்ரீவல்லபனின் இளைய குமாரனும், பாண்டிய நாட்டு இளவரசனுமான பராந்தக பாண்டியன் புரவி மீது அசைவற்று உட்கார்ந்து இருந்தான்.

அன்று அவன் முகத்தில் வழக்கமான புன்முறுவல் இல்லை. கொலைக் குற்றத்திற்குத் தீர்ப்பு வழங்க இருக்கும் நீதிபதியின் முகம்போல் கடுமையாய் இருந்தது.

அவனைக் கண்டதும் ரகுநாத பாண்டியன் விழித்தான் சில விநாடிகள். பிறகு சுற்றும் முற்றும் மிரள மிரளப் பார்த்தான். அவன் கண்ணெதிரிலேயே பாண்டியப் படைகள் மண்டியிட்டு வணங்கின பராந்தக பாண்டியனை நோக்கி. பரதவர் கூட்டம், உக்கிரன் கோட்டை வீரர் அனைவரும் வணங்கினர். வீர நாராயணன்தான் பாண்டிய இளவரசன் என்பதை ஜீரணிக்க முடியாத உக்கிரன் மட்டும் ஒரு விநாடி தாமதித்து மண்டியிட்டான். அடுத்த விநாடி, "வாழ்க

பராந்தகன்! வாழ்க பாண்டிய இளவரசர்!" என்ற கூச்சல்கள், இருதரத்துப் படைகளிலிருந்தும் எழுந்தன.

வீரநாராயணன் செய்த சைகையின்மேல் பாண்டிய வீரர் எழுந்திருந்து பின்னடைந்தனர். முன்னேறிப் பிரதிநிதியைக் கிழித்து எறிந்துவிடத் தீர்மானித்த வேல்முருகன் படையையும் தடுத்து நிறுத்திய இளவரசன் பராந்தகன், தனது புரவியை நகர்த்தி பிரதிநிதி யிருக்குமிடம் வந்தான். "ரகுநாத பாண்டியா! நீ வேறு யாராகவாவது இருந்தால் உன்னை இப்பொழுதே சிறைக்கு அனுப்பி விடுவேன். ஆனால் பாண்டிய வம்சத்தில் பிறந்து விட்டாய். ஆகவே வீரனாக வாழ உனக்கொரு வாய்ப்பு அளிக்கிறேன்."

ரகுநாத பாண்டியன் வெறி பிடித்த கண்களால் பராந்தகனை நோக்கினான். பிறகு ஏதும் பேசாமல் புரவி யிலிருந்து இறங்கி வாளை உருவிக் கொண்டான். வீர நாராயணனும் புரவியிலிருந்து தரையில் குதித்து வாளை உருவிக் கொண்டான். "ரகுநாதா! நீ இறக்கு முன்பு உன் குற்றங்களைச் சொல்லி விடுகிறேன். பாண்டிய மன்னர் நீதியைத் தென் பாண்டிய நாட்டில் நிலைநிறுத்த மன்னரால் நியமிக்கப்பட்ட நீதிபதி என்ற முறையில், நீலவல்லி சேரன் மகள் என்பது உனக்கு முன்னமே தெரியும். அவளை மணந்தால் உனக்குப் பொதியமலை அடிவாரப் பகுதிகளை அவள் சீதனமாகக் கொண்டு வருவாள் என்பதும் தெரியும். ஆகையால் அவளுக்கு அபயமளித்தாய். அதாவது பரதவரிடம் சரண் புகுந்த அவளை நீ ஏதும் செய்யவில்லை. அத்துடன் மன்னன் பொக்கிஷத்துக்குச் சேரவேண்டிய முத்துக்களைத் திருடினாய். மூன்றாவது அவற்றை விற்கச் சிங்களவரை



யும் அவ்வப்பொழுது அழைத்து வந்தாய். கடைசியாக, இளவரசனுக்கு நிச்சயமானவள் என்று தெரிந்திருந்தும் நீலவல்லியை உன் வசப்படுத்த முனைந்தாய். சிறையும் செய்தாய். இந்த ஒவ்வொரு குற்றத்துக்கும் மரண தண்டனை உண்டு. ஆனால் எந்த மனிதனையும் பலமுறை கொல்ல முடியாது. ஆகையால் நீ ஒரு தடவைதான் சாகப் போகிறாய், பல குற்றங்களுக்குப் பிராயச்சித்தமாக!" என்று வீரநாராயணன் பேசிக்கொண்டே இருக்கையில், ரகுநாதன் அவன் மீது பாய்ந்து விட்டான் வாளும் கையுமாக.

ஆனால் அந்த வாள் இளவரசனைத் தொடவில்லை. அவன் சட்டென்று நகர்ந்து விட்டதால் காற்றில்தான் "உஸ்" என்று சீறியது. அடுத்து நடந்ததைப் போர் என்று சொல்ல முடியாது. வீரநாராயணன் வாள், எதிரி வாள் இரண்டாம் முறை வீசப்பட்டபோது, அதை சர்வ சாதாரணமாகத் தடுத்து அகற்றிவிட்டு அவனுடைய இடது கையைத் துண்டித்தது. இன்னொரு முறை சுழன்று அவன் வலது கண்ணைக் கிளறியது. மூன்றாவது லேசாகக் கீறியது.

பத்துப் பதினைந்து விநாடிகளுக்குள் பலவிதமாக அங்கஹீனமாக்கப்பட்ட ராகுநாதன் பரிதாபமாக நின்றான். உக்கிரன் கோட்டை முன்பு ஒவ்வொரு முறை ரகுநாதனைக் காயப்படுத்திய போதும், "இது நீலவல்லி யைப் பார்ப்பதற்கு! இந்தக் கைதானே அவளைத் தொட்டது!" என்று பலபடி சொல்லிச் சொல்லி, இரண்டு கைகளையும் ஒரு கண்ணையும் நீக்கி விட்டான் பராந்தகன். அத்தகைய தண்டனையால் சுழன்று விழுந்த ரகுநாதன் கடைசியாக நகைத்தான் கோரமாக ஒரு முறை.

தனது வாளின் பிடியை நிலத்தில் பொருத்தி அதன் நுனி மீது வேகமாக விழுந்தான். வாள் அவன் இதயத்தை ஊடுருவியது. தலை தொங்கியது.

கீழே விழுந்த அவன் சடலத்தை வெறுப்புடன் பார்த்தான் வீரநாராயணன். உக்கிரனை அழைத்து அதைப் புதைக்கும்படி கூறிவிட்டு, "உக்கிரா! நீ இவன் குற்றங்களை வெளிப்படுத்த அரசாங்கத்துக்கு உதவிய தால் நீ மன்னிக்கப்பட்டாய். நான் வேறு பிரதிநிதியை அனுப்பும்வரையில் காயலையும் கவனித்துக் கொள். நீ வைத்துள்ள முத்துக்களை மதுரைப் பொக்கிஷத்துக்கு அனுப்பி விடு!" என்று உத்தரவுகளைப் பிறப்பித்து விட்டு, பரதவர்களை நோக்கித் திரும்பினான். "வேல் முருகா! கூடாரத்திலுள்ள நீலவல்லியையும் உன்னிட முள்ள அவள் தம்பியையும் நீ அழைத்துச் செல். நாளை அவர்களை நான் மதுரை அழைத்துப் போகிறேன். இன்று மாலை நீலவல்லியைச் சந்திக்கிறேன்" என்று கூறினான். அவனுக்குத் தலைவணங்கி வேல்முருகன் சென்றதும், உக்கிரன் பின்தொடர வீரநாராயணன் கோட்டைக்குள் சென்றான்.

அன்று இருள் நன்றாக மூண்டுவிட்ட நேரத்தில், பழையபடி காயலின் தோணித் துறைக்கு வந்த வீர நாராயணன், தான் வந்த தோணியில் இருந்து இறங்கி, முதல் நாள் உட்கார்ந்திருந்த மேட்டில் உட்கார்ந்து சிந்தனையில் இறங்கினான்; அவன் பக்கத்தில் பழையபடி நின்றது அவன் புரவி. "நண்பரே! நீலவல்லியின் உண்மைப் பெயர் தெரியுமா உமக்கு?" என்று வினவினான் இளவரசன். தெரியாது என்பதற்கு அடையாளமாகத் தலையாட்டினார் நண்பர். "அவள்



பெயர் வானவன் மாதேவி. சிறுவயதில் பாண்டிய மகுடம் தாங்கும்படியாக அவளை வளர்க்கச் சேர மன்னர் கரவந்தபுரம் அனுப்பினார். கருமையும் நீலமும் கலந்து ஒளிவிட்ட அவள் கண்களைக் கண்ட பரதவர் அவளை நீலவல்லி என்று அழைத்தார்கள். அந்த ஆசைப் பெயரே நிலைத்தது அவளுக்கு. எப்படியிருந்தாலென்ன? அவள் என்னைத்தான் மணக்க மறுத்துவிட்டாளே. இப்பொழுது என்ன செய்யலாம்?" என்று வினவினான், புரவியின் முகத்தைத் தடவிக் கொடுத்து.

அப்பொழுது அவன் பின்னால் இருந்து எழுந்தது நீலவல்லியின் குரல், "பைத்தியம் முற்றுகிறது!" என்று.

திரும்பிப் பாராமலே கேட்டான் வீரநாராயணன்: "யாருக்கு?"

"உங்களுக்குத்தான். எதற்கும் புரவியை என்ன யோசனை கேட்பது?" என்ற நீலவல்லி, வீரநாராயணன் அருகே வந்து உட்கார்ந்துகொண்டு, குறுக்கே தலை நீட்டிய புரவியின் முகத்தைப் பிடித்துத் தள்ளினாள்.

"நண்பரைத் தள்ளாதே!" என்றான் வீரநாராயணன்.

"ஏன், நானில்லையா?" என்று கேட்ட நீலவல்லி, அவன் தோள் மீது சாய்ந்தாள்.

அவன் அவள் முகத்தை இழுத்து அவள் கன்னத் துடன் தன் கன்னத்தை இழைத்தான். "நீதான் என்னை மணந்துகொள்ள முடியாதென்று சொல்லிவிட்டாயே!" என்று வினவினான், அவள் கன்னத்தை இழைத்து, இடையையும் ஒரு கையால் இழுத்து.

"எப்பொழுது சொன்னேன்?"

"அன்று கடற்கரையில் பாண்டிய இளவரசனை மணக்க முடியாதென்று சொல்லவில்லை?"

"சொன்னேன், அந்த துஷ்டனுக்கு இரண்டு வேடங்கள் உண்டு என்பதை அறியாததால்!" என்ற நீலவல்லி அவனுடன் இழைந்தாள்.

"உனக்கும் இரண்டு வேடங்கள் உண்டு. வானவன் மாதேவி ஒன்று, நீலவல்லி இரண்டு. உன் வாழ்க்கையும் மர்மந்தான்!" என்ற பராந்தக பாண்டியன் அவளை முன்புறத்துக்கு இழுத்துத் தன் மடியில் கிடத்தினான். அவள் உடலில் அவன் கைகள் அலைந்தன. அவள் முகத்தின் மீது குனிந்த பாண்டியன், "அடி நீலவல்லி! நீயும் நானும் அன்று துளைந்த கடலைப் போலத்தான், எத்தனையோ பொக்கிஷங்களை மறைத்து வைத்திருக்கிறாய்!" என்று அவள் காதில் இரகசியமாக ஓதினான்.

அவள் உணர்ச்சி வெள்ளத்தில் மிதந்தாள். அவள் கண்கள் மூடிக் கிடந்தன. இதழ்கள் திறந்திருந்தன. திறந்த பவள இதழ்கள் முணுமுணுத்தன. "வீரநாராயணா! வா அருகில்!" என்றாள். இதழ்கள் அதற்கு மேல் பேசவில்லை. அவன் அந்தக் கடலின் ஆழத்திலிருந்த பொக்கிஷங்களைத் தேடினான். பிறகு இருவரும் அந்த மேட்டு மண்ணிலேயே படுத்தார்கள். "அடி, சேரன் மகளே! மதுரையில் உனக்குப் பஞ்சணை காத்திருக்கிறது!" என்றான் மெதுவாக அவளை இறுக அணைத்து.

"காயலின் மண் அணை மதுரையின் பஞ்சணைக்கு எந்த விதத்தில் குறைந்தது?" என்று அவள் கேட்டாள் மெதுவாக. அடுத்து இருவர் முரட்டுத்தனமும் அதிகமாயிற்று. "ரோஜா மலருக்கு முள் தேவை. எந்த



மலருக்கும் இம்சை தேவை!" என்று உள்ளுக்குள் சொல்லிக்கொண்டாள் சேரன் மகள், அவனுடன் இணைந்த நிலையில். அவர்கள் நிலை கண்ட தாமிரபரணி ஆறு தனது அலைகளைக் கரையில் மோதிக் 'களுக்களுக்'கென்று நகைத்தது.

அவளுடன் இணைந்தபடியே சொன்னான் அவன், "நீலவல்லி! மன்னர் என்னை முத்துக் களவைப் பற்றிப் புலன் விசாரிக்க இங்கு அனுப்பினார். இடையே எனக்கு ஒரு நீலக்கல்லும் கிடைத்தது!" என்று முணுமுணுத்தான். இருவரும் பேசும் சக்தியை அறவே இழந்தனர். சொற்களின் இடத்தைப் பெருமூச்சும் முனகலும் ஆட்கொண்டன.

❖